# ட்ரங்கால்

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதல் பதிப்பு : மார்ச் 1980
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1985
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட் 1989
நான்காம் பதிப்பு : பிப்ரவரி 1996
உரிமை : ஆசிரியருக்கு

"TRUNK CALL"
by : SIVASANKARI
Fourth Edition : Feb 1996

**விலை : ரூ 27-00**

**திருமகள் நிலையம்**
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை 600 017
போன் : 4342899, **Fax : 91-44-4341559**

22854
3944788

அச்சிட்டோர் :
யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை—5

# வாசகருக்கு ஒரு கடிதம்

அன்பான வாசகருக்கு,

வணக்கம். இந்தப் புத்தகத்தில் அடங்கி இருக்கும் அத்தனை சிறுகதைகளும் தமிழகத்தின் பிரபலமான பத்திரிகைகளில் வெளியானவை தாம் என்பதால் உங்களில் சிலராவது இவைகளை ஏற்கனவே படித்திருக்கக் கூடும்.

சில அனுபவங்கள், சில சேதிகள், சில காட்சிகள் சில வார்த்தைகள், சில மனிதர்கள், சில சம்பவங்கள், என்னுள் உண்டாக்கின பாதிப்புக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள நான் முயன்றதன் விளைவுகளே இக் கதைகள்.

என் எழுத்துகளை எந்த ஒரு வாசகரும், அதன் சகஜத் தன்மையை, அன்றாட வாழ்க்கையின் பிரதிபலிப்பை, யதார்த்தத்தை உணர வேண்டும் என்பது என் ஆசை, ஏன்? அதுவே என் எழுத்தின் லட்சியம் என்று கூடச் சொல்லலாம்.

நீங்கள் இத்தொகுப்பில் உள்ள கதைகளை அப்படிப் பட்ட ஸ்வானுபவத்தோடு ஒன்றிப் படிப்பீர்கள் ஆயின், அதைவிட எனக்கு அதிக மகிழ்ச்சி தரும் விஷயம் வேறு ஏதும் இல்லை.

திருமகள் நிலையத்தின் உரிமையாளர், திரு. ராமநாதன் என் எழுத்துக்களில் தனிஈடுபாடு கொண்டவராய் இக் கதைத் தொகுப்பை அழகிய புத்தகமாய் உருவாக்கி இருக்கின்றார். அவருக்கு என் தனிப்பட்ட நன்றி.

அன்புடன்
**சிவசங்கரி**

## பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இது, லக்ஷ்மண பரதர்கள் பிறந்த நாடல்லவா? | 5 |
| 2. | 'செப்டிக்' | 21 |
| 3. | அம்மாவுக்காக ஒரு பொய் | 31 |
| 4. | உறுத்தல் | 42 |
| 5. | அதற்கு என்ன? | 52 |
| 6 | ஊனம் | 61 |
| 7. | ட்ரங்கால் | 71 |
| 8. | மதுரா | 81 |
| 9. | ஜுரம் | 90 |
| 10. | விபத்து | 103 |
| 11. | திருடன் | 115 |
| 12. | ஓர் உயிரின் விலை 10 காசு | 125 |
| 13. | காலம் ஒரு நாள் மாறும் | 134 |
| 14. | வெள்ளிக்கிழமை ராத்திரி அவள் செத்துப் போனாள் | 142 |
| 15. | சண்டை | 153 |


22854
3944788

# இது, லக்ஷ்மண பரதர்கள் பிறந்த நாடல்லவா?

நீத்யா செத்துப் போய்விட்டாள்—

என்றைக்கும் அழிவே இல்லாத நித்தியாவாய், அமோகமாய் வாழப் போகிறாள் என்ற நம்பிக்கையுடன் 'நித்யா' என்று அருமை அருமையாய் சீதா பெயர் சூட்டி மகிழ்ந்தவள் செத்துப் போய்விட்டாள்.

சீதா இந்தப் பேரிழப்பை எப்படித் தாங்குவாள்?

செத்துப் போகும் வயசா நித்யாவுக்கு?

ஒரு சின்ன பெண்ணின் காலம் இரண்டு வயசில் முடிந்து போகலாமா!

உற்றாரும் சுற்றாரும் சூழ்ந்து நின்று தோட்டத்தில் வாணவேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை மறுபடி வீட்டுககுள் நுழைந்தபோது பிணமாக இருந்தால். அதை எந்த மனித இயக்கத்தால்தான் தாங்கிக் கொள்ள முடியும்,

இது அக்கிரமமல்லவா? சீதா தன் அடி வயிற்றிலிருந்து அலறிக்கொண்டு, குமுறிக்கொண்டு, முட்டிக் கொண்டு, அபஸ்வரமாய் அவலமாய், அடிபட்டவளாய்க் கதறுவதை யாரால் நிறுத்த முடியும், இல்லை தடுக்க முடியும்?

''பாவி—நான்தான் குழந்தையைக் கொன்று விட்டேன், என் துக்கிரி ராசிதான் என் தங்கத்தைப் பலி

வாங்கிவிட்டது. என் ராஜாத்தி... நீ இல்லாத உலகத்திலே நான் மட்டும் எதுக்கும்மா வாழணும்?... நானும் உன் கூட வந்து விடுகிறேன்... காயத்ரி வந்து, ''என் குழந்தை எங்கேக்கா? உன்னை நம்பித்தானே ஒப்படைத்தேன்'னு கேட்டால், எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளை நிமிர்ந்துப் பார்ப்பேன்? செல்லத்தை இழந்த பின்பும் உயிரோடு, முழுசாய், கல்லாக நிற்கும் நான் பாவி...மஹா பாவி...ஆ...அம்மா...ஆ.''

சீதாவின் ஓலம் கேட்பவர் நெஞ்சை அறுக்கிறது. காண்பவர் கண்ணில் அவளின் அவலம் நீரைத் தருவிக்கிறது.

தெய்வம் என்று ஒன்று சத்தியமாய்த்தான் இருக்கிறதா?

அதற்குக் கருணை என்றாலும் அன்பு என்றாலும் என்ன என்று உண்மையாய்த் தெரியுமா?

ம்ஹூம்...நிச்சயமாய்த் தெரிந்திருக்காது—

இல்லையென்றால் நல்லவளான, யாருக்கும் மனசாலும் கெடுதல் நினைக்காத சீதாவை இப்படி ஓட ஓட விரட்டுமா?

□ □ □

காயத்திரி பிறக்கும்போது சீதாவுக்கு ஏழு வயசு. பிரசவக் கோளாறோ, இல்லை வேளை சரியில்லையோ தெரியாது. காயத்ரி கைக் குழந்தையாய் இருக்கும்போது அம்மா லக்ஷ்மி நோயாளியானாள். எந்நேரமும் முதுகில் வலி, காலில் வலி என்பாள். யார் யாரோ டாக்டர்கள் என்னென்னவோ வைத்தியங்கள். ஒன்றுக்கும் லக்ஷ்மியின் வியாதி மசியவில்லை. தூங்கி எழுந்திருக்கும்போதே வலியினால் முகம் சுணுங்கி இருக்கும். குழந்தையைக் கையில் தூக்கிச் சீராட்டி, பாலூட்டி, தாலாட்ட முடியாதபடி



வலியின் எரிச்சல் கோபமாய் நச்சு நச்சென்று உருவெடுக்கும்... பணத்துக்குப் பஞ்சமில்லையாதலால் ஒன்றுக்கு நாலாய் ஆட்கள்; காயத்ரியைக் கவனிக்க, சீதாவைப் பார்த்துக் கொள்ள, லட்சுமிக்குப் பணிவிடை செய்ய என்று தனித்தனியாய் ஒவ்வொன்றுக்கும் ஆட்கள்.

சீதாவின் பிஞ்சு மனசுக்கு அம்மாவின் இயலாமை எப்படித்தான் புரிந்ததோ, தங்கை காயத்ரிக்குத் தான் அக்கா மட்டுமில்லை, அம்மாவாகவும் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டவளாய், அந்த வயசிலேயே காயத்திரியிடம் அலாதி பாசத்தைப் பொழியத் தொடங்கினாள்.

அக்கா தங்கை பிணைப்பு அத்தமாய் வளர்ந்து, இறுகினது இந்த விதத்தில்தான்.

அவன் உயிர் இவளாகவும், இவன் உலகம் அவளாகவும் வாழ்ந்து வந்த காலத்தில் ஒருநாள் நல்ல மாப்பிள்ளை கண்ணில் தென்பட்டதாலும், சீதாவுக்கும் கல்யாண வயசு வந்து விட்டதாலும், ஒரு சுபயோக சுப தினத்தில் பெரியவர்களின் நல் ஆசியுடன் சீதா சந்தானத்தின் மனைவியானாள்.

சந்தானம் நல்லபிள்ளை; கம்பீரம்; படிப்பு; குணம், பணம் — எல்லாம் உண்டு. இன்னும் ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்.

சென்னைத் தொழிலதிபர் ஒருவரின் ஒரே மகன்— எதற்கும் குறைச்சல் இல்லை: ஒன்றைத் தவிர—ஆனால் அது அப்போது தெரியாமல் பிற்பாடுதானே தெரிந்தது.

திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆகியும் சீதா பிள்ளை உண்டாகாமல் இருந்தபோது, யாரும் அதைக் குறித்து வேதனை கொள்ளவில்லை. இது என்ன பழங்காலமா? வேண்டாம் என்று தடுப்பதற்கும், வந்ததைக்

கலைப்பதற்கும், வேண்டும் என்கிற பொழுது திட்டம் போட்டு அடைவதற்கும் இந்தக் காலத்தில்தான் வழிகள் ஆயிரம் உண்டே என்று எல்லாரும் எண்ணியதால் ஃபாமிலி பிளானிங் போலிருக்கிறது என்று வாளாவிருந்தார்கள்.

ஆனால் மேற்கொண்டு வருஷங்கள் மூன்றானபோது முணுமுணுப்புகளும் கரிசனக் கேள்விகளும் மெல்லத் தலையைத் தூக்கின.

''எல்லாம் சரியாய் இருக்கிறதல்லவா?''

''ஏன் இப்படி?—ஐந்து வருஷங்களா வேண்டாம் என்று இருப்பார்கள்?''—

''அசட்டுத்தனமாய் இருக்காதீர்கள்; அதது காலா காலத்தில் பிறந்தால்தான் அழகு''—

''டாக்டரைப் பார்க்கலாமா?''

''குருவாயூரப்பன் கலியில் ப்ரத்யட்ச தெய்வம்—அண்டாவில் பாயஸம் வைக்கிறேன்; குழந்தைக்குத் துலா பாரம் போடுகிறேன் என்று வேண்டிக்கொள்ளுங்கள். பத்தாவது மாசம் பலன் இருக்கிறதா, இல்லையா, பாருங்கள்.''

பத்தாவது மாசம் என்ன, இருபதாவது மாசம் கூட ஓடிவிட்டது.

நகரின் சிறந்த லேடி டாக்டர், டி. அண்ட். ஸி; ட்யூப் டெஸ்டிங், அது, இது என்று எல்லாம் செய்த பின்பும் எதுக்கும் பலன் இல்லை என்றாகி, டாக்டர், குருவாயூரப்பன் எல்லோரும் ஏமாளிப்பட்டம் வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் மிச்சம்.



சீதாவுக்குக் கல்யாணமான எட்டாம் வருஷம் பருவத்தின் வாயிலில் நின்ற காயத்ரி, மிஸஸ்கிரிதரன் ஆனாள்.

கிரிதரன் டெல்லியில் பெரிய அரசாங்க உத்தியோகஸ்தன்; பண்பானவன்—படித்தவன்.

அக்காவைப் போல அல்லாமல், திருமணமான வருஷமே காயத்திரி உண்டானபோது, குடும்பத்தில் கூத்தாடிய மகிழ்ச்சியை வர்ணிக்கவா வேண்டும்?

தடபுடலாய் வளைகாப்பு. சீமந்தம் எல்லாம் வரிசையாய் நடந்தன. அக்காவுக்கு அக்காவாய், அம்மாவுக்கு அம்மாவாய் சீதாதான் ஓடி ஓடி அத்தனையும் நடத்தி வைத்தாள்.

சாதாரணமாகவே தங்கைமேல் தூசிபட மனம் பொறுக்க மாட்டாள். இப்போது கேட்க வேண்டுமா? மென்மையான பூவை உள்ளங்கையில் ஏந்திப் பாதுகாப்பது போல காயத்திரியைப் பராமரித்தாள் சீதா.

நல்ல தினுசில் ப்ரஸவம் ஆனது.

'குழந்தைக்கு அக்காதான் பேர் வைக்கணும்—' என்று காயத்ரி விரும்பியதால் நாலையும் யோசனை செய்து, என்றென்றும் தீர்க்காயுசுடன் வாழும் நித்யாவாக இவள் இருக்கட்டும் என்று நாமகரணம் செய்தாள் சீதா.

மாசங்கள் இரண்டு முழுசாய் ஆனதும் குழந்தையுடன் காயத்ரி டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றாள். தனிமையில் சீதா ரொம்பவும் தவித்துப் போனதைத் தாங்க மாட்டாத சந்தானம், யாரோ சொல்லி, யாரோ தூண்ட டாக்டரை அணுகித் தன்னையும் பரிசோதனை செய்யச் சொன்னான்.

சந்தானம்— பெயரில்தான் சந்தானம், மற்றபடி வாழ்க்கையில் சந்தான பாக்கியத்தை மனைவிக்குத் தர யோக்கியத்தை இல்லாதவன் என்று ஆணி அறைந்த மாதிரி வைத்திய ரிப்போர்ட் வாக்குமூலம் தந்தது.

சின்ன வயசிலிருந்த குழந்தைகள் என்றால் தனிப் பாசம் பீறிட, தன் ஸ்வபாவத்தை வளர்தத்துக் கொண்டிருந்த சீதாவால் இந்த உண்மையைத் தாங்க இயலாது போயிற்று ஆயினும் வாய்விட்டு அழுதால் கணவர் தன் குறையை உணர்ந்து, வேதனைப்படுவாரோ எனப்பயந்து வாயையும் நெஞ்சையும் இறுக்கமாக மூடிக்கொண்டாள்.

''குழந்தை பிறக்காவிட்டால் என்ன? நாம் ஒருவருக்கொருவர் இருக்கிறோமே போதாதா?''

''குழந்தை பிறப்பது அதிசயமல்ல; குழந்தை இல்லாமல் இருப்பதுதான் அபூர்வம்—நாம் ஆயிரத்தில் ஒரு தம்பதியாகவே இருந்து விட்டுப் போகலாம்''

''நமக்கொன்று ஒரு வாரிசு இருந்து விட்டால் நம் சொத்து முழுவதையும் அந்தக் குழந்தைக்கேதான் சேர்க்கத் தோன்றும். ஆனால், இப்போது ஊர் அனாதைக் குழந்தைகள் அத்தனையும் நம்முடையவைதானே! பத்துக் குழந்தைகளைப் படிக்க வைக்கலாம், பத்துப் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணலாம்; பத்து வியாதிகாரப் பையன்களுக்கு வைத்தியம் பார்க்கலாம்—ஏ! அப்பா! எத்தனை உதவி செய்யலாம்!—''

கணவனுக்கெதிரில் என்னென்னமோ சமாதானங்கள் பேசினாலும், தனிமையில் தன் நெஞ்சின் புண்ணை மறைக்க சீதா தவித்துப் போனாள்.

இரவில் கணவனுக்குக் கேட்காமல் தலையணையில் முகம் பதித்து அழுவாள். பாத்ரூமுக்குள் சென்று கதவைத்



தாளிட்டுக் கொண்டு விம்மிப் புலம்புவாள். இல்லை என்றால் தோட்டத்தில், மாடியில், தனியாய் அமர்ந்து, மரமாய், கட்டையாய் உறைந்து தன் குறையை எண்ணி மனசுக்குள் மருகுவாள்

அப்படி ஒரு பலவீனமான இரவில்தான், மொட்டை மாடியில் தனித்து நின்று விம்மலை அடக்க முயன்ற போதுதான், நித்யாவின் ஆண்டு நிறைவுக்காக வந்திருந்த காயத்ரி, அக்காவை மடக்கி இவளுக்குள் தாண்டவமாடிக் கொண்டிருந்த உரிமை வெளிக்கொணர்ந்து விட்டாள்.

''எனக்குக் குழந்தை வேணும் என்கிற ஆசையை நான் குழி வெட்டிப் போட்டு மூடவேண்டும் காயத்ரி... இந்த ஜன்மத்தில் அதற்கு இனி இடமே இல்லை...என்று ஆன பிறகு, நான் வேறு என்ன செய்ய முடியும்?...தப்பு என் பேரில் இருந்திருந்தால் நான் அதை சந்தோஷமாய் ஏத்துக் கொண்டு இருப்பேன்...ஆனால்...எங்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்லாமல் போனதற்கு இவர் காரணம் என்று நினைக்கிற போதுதான் மனசு ஆடிப் போகிறது—நான் என்ன செய்வேன்—காயத்ரி...? பிறக்காத குழந்தைக்காக என்மனசு ஏன் இப்படி ஏங்குகிறது? அதை வெறுக்கக் கற்றுக்கொண்டு விட்டால் வேதனை எதுவுமே இல்லை, அல்லவா? நானும், இவர் முன் வேஷம் போடத் தெரியவில்லை அல்லவா?...குழந்தையைத் தராத கடவுள், அதை நினைத்துப் பரிதவிக்காத கல் மனசாவது கொடுக்கக் கூடாதா? என் மனசுக்குப் பலம் வேணும், தைரியம் வேணும்—ஒன்றுமே இல்லை—என்னால் தாங்க முடியலை காயத்ரி. நான் பெண்ணாய் பிறந்ததற்கு அர்த்தமேயில்லம்மா... நான் பிறந்திருக்கவே கூடாது...

சந்தானத்தின் இயலாமையை யாருக்கும் சொல்லாமல் சீதா இருந்ததால், காயத்ரி உண்மை தெரிந்த போது நிலைகுலைந்து போனாள்.

அக்கா...அக்கா...என்று இதயத்துள் மருகினாள், உருகினாள். அதிர்ந்து போனாள்.

வாய் வார்த்தையாக ஒன்றுமே பேசவில்லை. தான் பேசும் ஒவ்வொரு பரிவான வார்த்தையும் அக்காவின் மனசை இன்னும் பலவீனப்படுத்தி விடும் என்ற பயத்தில் வாயைத் திறக்கவேயில்லை.

ஆனால் அன்றிரவே கணவனுடன் இதுபற்றிப் பேசினாள்.

''சீதாக்காவுக்கு ஏன் இப்படியொரு சோதனை? அவள் இந்த வேதனையோடு வாழ்க்கை நடத்துவதை என்னால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது'' என்று அவன் மடியில் படுத்துக் கொண்டு குமுறிய காயத்ரி, நீண்ட நேரம் யோசனை செய்து ஒரு முடிவை வெளிப்படுத்தியபோது, மறு பேச்சில்லாமல் அதை ஏற்றுக் கொண்டான் கிரிதரன்.

ஒரு வயசு நிரம்பிய பெண்ணை மறுநாள் காலை அக்காவின் கையில் கொடுத்து, ''இனி இவளுக்கு நீதான் அம்மா, அத்திம்பேர்தான் அப்பா—நான் சித்தி; இவர் சித்தப்பா''—என்று சிரித்துக் கொண்டே சொன்னதை அவளால் நம்பமுடியவில்லை.

அம்மாவா? நானா? இந்த ராஜாத்திக்கா? இது சாத்தியமா?—

மனசுக்குள் என்னென்னவோ கேள்விகள் புரண்டு எழுந்தாலும் ஒன்றை மட்டும் தங்கையிடம் கேட்டாள் சீதா—

''இது நியாயமா காத்யரி? ஏதோ பலவீனமான கருத்தில், என் மனசின் குறையை உன்னிடம் சொல்லி நேற்று அழுதேன் என்பதற்காக, நித்யாவை என் பெண்ணாக்குகிறாயே, இது சரியம்மா?''



அவளது வாதத்தை காயத்ரி காதில் வாங்கவில்லை.

''எப்போதோ உன்னிடம் நான் இவளை கொடுத்திருக்க வேண்டும். அக்கா—காலம் தாழ்ந்து நான் செய்திருக்கும் செய்கைக்கும் நேற்று அழுததற்கும் சம்பந்தம் இல்லை இவள் உனக்காகப் பிறந்தவள்தான்.

—எனக்கு நான் வேறு குழந்தையைப் பெற்றுக் கொண்டால் போயிற்று—இவள் உன்னுடையவள்தான். அக்கா, இனி இதைப்பற்றிப் பேசாதே—நான் இவளைப் பெற்றேன் என்பதை மறந்து விடு''—காயத்திரி நிறைந்த மனசுடன் பேசி, கணவனுடன் ஊருக்குச் சென்றாள்.

சீதா மறந்துதான் போனாள்—

அது என்ன வாழ்வு? அது என்ன இனிமை? தொட்ட இடமெல்லாம், நினைத்த நினைப்பெல்லாம், கண்ட காட்சியெல்லாம் அப்படிக்கூட இனிக்குமா என்ன? பரவசம் தருமா என்ன?

சந்தானமும் சீதாவும் தங்கள் உலகத்தை நித்யாவைச் சுற்றிப் பின்னிக் கொண்டார்கள். நித்யா தூங்கும் போது தூங்கி, அவள் விளையாடும்போது விளையாடி, உண்ணும்போது உண்டு, சிரிக்கும்போது சிரித்து, அழும் போது அழுது, அந்தச் சின்னக் குழந்தைக்காகவே வாழத் தொடங்கிவிட்டார்கள்.

தங்கையின் சீமந்தப் புத்திரியைத் தன் சொத்தாக்கிக் கொண்டு விட்டோமே என்ற ஒரு குற்ற உணர்ச்சி சீதாவினுள் நெருடும்—ஆனால் அதுவும் ஒரு வருஷ காலத்துக்குள் சொன்னபடியே மறுபடியும் காயத்ரி உண்டானதில், மாயமாய் மறைந்து போனது.

கணவனை விட்டுப் பிரிந்து பிரசவத்துக்குக் காயத்ரி வர விரும்பாததால், பிள்ளை பெறும் நாள் கிட்டத்தில்

வரும் முன், சீதா நித்யாவுடன் டெல்லிக்குப் போய் விடுவது என்று இவர்கள் தீர்மானித்திருந்ததற்கு மாறாகக் குறிப்பிட்ட நாளுக்கு இரண்டு வாரங்கள் முன்பே திடுதிப்பென்று காயத்ரி, பிள்ளை ஒன்றுக்குத் தாயாகி விட்ட சேதி போன் மூலம் தெரிந்தது.

சமாசாரத்தைக் கேள்விப்பட்ட க்ஷணமே ஓடிச் சென்று தங்கையையும் பிள்ளையையும் பார்க்க சீதா துடித்தாலும், நினைத்தது நடக்கமுடியாதபடி தீபாவளிப் பண்டிகை குறுக்கே நின்றது.

''தீபாவளிப் பண்டிகைக்கு உறவுக்காரர்களை அழைத்திருக்கிறோம். துணிமணிகள் எடுக்க, பட்சணங்கள் பண்ண, எல்லாவற்றுக்கும் நீ இல்லாவிட்டால் எப்படி? அவள் மாமியார்தான் கூட இருக்கிறாளே—நீ சற்றுப் பொறுத்துப் போனால் என்ன?''—

மாமியாரின் பேச்சை மீறிக் கொண்டு சீதாவுக்குப் போக முடியவில்லை.

தீபாவளித் திருநாள்—

நாடெங்கும் மகிழ்ச்சியில் திளைத்து, மூழ்கிச் சிரித்துக் குலுங்கி, ஆடிப் பாடிக் களிக்கும் பண்டிகை நாள்.

காலையில் எழுந்து எண்ணெய் ஸ்நானம் செய்து, புத்தாடை உடுத்தி பலகாரங்கள் உண்டார்கள்.

வானவில்லைப் போன்ற வர்ண ஜாலத்துடன் ஜொலிக்கும் வாழ்வைத் தந்த கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா? பணிந்து, வணங்கி அவன் அருளை நினைத்து மனம் கசிய வேண்டாமா?



சீதாவும் சந்தானமும் விடியற்காலையில் கோவிலுக்குப் புறப்பட்டார்கள்.

மற்ற உறவுக் குழந்தைகள் வீடு நிறைய இருந்ததால் நித்யா கோவிலுக்கு வர மறுத்து விட்டாள் ஒன்றுக்கு நாலாய் ஆட்களை அழைத்து, குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுச் சென்று திரும்பி வருவதற்குள் எல்லாமே முடிந்து விட்டது.

பாட்டில் வாணங்களை ஒன்றன் பின் ஒன்றாக விட்டுக் கொண்டிருந்தார்களாம். சீசாவிலிருந்து புஸ்ஸ் என்று சீறிக் கிளம்பி, மேலே, வானத்தில் பூவாய்க் கொட்டிய வாணத்தை அத்தனை பேர்களும் நின்று பார்த்துக் களித்துக் கொண்டிருந்தார்களாம் — பையன் ஒருவன் வாணம் கொளுத்தும் அவசரத்தில் பாட்டிலில் செங்குத்தாய் அதை நிறுத்தாமல் சற்றே சாய்த்துவைத்து ஏற்றியிருக்கிறான் யாரும் அந்தக் குறையைக் கவனிக்கவில்லை. நேராக வானத்தை நோக்கிக்கிளம்பாதவாணம் சர்ர் என்று பக்கவாட்டில் பறந்து, அத்தனை பேர்கள் இருந்த கூட்டத்தில்—பத்து, இருபது, முப்பது பேர்கள் இருந்த கூட்டத்தில் சின்னக் குழந்தையாம், அழகிய தளிராய், அன்றலர்ந்த மலராய், சீதா சந்தானத்தின் உலகமாய் வாழ்ந்துவரும் நித்யாவை நோக்கிப் பாய்ந்து, பாவாடைக்குள் புகுந்து, அங்கேயே வட்டமடித்து, புது துணியைப் பற்ற வைத்து, குழந்தையின் பட்டுக் கால்களை பொசுக்கி — போதுமா? இன்னும் விவரிக்க வேண்டுமா? ஐந்து நிமிஷத்துக்குள், தீப்பந்தமாய், ஜ்வாலையுடன் நித்யா எரியத் தொடங்க, சுற்றியிருந்தவர்கள் பாய்ந்து அணைத்து, உருட்டி, புரட்டி தீயை அணைப்பதற்குள், அந்த ஐந்தே ஐந்து நிமிஷத்துக்குள் எல்லாமே முடிந்து விட்டது.

டாக்டருக்கு ஒரு கார், கோவிலுக்கு ஒரு கார்—என்ன பறந்து என்ன?

அதிர்ச்சியினால் ஏற்பட்ட சாவாம்; ஏதொரு வைத்தியம் செய்ய இடமில்லாமல், இதயம் அதிர்ந்து நின்றுவிட்டதால் உண்டான சாவாம்.

காயத்ரிக்குத் தகவல் போய் விட்டது.

பச்சை மண்ணுடனும் கணவன் கிரிதரனுடனும் விமானத்தில் டெல்லியிலிருந்து பறந்து வருகிறாளாம்.

'எதுவும் செய்து விடாதீர்கள் —நாங்கள் வந்தபிறகு காரியங்களைக் கவனிக்கலாம்'—

டெலிபோன் செய்தி வந்து விட்டது.

நித்யாவின் பிணத்தை மடியில் கிடத்திக் கொண்டு ஓலமிட்ட சீதா அடங்கி விட்டாள்.

கண்களில் சூன்யம்—

பார்வை குத்திட்டு மகளின் முகத்திலேயே நிற்கிறது.

பேச்சு இல்லை, அழுகை இல்லை — ஒன்றும் இல்லை—

என்னாயிற்று?

கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை-இந்த உலகத்தில் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையில் உணர்வு இல்லை.

என்னாயிற்று?

வாசலில் கார் சப்தம்—

கேட்டிலும் நடையிலும் உள்ள ஜனங்களின் பரபரப்பிலிருந்து காயத்திரி வந்துவிட்டது தெரிகிறது.



கூடத்தில் நுழைகிறாள் காயத்ரி.

கையில் சின்ன துணி மூட்டையாய் குழந்தை—

அவளைத் தாங்கிப் பிடித்த கிரி.

இது நாழிகை ஜடமாய் இருந்த சீதாவிடம் சலனம். தங்கையை நிமிர்ந்து பார்க்கிறாள். "இந்தப் பாவியை மன்னிப்பாயாம்மா?" என்று பயங்கரமாய், பரிதாபமாய் வீறிட்டுக் கத்தியவள், மடியில் இருந்த குழந்தைமேலேயே மயங்கிச் சாய்கிறாள்.

அக்காளைத் தாங்கிக் கொண்ட காயத்ரியின் கண்களில் சரம் சரமாய்க் கண்ணீர்.

"அக்கா... அக்கா..."

யாரோ தண்ணீர் தெளிக்கிறார்கள்; யாரோ விசுறுகிறார்கள்.

கண்களைத் திறந்து மலங்க மலங்கப் பார்க்கிறாள் சீதா.

சட்டென்று எழுந்து தன்னைப் பிடித்திருப்பவர்களைத் தள்ளுகிறாள்.

"என்னத்துக்காக இப்படிக் கூட்டம் போடுகிறீர்கள்? என் ராஜாத்திக்குக் காத்து வராமல் வேர்க்கிறது...ம்... தள்ளுங்கள்...நீ தூங்கும்மா நித்யா கண்ணு தூங்கு..."

மடியில் உள்ள குழந்தையை தட்டித் தூங்க வைக்க முயலுவதைக் காண்பவர்களுக்குத் துக்கம் தாளமாட்டாமல் போகிறது.

என்னாயிற்று?

சித்தப் பிரமையா?

பைத்தியமா?

மௌனம்—

எத்தனை நாழிகை இப்படி மௌனமாக இருப்பது? காரியம் ஆகவேண்டாமா?

பெரியவர்கள் கூடிப் பேசுகிறார்கள். மேற்கொண்டு நடக்க வேண்டியதை ஏற்பாடு பண்ணிவிட்டுச்சீதாவிடம் வருகிறார்கள்.

''சீதா கொழந்தையைக் கொடம்மா—நாழியாகிறது...பார்...ம்...மனசைத் தேற்றிக்கொள்—''

சீதாவின் கையை விலக்கி நித்யாவின் சடலத்தை சந்தானம் எடுக்கும் நாழிகையில் வெறிகொண்டு கத்துகிறாள் அவள்—

''என் குழந்தை...என் நித்யா...அவளைக் கொடுக்க மாட்டேன்...என் தங்கம் தூங்குகிறாள்; எழுப்ப வேண்டாம். எல்லாரும் தள்ளுங்கள்''—

சீத்தாவின் ஆக்ரோஷமான கத்தலையும் கண்களின் உருட்டலையும் கேட்பவர்கள், கண்டவர்கள் நடுநடுங்கிப் போகிறார்கள்.

என்ன செய்ய வேண்டும்?

நித்தியாவுடன், சீதாவையும் இழக்க வேண்டியதுதானா?

அக்காவுக்குப் புத்தி பேதலித்து விட்டதா? இது சாஸ்வதமானதா? இல்லை தற்காலிகமானதா?

கிரிதரன் காயத்ரியைப் பார்க்கிறான். காயத்ரி அக்காவை நோக்குகிறாள்.



ஒரு கணம்—ஆமாம், ஒரே கணம்தான்—

தாய்க்குத் தாயாய் இருந்து தன்னைச் சின்ன வயசிலிருந்து பேணும் அக்காவின் மன நிம்மதியைக்காட்டிலும் தனக்கு வேறு எதுவும் முக்கியம் இல்லை என்று உணர்ந்த காயத்ரி—''அக்கா, இந்தா! நீ இந்தப் பிள்ளையைப் பிடி—நான் நித்யாவை எடுத்துக் கொள்கிறேன்—அவளை விடுக்கா—அவள் நிம்மதியாய்த் தூங்க வேண்டாமா?... இவனைப் பிடி...ம்...மடியைக் காட்டு...''

சிணுங்கி அழும் பிள்ளையை அக்காவின் மடியில் காயத்ரி இட்ட நிமிஷத்தில் கிரிதரன், நித்யாவின் சடலத்தை அகற்றுகிறான். குழந்தையின் அழுகைசட்டென்று பெரியதாகி அந்தக் கூடத்தை நிறைக்கிறது தாய்மை உணர்வு பீறிட, பிள்ளையை மார்போடு அணைத்துக் கொள்கிறாள் சீதா—

''ஆகட்டும்—சுருக்க காரியத்தைக்க வனியுங்கள்—ம்'' மெதுவாய், ஆனால் தீர்மானமாய் பேசிய கிரிதரன், சந்தானத்தைக் கிளப்பிக்கொண்டு மற்ற முக்கிய உறவினர்களுடன் நித்யாவின் கடைசி காரியத்தைக் கவனிக்க எழுகிறான்.

''உன் பிள்ளை அழறான்—சமாதானப்படுத்துக்கா... என்ன நீ சும்மா இருக்கிறாய்?...அக்கா...உன் பிள்ளையைக் குனிந்து பாரேன்...''

பெண்ணைப் பறிகொடுத்த காயத்தை ஆற்றும் மருந்தாகத் தன் பிள்ளையை அக்காவுக்கே அர்ப்பணித்து விட்டு நகர்ந்து கொள்ளும் காயத்திரியைக் கண்டு, அங்குக் கூடியுள்ள மனிதக் கூட்டம் அழுகிறது; அதிசயிக்கிறது.

சீதாவுக்குச் சந்தான பாக்கியம் இல்லை என்றுபுரிந்து கொண்டதும் தனக்குத் தாயாக இருந்து வளர்த்து ஆளாக்கிய அக்காவுக்குத் தன் மூத்த மகளை அளித்தாளே

அது கூட பெரிசில்லை; ஆனால் இப்போது மகளைப் பறிகொடுத்த நிலையில் பைத்தியம் பிடித்து வாழ்க்கை மண் மேடாக மாறும் தவிப்பில் அக்கா இருப்பதை உணர்ந்து, தான் இரண்டாவதாகப் பெற்ற பச்சை மண்ணையும் அவள் மடியில் கிடத்தி, ''இதோ உன் புள்ளை' என்று காயத்ரி ஆறுதல் அளித்து விட்டாளே இதுரொம்ப ரொம்ப மகத்தான காரியம் இல்லையா?

இந்தப் பெண் காயத்ரி மனிதமனம் படைத்தவள் தானா? சாதாரணப் பெண் ஒருத்தியால்கூட, பிறந்த பிறப்புக்காக இப்படியொரு தியாகத்தைச் செய்வது சாத்தியம்தானா?

ஏன் சாத்தியமில்லை?

இது யார் பிறந்த மண்?

அந்த லக்ஷ்மண பரதர்கள் ஜனித்த மண் அல்லவா? பின், காயத்திரிக்கு மட்டும் ஏன் இது சாத்தியமாகாது?

# 'செப்டிக்'

ஐயா வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து, தன் முன் பரத்தி இருந்த நிலைக்கடலைகளிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து 'நச் நச்' சென்று தரையில் உடைத்துப் பருப்புகளை முறத்தில் போட்டாள் தனபாக்கியம். மரகதபுரத்து அக்ரஹாரத்தில் இருந்த எல்லா வீடுகளுமே அவளுக்கும் அந்தச் சேரி மக்களுக்கும் அய்யர் ஊடுகள் தாம். பெரிய அய்யரு, சின்ன அய்யரு, மாடிவூட்டு அய்யரு, கோவில் பூசாரி அய்யரு, கோடிவூட்டு அய்யரு,— என்று அக்ரஹாரத்தின் பத்து வீட்டுக்கும் அவர்கள் பெயர் வைத்திருந்தார்கள் ஐய்யங்கார் ராமச்சந்திரன் கூட நாமம் போட்ட, சிவந்த அய்யருதான்—மரகதபுரத்தில் எண்ணி இரண்டே இரண்டு தெருக்கள்—ஒன்று அக்ரஹாரம், மற்றது ரெட்டியார் தெரு — சிவன் கோவில் ஊருக்குப் பொது— ஊருக்குத் தள்ளி ஓடிய பெண்ணாறுக்குக் கிழக்குப் பக்கம் கிராமச் சேரி— அதன் அருகில், வெட்ட வெளியில் மதுரை வீரன் கோவில்.

குந்தி உட்கார்ந்து மளமள வென்று நிலக்கடலை பயிர்களைச் சேகரித்துக் கொண்டிருந்த தனபாக்கியம் பக்கத்தில் நிழலாடியதால் தலை நிமிர்ந்தாள்—

அவள் மகள் மல்லிகா...

''இன்னடி—ஒடப்பு தேவலையா?...சுடு தண்ணி வைச்சிருந்தேனே—மேலுக்கு ஊத்திக்கினயா?''—

''ம்—''

மல்லிகா முக்கி முனகிக் கொண்டு தாயின் அருகில் உட்கார்ந்தாள்— நிரம்பி வழிந்த கர்ப்பத்தின் காரணமாய்க் குந்தி உட்காராமல் சப்பணமிட்டுச் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

வயித்துக்குள் ஏதோ வேதனை இருப்பதைச் சோர்ந்திருந்த முகம் காட்டியது.

''இன்னாத்துக்கு இப்படி வெயில் நேரத்துலே இங்கே வந்தே? ஊட்லே படுத்துக் கெடக்கிறது தானே? கேப்பக் கஞ்சி வச்சிருந்தேனே, குடிச்சியா?''—

தனபாக்கியத்தின் மூத்த மகள் மல்லிகா. அடுத்த கிராமமான சாலமேட்டில் பயிர்த் தொழில் செய்யும் தம்பிக்கே மகளைக்கொடுத்து, நாலில் இரண்டில்பாத்துக் கொள்ளுபவள். தலைச்சன் ப்ரசவம் என்பதால் இங்கு மரகத புரத்துக்கு மகளைக் கூட்டி வந்து பத்து நாட்களாகின்றன. மல்லிகாவின் கணக்குப்படிப் பார்த்தால் இன்னும் ஒரு வாரத்தில் பிரசவமாக வேண்டும். என்றாலும் முதல் நாள் இரவிலிருந்து 'இடுப்பைக் கடுக்கிறது என்று மகள் சொன்னதால் பிரசவம் சுருக்க ஆகிவிடலாம் என்றே தனபாக்கியம் நம்பினாள்—

தாய் உடைத்துப் போட்டிருந்த பயிறில் நாலு எடுத்து வாயில் போட்டு மென்றாள் மல்லிகா—

'சும்மா எத்தினிநாழி படுத்துக்கெடக்கிறது? ஒடம்பு? திமிறெடுத்துப் போவும்—கொஞ்சம் இப்படி அப்படிப் போயுட்டு வா'னு சாரம்மா சொல்லிச்சு; வந்தேன்... ஆமா, இன்னாத்துக்கு மல்லாட்ட உரிக்கிறே?''—

''அம்மாளோட தங்காச்சி பட்டணத்துக்குப் பிரசவத்துக்கு வந்திருக்கில்ல —அதுக்கு மல்லாட்ட பயிறு உருண்டையினா புடிக்குமாங்காட்டியும்... இன்னிக்கு அய்யரு பட்டணம் போறாரில்லே... அம்மா கொடுத்தனுப்பப் போறாங்க...அதான் உரிக்கிறேன்...''

யாருடன் தனபாக்கியம் பேசுகிறாள் என்பதுபோல சமையல்கட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் பங்கஜம்—அந்த வீட்டு எஜமானி.

'ஆருடி அங்கே, தனபாக்கியம்?''



'எம்மவ தாம்மா'—

பாட்டிலில் மோரை விட்டுக் குலுக்கி வெண்ணெய் எடுத்த வண்ணம் பங்கஜம் வெளித் தாழ்வாரத்துக்கு வந்தாள்.

''ஆரு? மல்லிகாவா? என்னடி நேத்து ராத்திரி இடுப்பு வலிக்கறதுன்னு சொன்னயாமே;—பேசாமே படுத்துண்டு இருக்காம, ஏண்டி அல்லாடறே?''

''இன்னவோ தெரியலம்மா— மொணை மொணனு வலிக்குது. ஒக்கார முடியல, படுக்க முடியல... ரோதனைங்க—''

''அப்படித்தாணடி—இருக்கும்—உசிரேன்னா சொமக்கறே? வயிறுக் கூட்டி குமிஞ்சுண்டு இறங்கிடுத்து... சுருக்கா பிரசவம் ஆயிடும். கவலைப்படாதே...''

உள்ளே போன ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் ஒரு அலுமினிய தம்பளருடன் வந்தாள் பங்கஜம்.

''சூடா காப்பி கலந்திருக்கேன்—குடி — செத்த தெம்பா இருக்கும்'' என்று சொல்லி தம்ளரை மகளிடம் வைத்து விட்டு, ''ஆச்சாடி தனம்? நாழியாறது—அடுப்ப மூட்டி சட்டிலே மணலை போடு—ஐயா இதோ கிளம்பிடுவார்' என்று தனத்திடம் சொன்னாள்.

தனபாக்கியம் எழுந்தாள், இன்னொரு பக்கமாகக் கிடந்த இரும்பு அடுப்பில் விறகை நுழைத்து தீ மூட்டி, வாணலியில் நைஸ் மணலை இட்டு அடுப்பில்ஏற்றினாள். சூடு வந்ததும் உரித்த பயறுகளை மணலில் கலந்து வறுக்கத் தொடங்கினாள்.

தனபாக்கியம் வறுத்துக்கொட்டிய மணலைச் சலித்து கடலைகளை எடுக்க, பங்கஜம் சல்லடையும் கையுமாய் அருகில் உட்கார்ந்தாள்.

'சீதாவுக்குக் கடலை உருண்டைனா உசிரு—ஒண்ணு எடுத்து தின்ன நான் பார்த்ததில்லை. நல்வாலா எடுத்து வைச்சிண்டு, புஸ்தகம் படிச்சுண்டே திம்பா...பின்னை

யாண்டு இருக்கிற பொண்ணுக்கு தினுசு தினுசா பண்ணி கொடுப்பம்னா எங்கேமுடிஞ்சுது? வடக்கே கண்காணாத தேசத்திலே இருந்தவ, பட்டணத்துக்கு வந்து ரெண்டு நாள்தானே ஆறது? உபரி பால் வாங்கிக் கொஞ்சம் திரட்டுப்பால் காச்சினேன்...பத்து மனோப்பூ பிழிஞ்சேன்...கடலை உருண்டை பிடிக்கத்தான் நேரமிருக்கும்... வேற என்னத்தைக் கொடுத்தனுப்பறது? வயக்காட்டிலேந்து இவர் திரும்பி வந்து சாபடுட்டு பொறப்படறதுக்குள்ளே எல்லாம் தயாராகணும்...இல்லைன்னா கால்லே வெந்நீரைக் கொட்டிண்ட மாதிரி குதிப்பார்...''

அருமை தங்கைக்கு வகையாய் மசக்கைப் பட்சணம் அனுப்பத் திட்டமிட்ட பங்கஜம், ஏதோ நினைத்துக் கொண்டவளாய் தனபாக்கியத்திடம், 'ஏண்டி தனம்... நேத்திலேந்து இவளுக்கு வலிக்கறதுங்கறயே... டவுனுக்கு வேணா கூட்டிண்டு போய், லேடி டாக்டர் கிட்டே எல்லாம் சரியா இருக்கான்னுகேட்டுண்டு வாயேண்டி—'' என்றாள்.

''ஆங்... இன்னாத்துக்கு லேடி டாக்டரு?'' நா ஆறு பெறலியா? என்னா பெரிய ப்ரஸவம்? வயக்காட்டிலே வேல பண்ணிகிட்டே இருப்பேன் — இடுப்பு வலிக்கும்; சித்த ஒக்காறுவேன் புள்ள பொறந்துடும்...இதுக்கு என்னாத்துக்கு டாக்டரு? அப்டி வோணும்னா எங்க மருத்துவச்சி இருக்காள்லே...அவ பாத்துப்பா...''

''இப்போ காலம் மாறிண்டு வரதுடி தனம்—நீயும் நானும் பிள்ளை பெத்த மாதிரி இல்லே இப்போ... பெரிய படிப்பு படிச்ச டாக்டர். அவஸ்தை படாத பிரஸவம் எல்லாம் வந்துடுச்சு... என்னவோ நான் சொல்றதைச் சொன்னேன்...அப்புறம் உன் இஷ்டம்...''

இவளோடு பேசிப் புண்ணியமில்லை என்பதை உணர்ந்த பங்கஜம், சலித்த கடலைகளை அமுக்கித் தேய்த்து தொலிகளை எடுத்த பின், ''மளமளன்னு



பொடைச்சி உள்ளே கொண்டுவா. நான் போய் பாகு வைக்கிறேன்'' என்று சொல்லி உள்ளே போனாள்.

அன்று மாலை ஆறரை மணி இருக்கும். மல்லிகாவுக்கு வலி எடுக்கத் தொடங்கியது.

நச்சுவலி பெரிய வலியானதும் அண்டாவில் வெந்நீரைப் போட்டு, பழந்துணி கொஞ்சம் எடுத்து வைத்து, மதுரை வீரனைப் பிரார்த்தித்து மகளின் நெற்றியில் விபூதியை இட்டாள் தனபாக்கியம்.

வலி கண்டு நன்றாய் ஒரு முக்கு முக்கினால் பிள்ளை பிறந்துவிடும் அனுபவத்தைப் பெற்றிருந்த அவள், மணி ஒன்பதை நெருங்கியும் மகளுக்கு முக்குவலி எடுக்காமல் போகவே தம்பியை அனுப்பிச் சேரி மருத்துவச்சியை அழைத்துவரச் செய்தாள்.

''இன்னாடி மவளே, ராயஸமாடறே?'' என்று ஆம்பிளைக் குரலில் கேட்ட வண்ணம் கால்மணி நேரத்தில் மருத்துவச்சி உள்ளே நுழைந்தாள்

அவளுக்குப் பேர்தான் மருத்துவச்சியே தவிரவும், முறையாக ஏதொரு பயிற்சியோ, இல்லை, விஷய ஞானமோ அந்தப் பெண்மணிக்குக் கிடையாது. என்றாலும ஊருக்கெல்லாம் அவள்தான் மருத்துவச்சி. சுலபமாய் ஆகாத பிரசவங்களுக்கு அவள்தான் உதவ அழைக்கப்படுவாள்.

வந்தவள் மல்லிகாவின் வயிற்றை இரண்டு கைகளாலும் கீழ்நோக்கி அமுக்கிப் பார்த்தாள்—

''ஆவற நேரம்தான்...சுடுதண்ணி போட்டுட்டியா... துணிங்க எங்கே...? சரி சரி. வூட்டு பசங்களையும், ஆம்பளைங்களையும் வெளியே அனுப்பிச்சிட்டியா? அடுத்த வூட்டு ராசம்மா, சொக்கி இரண்டு பேரையும் கூப்பிடுங்க...''

மருத்துவச்சி உத்தரவுகள் கொடுக்கத் தொடங்கினாள்—

மல்லிகாவுக்கு பனிக்குடம் உடைந்து போய் அரை மணி ஆகியும் குழந்தையின் தலை வெளியில் வராமல் போகவே மருத்துவச்சி காரியத்தில் இறங்கினாள்—

மல்லிகாவைக் குந்தி உட்கார வைத்து, எதிரில் தான் அமர்ந்து கொண்டாள். மல்லிகாவுக்குப் பின்புறமாகச் சொக்கியை இருக்கச் சொல்லி, இரண்டு கால்களாலும் இடுப்பில் ஒங்கி ஒங்கி உதைக்கச் சொன்னாள்—

வலி தாங்காமல் மல்லிகா 'யம்மாடி...அய்யோ'... என்று கதறும்போது வயிற்றை மேலிருந்து கீழ் நோக்கி வேகத்துடன் அமுக்கிப் பயங்கரமாய் 'ஹோ'வென்று கத்தினாள் மருத்துவச்சி.—

பயத்தில் வலி எடுத்துவிடும் என்று ஒரு நம்பிக்கை—ம்ஹூம். பலன் இல்லை—

ராசாம்மாவை அருகில் அழைத்தாள் மருத்துவச்சி — மல்லிகாவின் தலைமுடியை இரண்டாகப் பிரித்து முன் பக்கம் கொணர்ந்து, பந்தாகச் சுருட்டி மல்லிகாவின் வாயில் அடைத்து, அதே சமயம் சொக்கியை உதைக்கச் சொல்லித் தானும் வயிற்றை அமுக்கினாள்—

மயிர் வாய்க்குள் திணிக்கப்பட்டதால் மல்லிகாவுக்கு குமட்டல் எடுத்தது.

''நல்லா ஒமட்டுடி...நல்லா ஒமட்டு...ஒமட்டற ஒமட்டல்லே முக்குவலி வரணும்...ஹூம்...''

வாயில் குமட்டல், இடுப்பில் உதை, வயிற்றில் நோவு இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தாங்கவொட்டாமல் போனபோது, மருத்துவச்சியும் சாமி வந்தது போல் ஹா, ஹூ என்று கத்தத் தொடங்கிய சில நிமிஷங்களில் எல்லாம் மல்லிகாவின் பிள்ளை இவ்வுலகை எட்டிப் பார்த்து விட்டான்.

குழந்தையை இழுத்து, தயாராக இருந்த குறுவாளால் கொடியை ஒரு அங்குலம் விட்டு அறுத்து, முடிபோட்டு, தலைகீழாகத் தொங்கவிட்டு, பளிச்சென்று அறைந்து,



அது அழத்தொடங்கியதும் வாயில் விரலைக் கொடுத்து சுத்தம் செய்தாள் மருத்துவச்சி.

வெந்நீரால் குழந்தையை அலம்பித் துணியில் கிடத்தினவள், மறுபடி மல்லிகாவிடம் வந்தாள்.—

நஞ்சு விழவில்லை—

மேற்கொண்டு பத்து நிமிஷங்கள் போல காத்த பிறகு, பொறுமை இழந்து, கையை உள்ளேவிட்டு வயிற்றில் துழாவி நஞ்சை எடுப்பதற்குள் துடித்துப் போனாள் மல்லிகா—

''இன்னாடி இவ...இப்டி மாமாலம் பண்ணுறா... நா பார்க்காத ப்ரஸவமா? தே—சும்மா கெட...'' என்று அதட்டல் போட்டுத் தன் வேலையை முடித்தாள் மருத்துவச்சி.

இடுப்புக்கு கீழ் மல்லிகாவை வெந்நீரில் கழுவினதும் தரையில் வைக்கோலைப் பரத்தி, அதன்மேல் பழந்துணிகளை விரித்துத் தாயையும் சேயையும் படுக்க வைக்கும்போது மணி இரவு பதினொன்று.

மறுநாள் காலை மல்லிகாவுக்கு எழுந்து நிற்கக்கூட முடியாதபடி எரிச்சல், வலி இருந்தது.

காலை மணி ஏழுக்கு பொடுதலை தழைகளை ஒரு கட்டு பறித்து வந்து வெந்நீரில் இட்டுக் கொதிக்க வைத்தாள் தனபாக்கியம். தண்ணீர் தளதளவென்று கொதிக்கும்போது நல்ல செங்கல்லை, ரவை ரவையாக பொடி செய்து வெந்நீரில் கலந்தாள். கொஞ்சம் ஆறின பிறகு மகளிடம் கொடுத்து, ''இந்த வெந்நீர நெத்தம் ரெண்டு வேளை வைச்சுத் தாரேன்...இடுப்புக்குக்கீழே ஊத்திக் கழுவிக்க...ரணம் ஆறிடும்...'' என்றாள்.—

அன்றும் மறுநாளும் மல்லிகாவுக்கு ரொட்டியும் சுடுபாலுந்தான் ஆகாரம்.

மூன்றாம்நாள் காலை மல்லிகாவால் ஓரளவுக்கு எழுந்து நடமாட முடிந்தது.

பொடுதலை வெந்நீரால் உடலைக் கழுவினாள். தாய் வேலைக்குப் போகாததைப் பார்த்து ''ஏம்மா... அய்யரு ஊட்டுக்குப் போகத்தாவலை?'' என்று வினவினாள்.—

''நேத்து ராவுக்கு பட்டணத்திலேந்து சேதி வந்து அம்மா பொறப்பட்டுப் போயிருக்காங்களாம்...சொல்லி அனுப்பிச்சா, வந்தா போதும்னு அஞ்சலை புருஷன் செத்தமிந்தி வந்து சொல்லிட்டுப் போனான்...சின்னம்மா புள்ளை பெத்திட்டாங்க போலிருக்கு...அதான் அம்மா போயிருக்காங்க...'

மறுநாள் மல்லிகாவுக்குப் பத்தியம் போட்டாள் தனபாக்கியம். அன்று காலை மருத்துவச்சி வந்து குழந்தையைப் பார்த்தாள். தொப்புள் கொடி காற்று கொள்ளாமல் இருக்கிறதா என்று பார்க்க, பிள்ளையை மடியில் கிடத்திக் கொண்டு கட்டை விரலால் கொடியை அழுத்தித் திருகினாள்.—

'வீல்' என்று கதறித் துடித்தது குழந்தை—

'காத்து, கித்து இல்லே...ஆனா கொஞ்சம் சீழ் இருக்கு' என்று தனக்குத்தானே முனகின மருத்துவச்சி, குடிசையின் சாணி மொழுகின தரையை நகத்தால் கீறி பெயர்த்து எடுத்து, சிறிது தண்ணீருடன் சேர்த்துக் குழப்பித் தொப்புள் கொடிமேல தடவிவிட்டு ''நாளைக்கு நான் மறுபடி வரேன்'' என்று சொல்லிப் போனாள்.

அடுத்த நாள் வந்தவள், கையில் கொணர்ந்திருந்த பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு, குழந்தையை மடியில் கிடத்தினாள்.

''உம்மவனுககாக நா நேத்து இன்னா லோல் பட்டேன் தெரியுமா? சுருட்டு யாரு புடிக்காரங்கனு தேடி அலைஞ்சி, சுருட்டுச் சாம்பலை வாங்கியாந்திருக்கேன்'' என்றவள். பொட்டலத்தில் இருந்த சாம்பலைக் குழைத்து குழந்தையின் கொடிமேல் அப்பினாள்.—



''இனிமே ஒண்ணுமில்ல ஆத்தா...கொடி பட்டுப் போல காஞ்சிடும்...நீ எப்படி இருக்கே?...ரணம் ஆறிடுச்சா? பொடுதலை தழை தண்ணி ஊத்திக்கிணயா? அப்ப என்ன...நல்லாயிடும்...சரி...என்னை அனுப்பிச்சு வையுங்க...''

ஒரு தட்டில் இரண்டு தேங்காய், அரைடஜன் பூவன் பழம், வெத்திலை, பாக்கு, நாலு படி நெல் இரண்டாழக்கு துவரம் பயிர், படி மல்லாட்டை பயறு முதலியவைகளோடு இரண்டு ரூபாய் காசும் கொடுத்து மருத்துவச்சியை அனுப்பினாள் தனபாக்கியம்.

அடுத்த ஒருவாரத்தில் சாதாரண மனுஷியாய் நடமாடத் தொடங்கிய மல்லிகா வீட்டுக் காரியங்களையும் குழந்தைக் காரியத்தையும் ஒண்டியாய்க் கவனித்துக் கொள்ளும் திறன் பெற்றுவிட்டதாலும், அய்யர் வீட்டிலிருந்து தகவலே வராததாலும், சமாசாரம் அறிய தனபாக்கியம் அக்ரகாரத்துக்குப் போனாள்.

போன அரை மணிக்கெல்லாம் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் அவள் வந்ததைக் கண்டு மல்லிகா பதறிப்போனாள்—

''இன்னாம்மா?...இன்னா சேதி?''—

''நா என்னத்தேடி சொல்லுவேன்? அய்யரு ஊட்டம்மா நேத்து தான் பட்டணத்துலேந்து வந்தாங்களாம்...அவுங்க தங்காச்சிக்கு ராசாத்தி போல மக பொறந்துச்சாம்...ஆனா ரெண்டா நாளே என்னமோ சிக்கு வந்து பூடுச்சாம்...சித்தாம்மா எளுந்திரிக்காம துக்கமா படுத்துக் கெடக்குதாம்...அம்மா...ஆடிப் போயிட்டாங்கடி...''

தூக்கி வாரிப்போட அய்யர் வீட்டுக்குத்தானே ஓடினாள் மல்லிகா.

இவளைக் கண்டதும் 'ஹோ' வென்று கதறிவிட்டாள் பங்கஜம்.

'ஊர் ஒலகத்திலே எல்லாரும் பெத்துப் பொழைக்கலையா? எங்காத்துக்குனு இப்படி வரணுமா? பட்டணத்துலேயே பெரிய டாக்டர்தான் பிரசவம் பார்த்தார். இருந்தும் என்னாச்சு?... தொப்புள் கொடி 'செப்டிக்' ஆகி, ஒரே நாள் ஜுரத்திலே கொழந்தை போயிடுத்துடீம்மா...எங்காத்து தங்க விக்ரஹத்தைப் பறி கொடுத்துட்டோம்டீ.

பங்கஜம் கதற, மல்லிகாவின் துக்கம் தாங்க முடியாமல் போய், அய்யர் ஆட்டம்மாளோடு அவளும் சேர்ந்து அழ ஆரம்பித்தாலும் பாதியில் நிறுத்தி, ''அதென்னம்மா தொப்புள் கொடி 'செப்டிக்கு'?— சாணி வைக்கக் கூடாதா, இல்லே சுருட்டுச் சாம்பல் அப்பக் கூடாதா? பட்டணத்திலே சுருட்டுக் கூடவா கெடைக்காது?'' என்று தன் மன ஆத்தாமையை வெளிப்படுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்து அழுதாள்.

# அம்மாவுக்காக ஒரு பொய்

கங்கா நசுங்கின குட்டியூண்டு அலுமினிய கிண்ணத்தில் எண்ணெயுடன் கோவிலுக்குள் நுழையும்போது கூட்டம் அடி, பிடி என்று முண்டத் தொடங்கி விட்டது.

தூரத்தில் வரும்போதே காரிலிருந்து அந்த மாமி, பெண் பிள்ளையுடன் இறங்கி உள்ளே போவதைப் பார்த்துவிட்டு வேக வேகமாய் வந்ததால் அவனுக்கு லேசாய் மூச்சிரைத்தது.

இந்த மாமியும் கங்காவும் அனேகமாய் தினமும் ஒரே சமயத்தில்தான் கோவிலுக்கு வருகிறார்கள். நாற்பத்து ஐந்து நாட்கள் விடாமல் கோவிலுக்கு வருகிறேன் என்று இந்தமாமி பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாளாம்; குருக்களிடம், கூட்டம் இல்லாத ஒருநாள் பேசின போது, இவன் அருகில் நின்று கேட்டான்.

எதுக்காகப் பிரார்த்தனை?

முதல் முறையாய் அன்று மாமியை நன்றாய் முழுசாய் பார்த்தவனுக்கு, இந்த மாமிக்கு என்ன குறை இப்படி வேண்டிக் கொள்ள என்றே தோன்றியது.

மாமி நல்ல குண்டு. அழித்தால் தாராளமாய் நாலு ஐந்து பெண்ணைச் சாதாரண சைஸில் பண்ணலாம், நல்ல சிகப்பு—இந்தப் பணக்காரர்களுக்கு மட்டும் எங்கேயிருந்துதான் இப்படியொரு சிகப்பும் தளதளப்பும் வருகிறதோ! பால், பழம், வெண்ணெயில் முங்கி எழுவதாலா? அது நிஜம் என்றால் தன் சக்திக்கும் மீறி இரண்டு வருஷ காலமாய் அம்மா தினம் ராத்திரி பசும்பால் வாங்கிக் குடிக்க வைப்பதற்கு, என் முகரக் கட்டையில் சுடுகத்தனையாவது மாற்றம் தெரிய வேணுமே. ஒரு மண்ணையும் காணோமே! அப்படின்னா இது பால், தயிரால் வருவது இல்லையா! ஸ்வாபமாகவே பரம்பரை ரத்தத்தில் ஊறி வருவதோ! இருக்கும், இருக்கும்.—

அம்மாவின் தேய்ஞ்ச மூஞ்சிக்கு என்மாதிரி பெண் பிறக்காமல், இந்த மாமியோடு தினம் வராளே அந்த அழகு ராணி மாதிரியா ஜனிப்பாள்?

முதல்நாள் மாமியோடு அந்தப் பெண்ணைப் பார்த்ததும் கங்கா திடுக்கிட்டுத்தான் போனாள். இது என்ன கண்ணைக் கூச வைக்கிற அழகு என்று கிட்டத்தில் போய் அந்த வாளிப்பைத் தடவித் தடவிப் பார்க்க வேண்டும் போல இருந்தது. இந்த மெழுகுத் தோலும், பூரிப்பும் நிஜந்தானா என்று தொட்டுத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல இருந்தது.

அன்றைக்கும் கூட இவள் 'அடுத்த ஜன்மத்திலாவது நான் இந்த மாதிரிப் பணக்காரர்களுக்குப் பெண்ணாய்ப் பிறக்கணும், சினிமா ஸ்டார் மாதிரி 'பார்க்கறவா கண்ணைப்பறிக்கிற அழகோட பிறக்கணும்' என்று அடிக்கடி ஆசைப்படுவதுபோல, நினைத்துக் கொண்டாள்.

இந்தப் பெண் யார்? பெண்ணா, மாட்டுப் பெண்ணா? இல்லை உறவுப் பெண்ணா?

மாட்டுப் பெண்ணாக இருக்க முடியாது. காலில் மெட்டியில்லை. கழுத்தில் தடிமனாய் இருக்கறது வெறும் செயினா, இல்லை தாலிச் சரடா?

கங்காவுக்குக் குழப்பமாய் இருந்தது

நாள் பூராவும் இதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

அந்த மாமிக்கும் அந்தப் பெண்ணுக்கும் உறவு என்ன என்று தெரிந்து விட்டால் நிம்மதியா இருக்கும் போலத் தோன்றியது.

நாலைந்து நாட்கள் தவித்தவளுக்கு, அன்றைக்கு அதிசயமாய் அவர்களோடு சேர்ந்து வந்த இளைஞனைப் பார்த்ததும் அம்மாடி என்றிருந்தது.



இளைஞன் பெண்ணின் சாயலாகவே இருந்தான். இருபத்திரண்டு, இருபத்திமூணு வயது இருக்கும்.

ஆண் பிள்ளைக்கு இத்தனை அழகு எதுக்கு?

சன்னதியில் ஓரமாய், தூண் மறைவில் நின்ற வண்ணம் அவனையே பார்த்த கங்காவுக்கு, ரொம்பப் பொறாமையாக இருந்தது,

அப்போ, அண்ணா, தங்கைதான், நிச்சயம், அம்மா சாயலா இல்லையே! ஒரு வேளை இரண்டு பேரும் அப்பாவைக் கொண்டிருக்காளோ?

அப்புறம், அடிக்கடி அவனைப் பற்றி நினைக்கத் தொடங்கினாள் கங்கா,

ஒருநாள் இவளைப் பார்த்து அவன் புன்னகைப்பதாய் நினைத்தாள்

ஒரு நாள் கிட்டத்தில் வந்து நின்றதாய் நினைத்தாள்.

தினம் தினம் மனசு போனபடி கற்பனை: தமிழ் சினிமாவில் வருகிற மாதிரி. அதுவும் நேற்று நினைப்பு கொஞ்சம் துணிச்சலாக நீண்டுதான் போனது.

பிரகாரத்தில் சுற்றும்போது 'உன் தெய்வ பக்தி எனக்குப் பிடிச்சிருக்கு; உன் சாந்தமான முகம் எனக்குப் பிடிச்சிருக்கு: என்ன நாகரிகம், என்ன பணம்! அதெல்லாம்தான் பிடிக்கவேயில்லை' —என்று சொல்லிக் கையைப் பிடித்து... அப்புறம்... அப்புறம்...

கற்பனை ஜோராய் இருந்தது.

யாருக்கும் தெரியாமல் முகத்தைத் தலைகாணியில் புதைத்துக் கொண்டு மனசு கிளுகிளுத்ததை அனுபவிக்கும் போது நன்றாய்தான் இருந்தது.

இப்போது கோவிலில் தனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தவர்களைக் கடந்துச் சென்று, அவன் முகததை நன்றாய்ப் பார்க்க வேண்டும் என்று அரிப்பு எடுக்க, கூட்டத்தில் புகுந்து வேகமாய் முதல் பிரா காரத்தை அடைந்து கங்கா நின்றாள்.

குண்டு மாமி மெதுவாய்த்தான் நடப்பார்; அதுவும் இன்று கூட்டம் வேறு.

இவள் பிரகாரத்தில் ஒரு தூண் பக்கத்தில் நின்ற இரண்டு நிமிஷங்களில் அவர்கள் வந்தனர். முதல் நாள் கற்பனை மனசை கிச்சு கிச்சு மூட்ட ஆவலுடன் அவனை நிமிர்ந்து பார்த்த கங்காவுக்கு ஏமாற்றமே எழுந்தது.

இவளை அவன் தாண்டிச் சென்ற போது, இவள் ஒருத்தி நிற்கும் உணர்வே இல்லாமல் இவள் மேல் ஒரு கணம் கூட தன் கண்களை நிற்க விடாமல் நகர்ந்ததோடு போகாமல், கொஞ்சம் முன்னால் அர்ச்சனைத் தட்டோடு சென்று கொண்டிருந்த சாந்தியை மட்டும் அவன் அடிக்கடித் திருட்டுத்தனமாய்த்தேடித் தேடி பார்ப்பதைக் கண்டபோது, கிளு கிளுப்பு மறைந்து வெறுப்பு தோன்றியது.

தான் அழகா இருக்கோம்னு திமிர்,
பணக்காரன்ங்கற கொழுப்பு.

திடீர்னு பெரியம்மை வார்த்து, இவன் அழகெல லாம் போயிட்டா என்ன செய்வான்?

நினைச்ச நினைப்பில்லாமல் இவன் அப்பாவோட பணம் இருக்கிற பாங்க் திவாலாகி, கம்பெனி எரிஞ்சு போய், இவாத்துலே இருக்கிற சாமானெல்லாம்திருட்டுப் போயிட்டால் என்ன பண்ணுவான்?

அம்மை வடுக்கள் நிறைந்த முகத்துடன் இவனும் இவனைப் போலவே சாதாரண பழைய வாயில், புடவையில், நசுங்கின எண்ணெய்க் கிண்ணத்தோடு அந்தப் பெண்ணும் கோவிலுக்கு வருவதாய் மனதில் நினைத்துப் பார்த்தாள் கங்கா.



ரொம்ப திருப்தியாய் இருந்தது. அந்தத் திருப்தி யோடு முகத்தைத் திருப்பிக் கொண்டு நகர்ந்தாள்.

முதல் பிரகாரத்தைத் தாண்டும் போது அந்த நாலு பசங்களும் தூரத்தில் ஒரு பக்கமாய் இருப்பதாகக் கங்கா பார்த்தாள்.

அவர்கள் பேர் கூட இவர்களுக்குத் தெரியும்.

சுப்புணி, ராஜு, பாலு...அப்புறம் அந்த உசர மானவன் பேர் என்ன? ஆ...வெங்கிட்டு...

இந்த நாலுக்கும் உருப்படியாய் வேலை வெட்டி ஒண்ணும் கிடையாது எஸ். எஸ். எல். சி. யோ, பி. யு ஸீயோ கோட் அடிச்சிட்டு டைப்பிங் கத்துக்கிறேன், அது, இதுன்னு நாலும் கோவில் காளைமாதிரி நாலைஞ்சு வருஷங்களாய்ச் சுததறதுகள்

மாலையானால் டாண்ணென்று நாலு பேரும் கோவி லுக்கு வரது மட்டும் தப்பறதில்லை. ரொம்ப பக்தி காட்டாறாய் பெருகி ஓடுற மாதிரி.

நெத்தியில் பளிச்சினு விபூதியும் குங்குமமும் இட் டுண்டுட்டா. நல்ல பிள்ளைகள்னு எல்லாரும் நினைச் சுடுவாளா?

போற வர பொண்களைப் பார்க்க வேண்டியது. அவாளைப் பத்திக் கமெண்ட் அடிக்க வேண்டியது. தூ— இதே வேலை இந்தப் பொறுக்கிப் பசங்களுக்கு.

முன்பெல்லாம் இவளுக்கு இந்த இளவட்டங்கள் மேல் இத்தனை வெறுப்பு இல்லைதான் தன்னையும், தன் பெண்மையையும். மத்த பெண்களை ரசிக்கிற மாதிரி திருட்டுத்தனமாய், ரசிப்பார்கள் என்ற எண்ணத்தால் இவர்களைச் சந்திக்க நேரிடும் போதெல்லாம் லேசாய்த் தனக்குத்தானே புன்னகைப்பதும், தாவணி திட்டமாய் இருக்கிறதா என்று கவனிப்பும், நடை அழகாய் இருக்க வேண்டும் என்ற நினைப்பும் அவளிடம் இருக்கவே செய்தன.

ஆனால், ஒரு தரம், 'தேங்காய்த் துருவலாக போறதுடா'' என்று ராஜு இவன் அவர்களைத் தாண்டிப் போகும்போது முணுமுணுத்தது காதில்விழுந்ததிலிருந்து தான் கங்காவுக்கு இவர்களைக் கண்டால் ஆகாமல் போயிற்று

தேங்காய்த் துருவலாகாமாவா?—படவா, ராஸ்கல் எத்தனை தைரியம் இருந்தால் அப்படிப் பேசுவான்?

என் பல் ரெண்டும் லேசாய்த் தூக்கி இருக்கிறதுங் கறதாலே தேங்காய் துருவலகானு சொல்லலாமா?

அன்றைக்குக் கண்ணாடி முன் நின்று தன் முகத்தைத் தானே ஊன்றிக் கவனித்துவிட்டு ரொம்ப நாழிகை, குளியல் அறையில் அழுது தீர்த்தாள்.

இப்போதும் இந்தச் சனியன்களிடம் வம்பு எதற்கு என்று போகும் வழியில் அவர்கள் நின்று பக்கமாய் போகாமல் அப்பிரதட்சணமாய்ச் சென்று உள்ளே நுழைந்தாள்.

இரண்டாம் பிரகாரத்தில் ஜகஜகவென்று ஜனங்கள் நல்ல வேளையாய் ஆங்காங்கு ஃபேன் போட்டிருப்பது ரொம்ப சௌகரியமாய் இருக்கிறது.

ஒருஃபானின் கீழ் வியர்வை தணிய கங்கா கொஞ்சம் நின்றாள். அண்ணாந்து ஃபானை எதேச்சையாய்ப் பார்ததபோது அதில் ஏற்கனவே அடிக்கடி பார்த்திருந்த, 'உபயம்—சங்கரன்' என்ற வார்த்தைகள் பளிச்சென்று தெரிந்தன.

இதுதான் அந்தச் சாந்தியோட திமிருக்குக் காரணம் அவ அப்பா சங்கரன் ரெண்டு ஃபானை உபயமாய் வாங்கி மாட்டிட்டதாலோ என்னவோ, இந்தக் கோவிலே தனக்குச் சொந்தம் மாதிரி நடந்துக்கறா—

ஐயே—என்ன ஜம்பம் வேண்டியிருக்கு!

கங்காவும் சாந்தியும் நன்றாய்ப் பள்ளியில் படித்து, ஒரு காலத்தில் நெருங்கின சிநேகிதர்களாய் இருந்தவர்கள் தாம்.



இவள் எஸ். எஸ். எல். ஸி. படித்து வீட்டோடு அமர்ந்து. அவள் மேலே கல்லூரியில் படிக்கப் போன பிறகு எல்லாம் மாறிவிட்டது.

போன வருஷம் சாந்தி படிப்பை முடித்து விட்டாள். அவள் தகப்பனார் புளியங்கொம்பாய் மாப்பிள்ளை பிடிக்க வலை வீசுகிறாராம்! 'என் பெண்ணுக்கு என்னடா. ராஜாத்தியாட்டம் இருக்கா; பட்டப்படிப்பு வேற. சீர்செனத்தி எத்தனை பண்ணனும் சொல்லு? நான் ரெடி' என்கிறாராம்—அமெரிக்க மாப்பிள்ளையாய் வேணும் என்கிறாராம்.—

பெரீ...ய அமெரிக்கா...யாருக்கு வேணும், அமெரிக்காவும் ஆப்பிரிக்காவும். அங்கிருக்கவன் எல்லாம் எற்கெனவே ஒரு வெள்ளைக்காரியைக் கல்யாணம் பண்ணிண்டுட்டு. இங்கே இரண்டாவதாகப் பண்ணிக்கறானாம். அங்கே இழுத்துண்டுப்போயி வேலைக்காரியாட்டம் நடத்தறானாம்—ஒரு கதையிலேகூட படிச்சேனே!

கங்கா நெருக்கி அடித்துக் கொண்டு கர்ப்பக்கிருஹத்தை நெருங்கி, முன்னால் இருந்த பாவை விளக்கை அடைந்தபோது, முதல் வரிசையில் உயரமாய் சாந்தி நிற்பது தெரிந்தது

தலையைத் திருப்பின சாந்தி இவளைப் பார்த்துப் புன்னகைக்கிற மாதிரி இருந்தது.

கங்கா பதிலுக்குச் சிரிக்கவில்லை.

ஆமா—இவ பெரிய ராணி—இவ சிரிச்சா உடனேயே நான் புளகாங்கித மடையனுமாக்கும்?

திடீரென்று சாந்தி அமெரிக்கா பையனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது போலவும், அவன் இவளை அங்குக் கூட்டிப் போய் வெள்ளைக்கார மனைவியிடம் 'இந்தியாவிலிருந்து உனக்கு ஒரு வேலைக்காரி அழைத்து வந்திருக்கிறேன்' என்று சொல்வதாகவும் மனசில் கற்பனை விரிந்தது.

வாய்விட்டுச் சிரிக்கத் தோன்றியதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள் கங்கா.

பாலை விளக்கை நெருங்கிக் கிண்ணத்தில் இருந்த இரண்டு முட்டை எண்ணெயை அதில் கவித்தபோது, வெள்ளிக் கிண்ணம் நிறைய மணல் மணலாய் மஞ்சள் பசும் நெய்யை ஒரு கை-விளக்கில் கொட்டியது.

கிண்ணத்தைத் தொடர்ந்து கையைக் கங்கா பார்த்தாள்.

'நான் பணக்கார கை' என்று அது தம்பட்டம் அடித்தது.

நாலு தங்க வளையல்கள், நடுவில் பச்சையும் முத்தும் பதித்த கல்வளையல். கை மொழு மொழுவென்று உருண்டையாய் வளையல்கள் போடுவதற்கு ஏற்றதாய் இருந்தது.

பட்டையாய், ஒரு ரப்பர் வளையல் மாட்டினால் முழங்கை வரைக்கும் போகும் தன் கையைச் சட்டென்று கங்கா இழுத்துக் கொண்டாள்.

எதோ பேப்பரிலே படிச்சேனே. 'காதுலே இருந்த தோட்டுக்கு ஆசைப்பட்டு காதையே அறுத்துட்டதாய்... அந்த மாதிரி இவ கை வளையலுக்கு மோகிச்சுண்டு ஒருத்தன் கையையே வெட்டிட்டா...? நொண்டிக் கை... இப்படிப் பத்து பேர் பார்க்கிறபடி வெள்ளிக் கிண்ணிலே நெய் எடுத்துண்டு வந்து பீத்திக்க முடியாது...

''முன்னாலே இருக்கறவா செத்த நகருங்கே. அப்படியே நின்னுண்டு இருந்தா எப்படி?''—

பின்னால் பாட்டி ஒருத்தி முணுமுணுக்கக் கூட்டம் கொஞ்சம் கலைந்து, மறுபடி முட்டியது.

பெண்கள் இந்தப் பக்கம், ஆண்கள் அந்தப் பக்கம்.

கை காலை இப்படி அப்படி அசைக்க முடியாதபடி பாட்டிகளும், மாமிகளும், சின்னப் பெண்களும் நெரிக்கலே, மெள்ள நகர்ந்து பக்கவாட்டு வாசல் வழியாகக் கங்கா வெளியில் வந்தாள்.



வியர்வையில் கசகசத்த உடம்போடு சட்டையும் புடவையும் தெப்பலாய் நனைந்து ஒட்டிக்கொண்டன.

கம்மென்று ஏதோ மணம்.

பார்வையைத் தூக்கிப் பார்த்தபோது, தலை நிறைய மல்லிகைப் பூவும், நகையும், பட்டுப் புடவையும் வாய் நிறையச் சிரிப்புமாய் நிறைய பெண்கள்.

ஏதாவது ஜான்வாஸமா?

இருக்கும், தை மாசம் பிறந்துடுத்தோன்னோ, இனிமேல் இங்கே தினமும் பட்டுப் புடவைக் கூட்டம் அமர்க்களப்படும்.

ஒவ்வொருத்தியின் புடவையையும் அலங்காரத்தையும் ஊன்றிப் பார்த்தாள் கங்கா.

அந்தச் செங்கல்நிற உடம்பும் கறுப்புப்பட்டை ஜரிகைப் பார்டரும் கொண்ட புடவை நன்னா இருக்கு? உடுத்திண்டு இருக்கிறவ மூஞ்சிதான் அடிப்பட்ட தகர டப்பா மாதிரி இருக்கு—

வெளிர் நீலத்துலே அந்தப் புடவையைப் பாரேன்! ஜரிகை எடுபடலியே! இப்படியே ஒருத்தி பணத்தைக் கொட்டி அசடு வழியப் புடவை வாங்குவா?

கங்கா வெளிப் பிரகாரத்தை நோக்கி நடந்தாள்.

ஆட்டி ஆட்டிக் கொண்டு மாமி ஒருத்தி அத்தனைப் பேரையும் விரட்டிக் கொண்டிருந்தாள்.

''மாப்பிள்ளை டிரெஸ் எங்கேடா?''

''காருக்கு ஜோடனை ஆயிடுத்தா?''

''அப்பா எங்கே? மாப்பிள்ளைக்கு வேண்டியதைக் கவனிச்சாளா? அவர்பாட்டுக்கு மசமசனு நிக்கப் போறார்—ம் ஆகட்டும்...''

லக்கிணி மாமி போலிருக்கே!

பாவம்—மாமா—இவளிடம் எத்தனை வருஷங்களாய் மாட்டிண்டு முழிக்கிறாரோ?

கூட்டத்தில் இடிபடாமல் ஒதுங்கி ஒதுங்கி கங்கா வாசலுக்கு வந்தாள்.

கார் ஒன்று தடபுடலாய் அலகரித்துக் கொண்டு சற்றுத் தள்ளி நின்றது.

இதில் உட்கார்ந்து ஜோக்காய் சவாரி செய்யப் போகும் மாப்பிள்ளையைப் பார்க்கலியே என்ற நினைப்புடன் கங்கா தெருவில் இறங்கி நடந்தாள்.

நன்றாய் இருட்டத் தொடங்கி விட்டது.
அம்மா கவலைப்படுவாளே?
நடையை எட்டிப் போட்டாள்.

பத்து நிமிஷம் வேகமாய் நடந்தால் கங்காவின் வீடு இருக்கும் சந்து வந்துவிடும்.

பெரிய வீதியில் போய், வண்டிக்காரன் தெருவில் திரும்பினால் அந்தச் சந்து.

சந்தில் இறங்கி, ஒண்டுக் குடித்தனங்கள் திணிக்கப் பட்ட நெருக்கமான வீடுகளில் நாலைத் தாண்டி ஐந்தாவதில் ஏறினாள் கங்கா.

வாசற் திண்ணையிலேயே அம்மா, காமு பாட்டியோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

கங்கா கையில் எண்ணெய்க் கிண்ணத்துடன் வருவதைக் கண்டு அம்மா கேட்டாள்:

''ஏண்டி கங்கா. கோவில்லே ரொம்பக் கூட்டமா? அதான் இத்தனை நாழியாயிடுத்தா? இன்னிக்கு அம்மன் அலங்காரம் ரொம்ப நன்னா இருக்குன்னு அம்புலு மாமி சொன்னாளே...அப்படி என்ன விசேஷம்?''



அம்மாவின் கேள்விக்குப் பதில் சொல்ல முனைந்த போதுதான் அம்பாளைத் தரிசனமே பண்ணாமல், நிமிர்ந்து ஒருமுறைகூடப் பார்க்காமல், வந்துவிட்டது நெஞ்சில் சொரேர் என்றது.

அம்மாவுக்கு மூட்டுவாதம்; கோவிலுக்குச் செல்வது கஷ்டம் என்பது ஞாபகத்துக்கு வர, கங்கா மெதுவாய்ப் பதில் சொன்னாள்.

''ம்...சந்தனக்காப்பும், மடிசார் புடைவையுமா அம்பாளைப் பார்த்துண்டே இருந்ததும்மா...ரொம்ப அழகு!''

''ஆயிரந்தான் சொல்லு...நம்ப கங்கா மாதிரிப் பொண்ணு இந்தக் காலத்துலே ரொம்ப அபூர்வம்—அததுகள் சினிமா,டிராமான்னு மேல் தாவணி உடம்புலே நிக்காம அலைஞ்சுண்டு முன்னோச்சி மயிரைக் கத்தரிச்சுண்டு அலையுற இந்த நாளிலே பதவிசாக, குனிஞ்ச தலை நிமிராம, தெனம் அம்மன் கோவிலுக்குஎண்ணெய் எடுத்துண்டு போய் தரிசனம் பண்ணற இந்த அடக்கமான புத்தி வேற யாருக்கு வரும்?...அந்த அம்பாள் தான் சுருக்கக் கண்ணைத் திறந்து பார்த்து இவ கொணத்துக்கு ஏத்த மாப்பிள்ளையா கொண்டு வந்து நிறுத்தணும்...என்னமோ போ...பணங்காசு, அழகு இல்லாட்டா என்ன? கொணம்னா முக்கியம்! அதுக்குக் கங்கா கால்லே மத்தப் பெண்களைக் கட்டினா அடிக்கணும்?''—

காமு பாட்டி பேசுவதைக் கேட்டுக்கொண்டே படி ஏறி, திண்ணையைத் தாண்டி, ரேழியில் கால் வைத்தாள் கங்கா.

# உறுத்தல்

நல்ல இருட்டு, காரின் ஹெட் லைட் வெளிச்சத்தில் ரொம்ப தூரத்துக்கு நெடுஞ்சாலை தெரிந்தது எதிரே அவ்வப்போது தொடர்ந்து வந்த லாரிகளின் எதிர் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த, வேண்டி விளக்குகளை அணைத்து, அணைத்து ஒட்டுவது குமரனுக்குப் பெரும் துன்பமாய் இருந்தது. சில லாரிக்காரர்கள் தங்கள் ஹெட் லைட்டுகளை அணைக்க மறுத்ததால், வேகத்தைக் குறைத்துச் சாலை சரியாக இருக்கிறதா என்று கவனித்த தில் காரின் வேகத்தைச் சிராய் எண்பது கிலோ மீட்டரில் வைப்பது கஷ்டமாக இருந்தது.

மணிக்கட்டைத் திருப்பிக் கைக் கடிகாரத்தைப் பார்த்தான் குமரன் பதினொன்று. எட்டு மணிக்குள் ஊருக்குப் போய் விடலாம் என்று எண்ணி இருந்தது நடக்கவில்லையே! திருச்சியை விட்டுக்கிளம்பித்தொட்டுத் தொட்டு நாலு மணி ஆனபோது சரி, பரவாயில்லை, எட்டுக்குள் செங்கல்பட்டை அடைநதுவிட முடியாதா, என்று நம்பியிருந்தவனின் திட்டத்தில், வண்டியில் உண்டான கோளாறு மண்ணை வாரிப் போட்டது.

உளுந்தூர்ப்பேட்டையில் நிறுத்திக் காபி டிபன் சாப்பிட்டுப் புறப்பட்டார்கள். கொஞ்ச தூரம் வந்திருக்க மாட்டார்கள். நன்றாய் ஓடிக் கொண்டிருந்த என்ஜினில் திடீரென்று ஃபான் பெல்ட் அறுந்து, வண்டி நின்று போனது.

விழுப்புரத்துக்குப் பத்து மைல்கூட இல்லை. அங்குக் கண்டிப்பாய்ப் பெல்ட் கிடைக்கும். போய் வாங்கி வந்து விடலாம் என்றால் யார் போவது? வழக்கமாய் வீட்டில் வேலை இல்லாமல் ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் டிரைவருக்கு, அதிசயமாய் குமரன் நாலு நாட்கள் திருச்சிக்கு மைத்துனியின் திருமணத்துக்



காகப் புறப்பட்ட நாளில், திடும்மென்று நல்ல ஜுரம். இங்கே இருக்கும் திருச்சிதானே, நாமே ஓட்டிக்கொண்டு போய் வந்து விடலாம்' என்று கிளம்பியிருந்ததால் குமரனைத் தவிர காரில் அவன் மனைவி, ஆறுவயசு கோபி மூன்று வயசு ராஜா, கைக் குழந்தை ஆனந்தி, இவர்களைத் தனியாய் விட்டுவிட்டு, குமரனால் எப்படிப் போக இயலும்?

அந்தச் சாலையில் வந்த லாரி, வண்டிகளை நிறுத்தி, கயிற்றால் தன் காரைக் கட்டி இழுத்துச் சென்று விழுப் புரத்தில் விட்டு விடுமாறு கேட்டுக் கொண்டவனுக்குக் கிடைத்தது ஏமாற்றமே. ஒருத்தரிடமும் கயிறு இல்லை. அப்படி வைத்திருந்த ஓரிருவர்கூட 'லோடு இருக்குதுங்க... முடியாது' என்று தயை தாட்சண்யம் இல்லாமல் மறுத்துச் சென்றார்கள்.

கடைசியாய் உன்பாடு, என்பாடு என்று ட்ராக்டரை ஓட்டி வந்த விவசாயியை மறித்தான் குமரன். நிறையப் பணம் கொடுப்பதாக ஆசை காட்டின பிறகு அவன் தன் ட்ராக்டரில் ,குமரனின் பியட்காரைக் கட்டி ஆடி அசைந்து கொண்டு விழுப்புரத்தில் கொண்டு விட்டபோது மணி இரவு ஒன்பது.

திறந்திருந்த கடையைக் கண்டுபிடித்து, ஃபான் பெல்டை வாங்கிப் பொருத்தி, அருகில் இருந்த ஹோட்டலில் இரவுச் சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு இவர்கள் கிளம்பும்போது பத்து அடிக்கப் பத்து நிமிஷம்,

செங்கல்பட்டில் சொந்தமாய் டிஸ்பென்ஸரி வைத்து நடத்தும் முக்கிய டாக்டரில் குமரனும் ஒருவன். பன்னிரெண்டு வருஷ ப்ராக்டீஸில் நல்ல பேர். கைராசிடாக்டர் என்று சுற்று வட்டாரக் கிராமத்து ஜனங்கள் இவன் டிஸ்பென்ஸரிக்குப் படை எடுத்ததால் இந்தச் சின்ன வயசில், சொந்த வீடு, கார், பாங்கில் டிபாசிட் என்று ஜமாய்க்க முடிகிறது.

குமரன் நோயாளிகளைப் பரிசோதித்து, மூன்று வேளை மிக்சர், மாத்திரைக் கொடுக்க ரூபாய் ஐந்தும் ஊசி போட்டால் மேற்கொண்டு இரண்டு வசூலிப்பான். அவ்வளவுதான். நாள் ஒன்றுக்கு தாராளமாய் நூறு நோயாளிகள் போல அவனிடம் வந்து குமிந்ததால் டிஸ்பென்ஸரி, கம்பௌண்டர். மருந்துகள் செலவு போகக் குமரனால் தினம் இருநூறுருபாய்களை எளிதாய்ச்சம்பாதிக்க முடிகிறது.

சாதாரணமாய் கிராம ஜனங்கள் டாக்டரிடம் நம்பிக்கை வைத்துவிட்டால் லேசில் இன்னொருவரிடம் போகமாட்டார்கள். டாக்டர் ஊரில் இல்லாவிட்டால் இரண்டு நாட்கள் காத்திருந்தாவது, தங்கள் உடல் வேதனையைப் பொறுத்திருந்தாவது, அவர் திரும்பின பிறகு வருவார்களே தவிர இன்னொரு வைத்தியரிடம் செல்ல மாட்டார்கள்.

இந்தப் பழக்கத்தால்தான் குமரன் தைரியமாய் டிஸ்பென்ஸரியை நாலு நாட்களுக்கு மூடிவிட்டுத் திருச்சிக்குக் கிளம்பிவிட்டான்.

மனைவி காந்தத்தின் தங்கைக்குக் கல்யாணம் ஒரே தங்கை. மாமனார் வசதியானவர். தடபுடலாய்க் கல்யாணம் செய்யும்போது மூத்த மாப்பிள்ளை இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்துவிடவேண்டும் என்று ஆசைப்பட்டதில் என்ன தவறு?

பிராக்டீஸ் தொடங்கின இத்தனை வருஷங்களில் முழுசாய் நாலு நாட்களுக்கு டிஸ்பென்ஸரியை மூடிவிட்டுக் குமரன் கிளம்புவது இதுதான் முதல்தடவை. ஊருக்குள் இப்போது டாக்டர்களின் போட்டி அதிகமாகிவிட்டது. போதாக் குறைக்கு அரசாங்க பெரிய ஆஸ்பத்திரி வேறு. சேர்ந்தாற்போல பல நாட்களுக்கு டிஸ்பென்ஸரியை மூடுவது, நோயாளிகளின் நம்பிக்கையை ரொம்பவும் சோதிப்பதாகும் என்று புரிந்திருந்ததால் குமரன் இதுநாள் வரை அப்படிச் செய்ததில்லை. சென்னைக்கோ, மற்ற எந்த இடத்துக்கோ செல்லவேண்டிய



நிர்பபநதம எழுந்தால் காலையில்போய் இரவு திரும்பிவிடுவான்· தவறிப் போனால் கூட இன்னும் ஒரு அரை நாள். இதற்குமேல் தாண்டினதில்லை.

தன் பிறந்த வீட்டிற்குக் கணவன் வந்து இரண்டு நாட்கள் தங்கினதில்லை என்று காந்தம் சதா குறைப்பட்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டதாலும் ப்ராக்டீஸை லேசில் வேறொருத்தரால்அசைக்க முடியாது என்ற நம்பிக்கை தோன்றிவிட்டதாலும் இந்த முறை நாலு நாட்களுக்குத் திருச்சிக்குச் செல்லக் குமரன் கிளம்பிவிட்டான்.

போய்ச் சேர்ந்த முதல் நாள் எல்லாம் சரியாக இருந்தது.

தன்னைச் சோம்பேறியாக்கி, மற்றவர்கள் அத்தனை பேர்களும் துரும்பை எடுக்கவிடாமல் உபசரித்தது பிடித்திருந்தது. 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை' என்று வாய்க்கு வாய் மாமனார் மூதல் சின்ன மைத்துனர் வரைக்கொண்டாடியது பிடித்திருந்தது ஜமா சேர்ந்து சீட்டு ஆடுவது பிடித்திருந்தது.

ஆனால், இரண்டாம் நாளிலிருந்து வெட்டியாய் உட்கார்ந்திருப்பதும் இப்படி நாலு நாட்கள் டிஸ்பென்ஸரியை மூடியது தவறு என்றும் எண்ணத் தொடங்கியதால், அவனால் திருச்சியில் நிம்மதியாய் இருக்கமுடியாது போயிற்று. கல்யாணம் எப்போது முடியும் கிளம்பிவிடலாம் என்று பரக்கத் தொடங்கினான்.

புதுசாய் செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்து மாலையில் தனி ப்ராக்டீஸ் பண்ண ஆரம்பித்திருக்கும் டாக்டர் ஜனார்த்தனத்தை நினைத்தால் கொஞ்சம் கலக்கமாய் இருந்தது. டாக்டர் ஜனார்த்தனன் எம்.டி ரொம்பக்கெட்டிக்காரர்.,சின்னவயசுக்காரர், சிடுமூஞ்சித்தனமே இல்லை, பேஷண்டுகளிடம் சிரித்துச் சிரித்துப் பேசுகிறார். சார்ஜூம் ரொம்பசெய்லதில்லை. குமரனின் பேஷண்டுகளில்ஓரிருவர் அங்குபோவதாககம்பௌண்டர்

சொல்லி இருக்கிறான். இப்போது யோசித்துப் பார்க்கையில் நாலு நாட்களில் நிறைய பேர்கள் அவரிடம் போய் விடுவார்களோ, இப்படி விட்டுவிட்டு வந்தது அசட்டுத் தனமோ, என்றே குமரனுக்குத் தோன்றியது.

முதல் நாள் நலங்கும, மறுநாள் காலை முகூர்த்தமும் ஆனவுடனேயே, மனைவியை அழைத்துக் ''கல்யாணம் ஆயிடுச்சே நாம் கிளம்பலாமா?'' என்றான் மெதுவாய்.

''சாயங்காலம் ரிஸப்ஷன் இருக்கு. நாளைக்குச் சம்பந்தி விருந்து இருக்கு. என்னாங்க நீங்க?'' என்று ரெடியாய் கண்களில் நீரைத் தருவித்துக் கொண்டு காந்தம் கேட்கவும், குமரன் உடனே கிளம்பும் எண்ணத்தைக் கை விட்டான்.

காந்தத்தின் விருப்பப்படி தங்கிக் காலையில் சம்பந்தி விருந்து முடிந்து, அவர்களை அனுப்பிவிட்டு, இவர்கள் ஆற அமரக் கிளம்பும்போது மாலை மணி நான்கு.

காரில் ஏறியபின் வெகுநேரத்துக்குப் பின் பிறந்த வீட்டில் தாங்கள் நாலு நாட்கள் தங்கினதில் அப்பா, அம்மாவுக்கு எத்தனை சந்தோஷம் என்பதையும் நீளமாய்க் காந்தம் பேசிக்கொண்டு'வந்தாள்.

உளுந்தூர்ப்பேட்டையை அடையும்வரை எல்லோரும் குஷியுடன் தான் இருந்தார்கள். ஆனால் கார் ரிப்பேர் ஆகி, நெடுஞ்சாலையில் உதவி கிட்டாமல் தவித்து, இருள் சூழத் தொடங்கி, கொசுக்கள் மொய்க்க முற்பட்டதும் பெரிய பிள்ளை 'பசிக்கிறது' என்று சொன்னான். அடுத்தவன் 'தூக்கம் வருது' என்று முனகினான். கைக்குழந்தை ஆனந்தி இருப்புக்கொள்ளாமல் அழத் தொடங்கினாள்.

ஒரு தினுசாய் விழுப்புரம் வந்து காரைக் கவனித்து எல்லாரும் சாப்பிட்டு மீண்டும் புறப்பட, பின்னர் பிள்ளைகள் பின் ஸீட்டிலும், காந்தம் மடியில் ஆனந்தியைப் போட்டுக் கொண்டு முன் ஸீட்டில் சாய்ந்தபடியும் தூங்கிப் போனார்கள்.



நாலு நாட்களாய் மாமனார் வீட்டில் இரவு கண் விழித்து விடிய விடிய சீட்டுக் கச்சேரி போட்டதன் விளைவு இப்போது குமரன் கண்களில் தீயாக எரிந்தது.

மதுராந்தகத்தை வண்டி தாண்டும்போது, 'ஆயிற்று இன்னும் அரைமணி நேரம்; அப்புறம் வீட்டுக்குப்போய் ஜில்லென்று தண்ணீரில் குளித்துவிட்டுப் படுக்கையில் விழலாம்' என்ற நினைப்பே குமரனுக்கு சுகமாக இருந்தது.

மாமண்டூரை நெருங்குகையில் தூரத்தில் இரண்டு மூன்று ஆட்கள் நடு ரோடில் நின்று கையை ஆட்டி வண்டியை நிறுத்தச் சொல்வது புரியவே காரின் வேகத்தைக் குறைத்தான் அவன்.

யாரிவர்கள்? எதற்காக வண்டியை நிறுத்துகிறார்கள்?

கல்யாணத்துக்காகக் காந்தம் அத்தனை நகைகளையும் வாரிக்கொண்டு வந்திருப்பது திடீரென்றுகுமரனுக்கு ஞாபகம் வந்தது—நெடும் சாலையில் இப்படி ராவேளையில் வண்டிகளை நிறுத்திச் சில இடங்களில் கொள்ளை அடிப்பதாக நண்பர் சொன்னது நினைவுக்கு வந்தது.

நிறுத்தாமல் போய்விட்டால் என்ன?''

வரிந்து கட்டின வேட்டியும், தலையில் முண்டாசும், வெற்று உடம்பாய் நின்ற அவர்களைப் பார்த்தால் கிராமவாசிகள் மாதிரித் தோன்ற, சந்தேகம் குறைந்தவனாய் வண்டியை ப்ரேக் போட்டு அவர்கள் அருகில் நிறுத்தினான்.

கையில் அரிகேன் விளக்குடன் நின்ற ஆள் ஜன்னலிடம் குனிந்து பேசினான்.

''ஐயா—பத்து நிமிஷம் முந்தி இங்கே ஒரு விபத்து நேர்ந்துடுச்சி...அதோ அங்க பாருங்க...வண்டி மரத்துலே மோதி நிக்குது... உள்ளார ஒருத்தர் இருந்தாருங்க... தலை, முகம், உடம்பு எல்லாம் ரத்தம். இளுத்து வெளியே போட்டிருக்கோம் ...உசிரு இருக்கிற மாதிரித்தான் தெரியுது. கொஞ்சம் வண்டியிலே ஏத்திக்கிட்டு செங்கல்பட்டு ஆஸ்பத்திரிலே சேர்த்துடுறீங்களா?''

அந்த ஆளின் சப்தமான பேச்சில் காந்தம் திடுக்கிட்டு எழுந்து உட்கார, காற்று நின்றுபோன புழுக்கத்தில் ஆனந்தி சிணுங்கத் தொடங்கினாள்.

தலையைத் திருப்பிப் பார்த்தான் குமரன். சற்றுத் தள்ளி இறக்கத்தில் கறுப்புக் கார் ஒன்று மரத்துடன் உறவாடிக் கொண்டிருப்பது புரிந்தது. எதுவும் தெளிவாகத் தெரியாதபடி இருள் சூழ்ந்திருந்தது.

அரிகேன் ஆள் தொடர்ந்து பேசினான்.

''காரு மோதின சத்தம் கேட்டு நாங்க ஓடியாந்தோம்... எங்க குடிசை அதோ அந்தப் பக்கம் இருக்குதுங்க... வந்து ஆளை இழுத்துப் போட்டுட்டு ஒரு லாரிய நிப்பாட்டினோம். அவங்க இது போலீஸ் கேஸ்னு மறுத்துட்டாங்க. உங்களுக்குப் புண்ணியமா போவும்... கொஞ்சம் எடுத்திட்டுப் போங்க...ஒரே ரத்தங்க... மண்டை ஒடைஞ்சிருக்குங்க...''

ஆனந்தி பெரிசாய் வீறிட ஆரம்பித்தாள்.

குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு காந்தம் ''அவங்கதான் நடுரோட்டிலே இந் நேரத்திலே நிறுத்தறாங்கன்னா... நீங்களும் நின்று பேசிட்டிருக்கீங்க... குழந்தை அழுவறா...கிளம்புங்க... இப்படி நடுராத்திரி ஆக்ஸிடெண்டுக்கெல்லாம் கருணை காட்ட நமக்கு கட்டுப்படி ஆகாது...'' என்றாள். சலிப்பு நிறைந்த குரலில் கணவனுக்கு மட்டும் கேட்கும்படி.

குமரன் ஒரு கணம் யோசித்தான்.

இறங்கிப் போய்ப் பார்க்கலாமா? மண்டைஉடைந்து விட்டது என்கிறானே—உயிர் போயிருக்குமோ? எப்படி எடுத்துப்போவது? பிள்ளைகளை முன்னுக்கு வரச் சொல்லி அடிபட்டவரை பின்னால் கிடத்தினால்? ஒரே ரத்தம் என்கிறானே. காரெல்லாம் ரத்தமாகிவிடுமே?

''என்னங்க யோசனை பண்ணறீங்க... இவங்க சொல்றது நிசமோ, இல்லை பொய்யோ? வண்டிலே



குழந்தைங்க இருக்காங்க...மண்டை உடைஞ்ச ஆளையும் ரத்தத்தையும் கண்டு பயப்பட போறாங்க...கிளம்புங்க...'

காந்தம் சொல்வது நியாயமாகப் பட வண்டியைக் கிளப்பினான் குமரன்.

''கார் காலியா இருந்தா எடுத்துப் போகலாம்பா... வண்டிலே குழந்தைங்க இருக்காங்க...எப்படி எடுத்துட்டு போறது? நீ வேறு வண்டியைநிறுத்திப் பாரு...''

குமரன் மேற்கொண்டு அந்த ஆள் பேச இடம் இல்லாமல் காரை ஓட்டினான்.

''குடிச்சிட்டு வந்து கண் மண் தெரியாம ஓட்ட வேண்டியது. ஆக்ஸிடெண்ட் ஆனா, மத்தவங்க கழுத்தை அறுக்கிறது...சீ நல்ல மனுஷங்க...'' காந்தம் எரிச்சலுடன் பேசி மகளைத் தட்டினாள்.

காரை ஓட்டிய குமரன் தான் ஒரு டாக்டராய் இருந்தும் இப்படி அடிபட்ட நபரைக் கவனிக்காமல் போகிறோமே என்று மனசில் எழுந்த குற்ற...உணர்வை ''டாக்டர்னா மட்டும்என்ன? குழந்தைகள், மனைவியைக் கஷ்டப்படுத்தியாவது என் தொழிலோட புனிதத் தனத்தை நிரூபிக்கணும்னு இருக்கா என்ன? பரிதாப படறதுக்கும், உதவி செய்யறத்துக்கும் நேரம் காலம் இல்லியா? பகல் வேளையாய் இருந்து காரில் இடம் இருந்தால் நிறுத்தி ஏத்திக்காமலா போவேன்? இப்போ கிட்டப் போய் பார்க்கலாம் என்றாலும் விளக்கு கூட இல்லை ..நான் என்ன பண்ண முடியும்?'' என்ற சமாதானங்கள் மூலம் அடங்கிவிட்டான்.

கால்மணியில் வீட்டை அடைந்து, ஆட்களை எழுப்பி, சாமான்களை இறக்கி. பிள்ளைகளைப் படுக்க வைத்து, தாங்களும் படுத்த அடுத்த நிமிஷத்தில் இருவரும் உறங்கிப் போனார்கள்,

நல்ல தூக்கத்தில் இருந்த குமரன் டெலிபோன் மணி அடிக்கும் சப்தம் கேட்டு கண் விழித்தான். விடிகாலை

மணி ஒன்று. எந்த அவசரக் கேஸ்காரன் கழுத்தை அறுக்கிறான் என்று கோபத்தோடு ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...குமரன்...ஹியர்''—

''டாக்டர், நான் டாக்டர் ஜனார்த்தனன் பேசறேன்...ஸாரிடுடெல் யூ திஸ் நியூஸ். சம்பந்தன் கார் ஆக்ஸிடெண்டிலே போயிட்டார். கொஞ்சம் முன்னாலே எமர்ஜென்ஸி கேஸாக ஹாஸ்பிட்டல்லே அட்மிட் ஆனப்பவே உசிர் இல்லை. உங்களுக்கு ரொம்ப சினேகிதாமாச்சேனு போன் பண்ணினேன்...ஐ ம் ஸாரி...

''எந்த சம்பந்தம்? காஞ்சிபுரத்தில் இருக்கும் என் நண்பனா? விபத்தா? எப்படி, எங்கே நடந்தது?''— குமரனின் தூக்கம் ஓடிப் போனது.

'அவரேதான் டாக்டர்... மாமண்டூர் பக்கத்திலே...ஸ்டீரிங் வீல் ஆக்ஸில் உடைஞ்சி. மரத்துலே கார் மோதிட்ட மாதிரி தோணுது...மற்றபடி விவரம் ஏதும் தெரியலை. பண்டையில் அடி ... ஏகமா ரத்தம் போயிடுச்சி...ஒரு பஸ்ஸிலே யாரோ கிராம வாசிங்க ஏத்திக்கிட்டு வந்திருக்காங்க...யாராவது கார்க் காரங்க நிறுத்திக் கொஞ்சம் முன்னே ஹாஸ்பிடலுக்கு கொணர்ந்திருந்தா, அவரைக் காப்பாத்தியிருக்கலாமோ, என்னவோ? ஹைவேயில் ஆக்ஸிடெண்டு நடந்தும், ஒரு வண்டிக்காரங்க கூட நிறுத்தி உபகாரம் பண்ணலியாம்... ஐம் ஸாரி டாக்டர்... நீங்கள் இங்கே வரீங்களா?''

பதில் பேசாமல் போனை வைத்த குமரனுக்கு நெஞ்சை அடைத்துக் கண்களில் நீர் திரண்டது.

அவனுடைய சினேகிதன் சம்பந்தம்— பக்கத்துப் பக்கத்து வீட்டில் பிறந்து வளர்ந்து. ஒரே தட்டில் உண்டு கூடப்பிறந்த சகோதரன் போல அன்பைப் பொழிந்த சம்பநதம்—' நல்லா படிடா—நான்தான் படிக்கலை வியாபாரத்துலே இறங்கிட்டேன்— நீயாவது படிச்சு பெரிய டாக்டரா வாடா' —என்று சதா வாழ்த்திய சம்பந்தம்—அவன் அடிபட்டுக் கிடக்கும் போதா நாம் உதவாமல் வந்திருக்கிறோம்?



மனசுக்குள் நினைவுகள் சுருக்கென்று குத்தின. ஒரு டாக்டராய் இருந்தும் தன் உயிர் நண்பனின் சாவுக்குத் தானே காரணமாகிவிட்ட இந்த உறுத்தல் இனி ஆயுசுக்கும் உறுத்தப்போகிறது. இந்த உறுத்தலிலிருந்து தான் தப்பவே முடியாது என்ற எண்ணம் நெஞ்சில் மின்னலாய் இறங்க, இரண்டு கைகளிலும் முகத்தைப் பதித்துக் கொண்டு மடிந்து உட்கார்ந்து அழத் தொடங்கினான் குமரன்.

22864
3944788
கொளத்தூர், சென்னை

# அதற்கு என்ன?

முதல் நாள் கட்டிக் கொண்ட நைலான் புடவை அழுக்காகி விட்டதால், அதைச் சோப்பு ஜலத்தில் ஊற வைத்து துவைத்த பின் கொல்லைப்புறத்து வேப்ப மரத்து நிழலின் கீழ் கட்டியிருந்த கொடியில் உதறி உலர்த்தும் போதுதான் அந்த ஓணானைப் பார்த்தாள் அவள்

புடவையைச், சுருக்கம் இல்லாமல் இழுத்துப் பறந்து விடாமல் இருக்க இரண்டு பக்கமும் மரக் கிளிப்புகளை பொருத்தின வண்ணம் பார்வையைத் தன்னைச் சுற்றி ஓட விட்டவள், அந்த ஓணானைப் பார்த்தாள்—

சாதாரண ஓணானைப் போல அல்லாமல் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது அது. நல்ல மஞ்சளால், மஞ்சளும் சிகப்பும் கலந்ததாய் பழுப்பாய், கொஞ்சம் சிகப்பு அதிகமாய், பச்சையாய் என்று பல நிறங்களில் ஓணான்களைப் பார்த்திருந்த அவளுக்கு, இந்த ஓணானின் அமைப்பு மாறுபட்டிருப்பதாகவே தோன்றியது.

உடம்பெல்லாம் வெள்ளை—கால்கள் மட்டும் கருத்த சாம்பல் நிறம்—உடம்பை விட நீளமாய் இருந்த வாலில் கறுப்பு வெள்ளை மாற்றி மாற்றிக் கோடு போட்டிருந்தது—ஒரு கட்டு விரியன் பாம்பின் உடம்பு மாதிரி.

முதலில் அந்த வாலை மட்டும் பார்த்தவள்—பாம்பு என்று பயந்து போனாள். கட்டுக்கட்டாய் தெரிந்த அந்த நீளமான வாலைப் பார்த்துவிட்டு அவள் அதிர்ந்து ஓட நினைத்த போது அந்த வாலை ஒட்டியிருந்த வெள்ளை உடம்பையும், ஒரு ஓணானுக்கே உரிய அவலட்சணமான செதில்கள், முகம் இவைகளையும் கண்டு விட்டு இது பாம்பு இல்லை என்று புரிந்து நின்றாள்.

மரங்கள் சூழ்ந்து கிடந்த அந்தக் கொல்லைப் புறத்தில் அவள்புடவை உலர்த்தின இடத்திலிருந்து ஐந்தடி தள்ளி இருந்த வேலி அருகில் அந்த ஓணான் இருந்தது.



ஆடாமல் அசையாமல் அந்த ஓணான் படுத்துக் கிடந்ததை அவள் நன்றாய்க் கவனித்தபோது ஓஹோ செத்துடுத்து என்றே நினைத்தாள்.

ஆனால் அவள் நினைப்பைப் பொய்யாக்குவதுபோல அந்த ஓணானின் வயிறு நாலு தரம் உப்பி, நடுங்கி. வாலின் நுனி மட்டும் மெல்ல அசைந்ததும் அது உயிரோடு இருப்பது அவளுக்குப் புரிந்து போனது.

ஒரு நிமிஷ காலம் அந்த ஓணானையே பார்த்தவளுக்கு என்ன தோன்றியதோ காலைத் தரையில் தட்டி சூ—என்று அதை விரட்டத் தொனி கொடுத்தாள்.

ம்ஹூம்; ஓணான் அசையாமல் அங்கேயே படுத்துக் கிடந்தது

இந்த ஓணானுக்கு என்னாச்சு? சாதாரண ஓணான் போல பார்க்கறதுக்கு இல்லையே...இது ஓணான்தானே, இல்லை வேறு ஏதாவதா?...

அவள் யோசித்துக்கொண்டு நிற்கையிலேயே முன்னங் கால்களைத் தூக்கி, தலையை மேலே எக்கித் தண்டால் பஸ்கி எடுப்பவன் போல மேலிருந்து கீழேயும் கீழிருந்து மேலேயுமாக அது நான்கு ஐந்து முறை உடம்பைத் தூக்கியது.

அட—இது ஓணான்தான். வேற எந்தப் பிராணி இப்படித் தலையை ஆட்டும்...ஓணானே தான்.

இப்போது ஓணான் மெல்ல நகர்ந்தது ஒரு சின்ன வட்டம் அடித்த பிறகு தன்குச்சி முன்னங்காலால் மண்ணைப் பிராண்டிக் குழி பறிப்பது போன்ற பாவனையைச் செய்தது, முதலில் வலதுகால், பிறகு இடதுகால் இப்படி மாறி மாறிப் பலமுறைகள் மண்ணைப் பறித்த பிறகு தன் முகத்தைச் செங்குத்தாக வைத்துக்கொண்டு திமிசு போடுவது போல மூக்கால் மண்ணைச் சமமாய்த் தட்டத் தொடங்கியது.

ஓணானை ஓணானாகப் பார்த்துப் பழகியிருந்த அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியாததாகிப் போனது.

மனுஷன் கையால் குழிதோண்டற மாதிரி குச்சி விரல்களை வைச்சுண்டு மண்ணைப் பிராண்டி, மூக்கால் திமிசு போடறதே?

இதோட கால் விரலே இத்துனூண்டு, அதாலே மண்ணைக் கிளறி அரை டீஸ்பூன் மண்ணைச் சேர்த்துடுத்தே இது என்னத்துக்காக இப்படிப் பண்றது?

யோசித்துக் கொண்டே நின்ற அவளுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது.

அவள் தாய்வீட்டில் பசுமாடு உண்டு. சினைப்பட்ட மாடு. பிரசவகாலம் வந்ததும் முன்னங்கால்களால் மண்ணைத் தேய்த்துப் புழுதியைக் கிளப்பும்—

''எதுக்கும்மா இப்படிப் புழுதியைக் கௌப்புறது'' என்று அவள் அம்மாவிடம் கேட்டபோது, ''வலி தாங்கலை. வாயில்லா ஜீவன்...வேற என்ன பண்ணும்!''— என்று அம்மா சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது.

மாமா வீட்டுக்கு ஒரு சமயம் விடுமுறைக்குப் போயிருந்தாள். அப்போது அவர்கள் வீட்டு நாய்கூட மண்ணைப் பறபறவென்று பறித்துக் குழியைத் தோண்டியது. மாமி சொன்னாள்—'ராணி குட்டிப் போடப் போறது போலிருக்கு...குழி தோண்ட ஆரம்பிச்சுடுத்தே'—என்று

இந்த ஓணானும் முட்டை போடப் போகிறதா? மண்ணைக் கிளறிக் கிளறிக் குழி பறிக்கிறதா? ஜாக்கிரதையாய் முட்டைகளை இட இடம் தயாரிக்கிறதா?

தனக்குத்தானே கண்டு பிடித்துவிட்ட காரணம் ஏகமாய் சந்தோஷத்தைக் கொடுக்க, அவள் அந்த வேப்ப மரத்து நிழலிலேயே குந்தி உட்கார்ந்திருந்து ஓணான் முட்டை போடுவதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

மேற்கொண்டு பத்து நிமிஷங்கள் ஆனபோதும் ஓணான் இரண்டு தடவைகள் வட்டமடித்து, குழிபறித்து



மூக்கால் திமிசு கட்டியதே தவிர வேறு ஒன்றும் நிகழவில்லை.

அவள் கணவனுக்கு அந்த உரத் தொழிற்சாலையில் வேலை. தொழிற்சாலையைச் சார்ந்த காலனியில் அவர்கள் வீடு இருந்தது' முந்திரிக் காட்டை அழித்துக் கட்டிய காலனியைச் சுற்றி இன்னும் முந்திரி, சவுக்கு ஏராளமாய் இருந்ததனால் அந்தக் காலனியில் பாம்புகள், விஷப்பூச்சிகள் நடமாட்டம் தாராளமாய் இருக்கும். கூடுமான வரையில் வீட்டைச் சுற்றிக் குப்பைக் கூளங்கள் சேராமல் அந்த வீட்டுக் குடித்தனக்காரர்கள் பார்த்து வந்தார்கள். என்றாலும் எல்லா பந்தோபஸ்தையும் மீறிக்கொண்டு பூச்சிப் பொட்டுகள் வருவது சகஜமே—

தொழிற்சாலையில் பதினோரு மணி சங்கு பிடிப்பது அவளுக்குக் கேட்டது—

இந்த ஓணான் சுருக்க முட்டை போட்டுதனா தேவலை...அவர் பன்னண்டரைக்கு வந்துடுவார். சாதம் பருப்பு மட்டும்தான் ஆயிருக்கு... சாம்பார், ரஸம் ஆகணும்...

''இங்க நின்னுக்கிட்டு வெயில் நேரத்துல என்னாங்கம்மா பண்ணறீங்க? மாவு அரைக்கணும்னீங்களே—கோதுமை எடுத்துத் தாரீங்களா? மிஷின் மூடறதுக்குள்ளாறப் போய் வந்திருவேன்...''

வேலைக்காரி வந்துவிட்டாள். காலையில் வந்து வாசல் தெளித்து, பத்துத்தேய்த்து, வீடு மொழுகிவிட்டுத் தன் வீட்டுக்குப்போய் காரியங்களைக் கவனித்தப்பின் சரியாய்ப் பதினோரு மணி சங்கு பிடிக்கும்போது அவள் மறுபடியும் வந்து விடுவாள். துணி துவைத்து, சமையலுக்கு அரைத்து, கரைத்துக் கொடுத்துவிட்டு...போனால் மறுபடி மாலை நான்கு மணிக்குத்தான் வருவாள்.

'ஷ்...' என்று விரலை உதட்டில் வைத்து சைகை பண்ணின அவள், வேலைக்காரியை அருகில் அழைத்துச்

சற்றுத் தள்ளிப் படுத்துக் கிடந்த ஓணானைக் காட்டினான்.

''என்னங்கம்மா?...''

''அதைப் பாருடி...அந்த ஓணானை; முட்டை போடப் போறது போலிருக்கு...கொஞ்ச நாழிய தவிச்சுப் போறது...பாரு...பாரு...''

அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே அந்த ஓணான் மறுபடி வட்டமடித்து, குழிதோண்டி மூக்கால் தட்டியது

''மகமாயி, இதுக்கு இருக்கற ஷோக்கைப் பாரேன்... இன்னா அழகா குழி தோண்டி மூக்கால தட்டுது'...' வியந்த வேலைக்காரியும் அவனுக்கருகிலேயே குந்தி உட்கார்ந்து ஓணானை வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினாள்.

உரக்கப் பேசினால் ஓணான் ஓடிவிடுமோ என்ற பயத்திலே இருவரும் சின்னக் குரலில் ரகசியம் பேசுவது போல பேசிக் கொண்டார்கள்.

'வால எம்மா அப்படி நீட்டி வைச்சிடுது? வெறச்ச குச்சி மாதிரி...வயித்த எக்கி எக்கித் தவிக்கிறது பாரு—முட்டை போடட்டும்...''

முன்னைவிட இப்போது ஓணான் அடிக்கடி வட்டமடித்ததும், வாலை 40° கோணத்தில் தூக்கி நேர் கோடு போலவும் வைத்துக் கொள்ள முற்படுகிறது. ''என்ன பண்ணறேள் ரெண்டு பேரும்? கொல்லைப் பக்கம் பேச்சுக் கேக்கறதேன்னு எட்டிப் பார்த்தா, என்ன பண்ணறேள்?''—

இடது பக்கமிருந்த வேலி வழியாக அடுத்த வீட்டுக்காரி எட்டிப் பார்த்து உரக்கக் கேட்கவும் அவன், 'ஷ்' என்று சைகை காட்டி ''ஓணான் முட்டைப் போடப் போறது...கத்தாதே அது ஓடிப்போயிடும்''என்றான்.

''ஓணானாவது நாம பார்க்கும்படி முட்டைபோடறதாவது...நாமகிட்ட வந்தா ஓடிப் போயிடுமே—'' என வியந்த அடுத்த வீட்டுக்காரி இன்னும் நன்றாய் எட்டிப் பார்த்துவிட்டு ''வெள்ளையா இருக்கே அதுவா? ஓணனா அந்தக் கலர்லே இருக்கு?'' என்றாள் நிஜமான ஆச்சரியத்துடன்—



அவன் 'ஆமாம்' என்று தலை ஆட்டிவிட்டு ஓணானைப் பார்ப்பதில் தன் கவனத்தைச் செலுத்தினான்.

அடுத்த இரண்டாவது நிமிஷம் அடுத்த வீட்டுக்காரி அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

'சமையல் ஆயிடுத்து; இன்னும் சாதம்தான் பாக்கி... இதப் பார்த்துட்டுப் போய் வைச்சுக்கலாம்னு வந்தேன்... என்றவன் நா வெள்ளை ஓணானை பார்த்தே இல்லை... நீங்க பார்த்திருப்பிங்களா?' என்று அவனிடம் கேட்டாள்.

''ம்ஹூம் நா பார்த்ததில்லை. மொதல்லே இதோட வாலைப் பார்த்துட்டு கட்டு விரியன்னு பயந்துட்டேன்—அப்புறம்தான் ஓணான்னு புரிந்தது—

தன் நடவடிக்கைகளைப் பார்க்க ஆடியன்ஸ் சேர்ந்து வருகிறது என்ற நினைப்பே இல்லாமல் அந்த ஓணான் வட்டமடித்தது, குழி தோண்டியது, மூக்கால் தட்டியது; அசதியாய்ப்படுத்தது—

அவன் முதலில் ஆச்சரியப்பட்டது போலவே அடுத்த வீட்டுக்காரியும் வியந்து போனாள்.

'இப்படியெல்லாம் ஓணான் கூட பண்ணுமா, என்ன? அதிசயமா இல்லையா?'—

சில நிமிஷங்கள் வரைக்கும் கிசுகிசுப்பது போல பேசினவர்கள் தங்கள் குரலைக் கேட்டு ஓணான் ஓடாது என்ற தைரியம் வந்ததும் சாதாரணமாகப் பேச முற்பட்டார்கள்.

'நா கலேஜ்லே படிக்கறச்சே ஜூவாலஜிதானே படிச்சேன்... டிசெக்ஷன் பண்ண ஓணான்கூட கொடுப்பா... தொடவே அருவருப்பா இருக்கும்... மொதல்லே ஓணானை போர்ட்டுலே வைச்சு ஆணி அடிச்சுட்டு,

ஸ்கேல்பாரல் வாலை ஒட்ட வெட்டச் சொன்னா—நான் என்ன பண்ணேன் தெரியுமா? அறுத்த வாலை எடுத்து நாலுமேஜைதள்ளி உட்கார்ந்துண்டு இருந்த என்பிரண்டு மேலே எறிந்தேன். என் போதாத காலம், அந்த வால் அவளுக்குப் பக்கத்துலே இருந்த ஸில்வியா மேல் விழுந்துடுத்து. அவ மஹா திமிர் பிடிச்சவ... கோபக்காரி... என்னமா என் மேல வாலை எறிவேனு பெரிசாய் சண்டை போட்டா... லெக்சரர் கிட்டே ரிப்போர்ட் பண்ணா—இந்த ஓணானைப் பார்க்கறச்சே எனக்கு அந்த ஞாபகம் வரது......''

அவளை விட அடுத்த வீட்டுக்காரி நாலு வயசு சின்னவள். காலேஜ் படிப்பு படித்தவள். காலேஜ் படிப்பு படிக்காத தன்னிடம் அடுத்த வீட்டுக்காரி பீற்றிக் கொண்டு சிரிப்பது அவளுக்கு எரிச்சலை உண்டாக்க, 'ஷ்' உரக்கப் பேசாதே...அது அவஸ்தை படறது பாரு...இப்ப முட்டை போட்டுடும் என்று பேச்சைத் திசை திருப்பினாள்.

மேற்கொண்டு கால் மணி நேரம்போனதே ஒழிய ஓணான் முட்டை போடுவதாகக் காணோம்...

இது நாழிகை இல்லாத மற்றொரு நினைப்பு அவளுக்குத் தோன்றியது.

ஒரு வேளை உடம்பு சரியில்லாமல் இப்படி அவஸ்தை படறதோ? மரண அவஸ்தை என்பாளே இதுதானோ? அதான் இப்படி சுத்திக் சுத்தி வர்ரதோ?

தன் சந்தேகத்தை அவள் வெளிப்படுத்தவும் வேலைக்காரி, 'இருக்கலாம்—அதான் கெடந்துத் துடிக்குது...'' என்று உடனே ஒப்புக் கொண்டாள்.

அடுத்த வீட்டுச்காரி பதில் பேசாமல் யோசனையில் ஆழ்த்தாள்.—

அந்த ஓணானுக்கு என்ன என்று தெரிந்து விட்டால் தேவலை போல இருந்தது அவளுக்கு.



''என்னம்மா இங்கே குந்நியிருக்கீங்க? வாசல்லே இம்மா நாழி நின்னு கூப்பிட்டுப் பார்த்துட்டு பின்பக்கம் வந்து பார்ப்பனு வந்தேன்— இன்னா பண்றீங்க?''—

அவள் திரும்பி பார்த்தாள்.

பால்கார வைரக்கண்ணு—

முன்பணம் வேண்டும் என்றவனை 'மத்தியானம்வா' என்று சொல்லியிருந்ததால் வந்திருக்கிறான்.

''ஷ்''என்னத்துக்கா இப்படிக் கத்தறே வைரம் அங்கே பாரு...பாவம்...''

அவள் கை நீட்டிய திசையில் வைரக்கண்ணு பார்த்தான். வேலி ஓரமாய் வெள்ளையாய் ஒரு ஓணான் படுத்துக் கிடப்பதைக் கண்டு நாலே எட்டில் அதன் அருகில் போய் நின்று குனிந்தான்.

''அடேடே—ஓணானுங்க......இத்தக் கண்டா பயந்து போனீங்க...இதனோட வாலு கட்டுக்கட்டா இருக்குனு பயந்திட்டீங்களா' இது சாதாரண ஓணான் தாம்மா பயப்படாதீங்க' என்றவன்' ஒருவரும் எதிர்பார்க்காத தினுசில் சட்டென்று கையை நீட்டி ஓணானின் வாலைப் பிடித்துக் தூக்கினான். கண் இமைக்கும் நேரத்தில இரண்டு தடவைகள் பர பரவென்று சுழற்றி அதை வேலிக்கு அந்தப் பக்கம் எறிந்துவிட்டான்.

அவள் பதறிப் போனாள்—

''என்னாப்பா நீ—என்னனு பாருனா ஒரேயடியா தூக்கி எறிஞ்சுட்டயே! வெள்ளை...ஓணான்...அபூர்வமா இருந்தது... கொஞ்சப் விவரம் தெரிஞ்சிக்கலாம்னா என்ன நீ?''—

வைரம் சிரித்தான்— ''இன்னாம்மா அபூர்வம். ஓணான்லே இன்னா அபூர்வம்?...''

''என்ன அபூர்வமா?—நாங்க அரைமணிய பார்த்துண்டே இருக்கோம்—அது காலாலே குழி பறிச்சுது மூக்கால திமிசு தட்டித்து, வாலைத் தூக்கி வைச்சுண்டு

வட்டம் அடிச்சுது—முட்டை போடப் போறதா இல்லை உடம்பு கிடம்பு சரியில்லையான்னு ஆம்பிளையா லட்சணமா கிட்டப் போய்ப் பாருன்னு உன்னைக் கூப்பிட்டா, தூக்கி எறிஞ்சுட்டயே... பாவம்...''

கடகடவென்று சிரித்தான் வைரப்—''அரைமணியா குந்திக்கிட்டிருக்கலெகளா? ஆத்தாடி— இந்தப் பட்டணத்துக் காரங்களுக்கு என்னத்தைத்தான் வேடிக்கைப் பாக்கறதுன்னு இல்ப— என்னப்மா ஒணானைப் போயி அரைமணி...'' மீண்டும் பக பகவென்று அவன் சிரித்தான்—

அடுத்த வீட்டுக்காரிக்கும் வேலைக்காரிக்கும் கூட சப்பென்று போய் விட்டது.

சுவாரசியமான நிகழ்ச்சி ஒன்று பாதியிலேயே கலைபட்டதால் எழுந்த ஏமாற்றத்துடன், ''சரி நா வரேன்'' என்று அடுத்த வீட்டுக்காரி போனாள்.

''உள்ளே வந்து கோதுமையைக் கொடுங்கம்மா... எனக்கு நாளியாவுது'' என்று வேலைக்காரியும் உள்ளே போனாள்—

''வீட்டுக்குள் நுழைந்து பால்காரனுக்கு முன் பணம் கொடுக்கும் போதும், சமையலை முடிக்கும் போதும் கணவனுக்கு உணவு பரிமாறும்போதும், மாலை ரேடியோ கேட்கும் போதும், பிறகு இரவு படுத்துத் தலையணையில் தலையை அழுத்த வைத்த போதும் ''அதுக்கு என்ன?'' என்ற கேள்வி அவளுள் நெருடிக் கொண்டே இருந்தது.

# ஊனம்

அம்மா மன்னை வாரித் தூற்றாத குறையாய்க் கத்திக் கொண்டு போவது கேட்கிறது.

''திமிருடா—அவளுக்குப் பணத்திமிரு. இன்னிக்குத்தான் நன்றாயிருக்கோம்ங்கற அகம்பாவம்—பெத்தத் தாயை மதிக்காத இவோ எப்படி வாழப் போறானு பாத்துடறேன்''—

ஆக்ரோஷமாக அவள் கத்திக் கொண்டே மாடிப்படி இறங்குகிறாள்.

கீழ் வீட்டு மாமிக்கு இந்தக் கத்தல் கண்டிப்பாய்க் கேட்டிருக்கும்—

''சின்ன வயசுலேந்தே அவளுக்குக் கூடப் பொறந்தது இந்த திமிர்தானேம்மா? என்னிக்கு அவோ நம்மைமதிச்சு ரெண்டு வார்த்தை பேசியிருக்கா? மூதேவி—இவோ நன்னா இருக்க மாட்டாம்மா—நிச்சயம் உருப்பட மாட்டா'' கூடப்போகும் அண்ணனின் அசிங்கமான வசவுகளும் கேட்கின்றன.

அநியாயத்தைப் பாருங்கோ மாமி—பெத்த தாய் இத்தனை வருஷம் கழிச்சு வீடு தேடி வந்திருக்கேன்—உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டு வெளியே போகச் சொல்லிட்டா! பெரியவன், அண்ணாவை மதிக்கலை—இவ நன்னா இருப்பாளா?''—கீழ் விட்டு மாமி வாசலுக்கு வந்து விட்டாள் என்பது அம்மா புலம்புவதிலிருந்து எனக்குப் புரிகிறது.

மாடி ஜன்னல் வழியாக எதிர் வீட்டுப் பெண்கள், பக்கத்து வீட்டு மாமா, வாசலில் வந்து நின்று என்ன அமர்க்களம்? என்று பார்ப்பதும் எனக்குத் தெரிகிறது.

பெத்த தாயை இப்படிக் கதறக் கதறத் துரத்துகிறாளே—என்ன பெண் என்றுநினைப்பார்கள். அவ்வளவு

தானே? நினைக்கட்டும்—யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும், தூற்றட்டும், கவலையில்லை.

இவள் என் தாயே அல்லள்—இவளுக்கு நான் மகளல்லள்—இவன் என் அண்ணன் அல்லன்—இவர்கள் குடும்பத்தில் நான் ஒருத்தியே அல்லள் என்ற எண்ணம் வேரூன்ற, மனசே மரத்துப்போன பிறகு யார் தூற்றினால் என்ன, சாபம் கொடுத்தால் என்ன?

எனக்கு நேர் எதிரில் இருந்த கண்ணாடியில் என் உருவம் தெரிகிறது. பார்த்துப் பார்த்துப் பழகிப்போன உருவம்—சின்ன குழந்தையாய் இருக்கையில் கதைகளில் வரும் பிசாசுதான் உருக் கொண்டு வந்து விட்டதோ என்று தானே பயந்து அலறிய என் உருவம்—

கூடத்தின் மங்கிய வெளிச்சத்தில் முகம் அலம்பிப் பொட்டு இட்டுக் கொள்ள அந்த கண்ணாடி முன் போய் நிற்பதற்குக்கூட எனக்கு அச்சமாய் இருக்கும்—

உண்மையை ஏற்றுக் கொள்ள, புரிந்து கொள்ளத் தெரியாத வயது அது—

இப்போது அப்படி இல்லை—நிஜத்தைக்கண்டுபயந்து ஓடாமல் எதிர் நோக்கிப் புன்னகைக்கத் தெரிந்துவிட்டது

மறுபடி என் உருவத்தைக் கண்ணாடியில் பார்க்கிறேன்—

தொட்டால் ஒட்டிக் கொள்ளும் கறுப்பு—பெரிய பெரிய அம்மைத் தழும்புகள் நிறைந்த முகம், சூம்பிப் போன வலது பாதம் புடவை ஓரத்தில் வெளியே தெரிவதும் தெரிகிறது.

நான் எங்கம்மாவுக்கு இரண்டாவது குழந்தை. மூத்தவன் அண்ணா—அடுத்தது நான்—எனக்குப்பிறகு நாலு—ஆக, நாங்கள் மொத்தம் அறுவர்.

சீமந்த புத்திரனுக்குப் பிறகு பெண் வேண்டும் என்ற ஆசையின் காரணமாய் என்னை ஆவலுடன் அறையில்



பார்க்க வந்த அப்பா சொன்ன வார்த்தை—''யார் குழந்தைடீ இது? இப்படி ஒட்டிக்கிற கறுப்பா இருக்கு?''

அப்பா கேட்டதில் தப்பில்லை—அப்பா சிகப்பு என்றால் அம்மா பால் வெளுப்பு—வெற்றிலை சாறு முழுங்கினால் தொண்டையில் நிறம்காட்டுகிற சிகப்பு—தாத்தா பாட்டி சிகப்பு—அத்தைகள், மாமாக்கள் சிகப்பு—அண்ணா சிகப்பு—இப்படி எல்லாம் அழகுக் கூட்டமாய் இருக்கையில் எங்கிருந்து நான் மட்டும், இத்தனைக் கறுப்பாய் பிறந்தேன்.

அம்மாவைப் பெத்த பாட்டி கறுப்பாம்—ஒரு தலைமுறை விட்டு வரும் எந்த விஷயமும் தீவிரமாய் இருக்கும் என்பதை நிரூபிப்பதைப் போல நான் கரிக் கறுப்பு—

புண்ணியா வாசகத்தன்று தொட்டிலில் என்னைக் கிடத்தவேயில்லையாம்—பெரியம்மா ஒருத்தி, ஏண்டா சேது—இது உனக்குப் பொறந்ததுதானே?'' என்று நாலு பேர் நடுவில் உரைக்கிற மாதிரி கேட்டு விட்டதால், அப்பாவுக்குக் கோபம்.

அம்மாவுக்கு அவமானம்.

அதன் பிறகு என்னைக் கண்டாலே ஏனோ அன்பு என்ற உணர்வு எழுவதற்குப் பதிலாய் வெறுப்பே அவர்களுக்குள் பீறிட்டது.

எனக்கு ஒன்னரை வயசு இருக்கும்போது நல்ல காய்ச்சல் கண்டு விட்டதாம்—இந்த வலதுகால் இழுத்துக் கொண்டு சூம்பிப் போனது அப்போதிலிருந்துதான்

அந்த வயசில் நடந்ததெல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. விவரம் புரியாத வயசு—என் சின்ன வயசு எப்படி இருந்தது என்று இப்போது கற்பனைப் பண்ணிப் பார்க்கிறேன். ஒரு இருட்டு மூலைதான் அடிக்கடி ஞாபகத்துக்கு வருகிறது அங்கே நான் உட்கார்ந்து இருக்கிற மாதிரியும் காலை இழுத்து இழுத்து நடக்கிற மாதிரியும்தான் நினைவு எழுகிறது.

இதெல்லாம் போதாது என்றுஎன் ஐந்தாவதுவயசில் எனக்கு மாபாரமாய் பெரியம்மை போட்டது.

முகம், உடம்பு எல்லாம் பெரிய பெரிய கொப்புளங்கள்,—ஊசி குத்த இடம் இல்லாமல்.

அந்த நிலையிலும் நான் எப்படிப் பிழைத்து எழுந்தேன்?

எனக்கு அழகான தங்கைகள் பிறந்ததும் அந்தச் சமயத்தில்தான் என்று நினைக்கிறேன்—

அப்பா ஏதோ வேலையில் இருந்தார். எனக்குநினைவு தெரிந்து அவர் இரண்டு, மூன்று வேலைகள் மாறிவிட்டதால் அப்போது என்ன வேலையில் இருந்தார் என்று ஞாபகம் இல்லை—சுமாரான வரும்படி 'ஓஹோ' என்றும் இல்லை—ஏழைமை என்றும் இல்லை...சுமார் என்னும் படியான நிலை.

எனக்கு ஆறு வயசு ஆகும்போது பள்ளிக்குப் போகத் தொடங்கினேன்.

முதல் சில நாட்களெல்லாம் நடுப்பகலில் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டு,'உன்னைப் பார்த்தா பயமாகஇருக்குனு என்ஸ்கூல் பெண்கள் சொல்லறாம்மா...நான்ஸ்கூலுக்குப் போகலைம்மா' என்று அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதது நினைவிருக்கிறது.

''அவா கிடக்கறா—அசடுகள். உன்னைப் பார்த்தா பயமாயும் இல்லை—ஒண்ணும் இல்லை—நீ வாடியம்மா தங்கம்'' என்று அம்மா அன்பாக அரவணைக்காதது மட்டுமில்லை. ''அதுக்கென்ன பண்ணறது? உன்னைப் பகவான் அப்படி படைச்சுட்டாரே!''என்றுகுத்தலாய்ச் சொல்லிவிட்டு, என் கைகளை விலக்கியதும் நன்றாய் ஞாபகமிருக்கிறது

அப்பா, அம்மாவுக்கு அண்ணா, தங்கைகள் என்றால் தனி அன்பு. அது எனக்குக் கிடையாது என்பது லேசாய் மனசில் உறைந்தாலும் இரண்டாம் கெட்டான்



வயசில்லையா? அவர்கள் கவனிப்பும் அரவணைப்பும் வேண்டும் என்று எத்தனையோ நாட்கள் முரண்டு நின்று ஏமாந்ததுண்டு.—

ஒரு தாயின் வயிற்றில் பிறந்து விட்ட காரணத்தால் அவளின் பரிபூர்ண அன்பை எதிர்பார்க்கும் உரிமை ஒரு குழந்தைக்குக் கிடையாதுஎன்பது என் அனுபவம்—தான் ஆடாவிட்டாலும் சதைஆடும் என்பதெல்லாம் என்னைப் பொறுத்தவரை வெறும் பேத்தல்—

என்னைப் பெத்த வினாடியிலிருந்து வெறுப்பை மட்டும் வளர்த்துக் கொண்டு விட்ட அந்தத் தாயின் நெஞ்சம் கதைகளிலும் காவியங்களிலும் புகழப்படும் தாய்மையிலிருந்து விலகி நின்றது நான் நிதர்சனமாக அறிந்த உண்மை.

''இவளை ஏம்மா வாசலுக்கு அனுப்பறே? என் ப்ரண்ட்ஸ் எல்லாம் நொண்டிப்பிசாசு வந்துடுத்துனு' கேலி பண்ணறா — எனக்கு அவமானமாய் இருக்கு' என்று அண்ணா கத்தும்போதெல்லாம், 'ஏண்டி வாசலுக்குப் போற? போகாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்' என்று அம்மா என்னைக் குட்டின நாட்கள் ஏராளம்.

''கார்த்தால எழுந்ததும் இவோ முகரக் கட்டயிலே முழிக்க வாண்டாம்னா எதிர்ல வந்துநிக்கறது—கர்மம்—கர்மம்—' என்று என் அப்பா தலையில் அடித்துக் கொள்வது, வயசாக ஆகப் புரியத் தொடங்கினதால், எனக்கு என்று ஒரு இருட்டு மூலையை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டு வாழத் தொடங்கினேன்.

எனக்கு வயசு எட்டாகும்போது அப்பாவுக்கு வேலை போயிற்று.

வீட்டில் கோபமும், சண்டையும் தாண்டவமாடத் தொடங்கின.

இதெற்கெல்லாம் அதிகமாக ஆளாக்கப்பட்டவள் நான்.

இந்தச் சமயத்தில் யார் சொன்னார்களோ, இல்லை எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை. ஒரு மிஷனரி நடத்தும் பள்ளியைப்பற்றிக் கேள்விப்பட்டு அம்மா அங்கே என்னை அழைத்துப் போனாள்.

''கால் இல்லாத குழந்தை—முகமும் இப்படி விகாரமாய்ப் போச்சு. மற்ற குழந்தைகளோடு சேர்த்து வளர்க்க முடியலை—இவ அப்பாவுக்கு வேலை இல்லை—எப்படியாவது உங்க ஸ்கூல்லே சேர்த்துக்கணும்''—அம்மா அந்த வெள்ளைக்கார மதர் முன் நின்று கண்களைத் துடைத்துக் கொண்ட நாள் என்னுள் பசுமையாக இருக்கிறது.

வெள்ளை வெளேரென்ற உடையும், சிவந்த முகமும், நீலக்கண்களும், தலையில் முட்டாக்குப் போட்டிருந்த கறுப்புத் துணியுமாய் நின்ற மதரைக் கண்டு நான் பயந்தேன்.

''நான் இங்கே இருக்க மாட்டேம்மா—எனக்குப் பயமா இருக்கும்மா; உன்னோட வந்துடறேம்மா'? என்று அம்மா பின்னால் போய்ப் புகுந்து கொண்டேன்.

அன்றைக்கும் அம்மா ஒரு வார்த்தை கூட ஆறுதலாய் பேசவில்லை— மாறாக, 'என்னடி பயம்? வைச்சேன்னா ரெண்டு' என்று சிடுசிடுத்து என்னை இழுத்து மதர்முன் நிறுத்தினாள.

கையை நீட்டி மதர் என்னை அணைத்துக் கொண்டார்.

அந்த வெள்ளைக்கார மதருக்கு என் சொந்தத் தாய்க்கு உண்டான அருவருப்பு எழாமல், ''இங்கே வா மை சைல்ட்—என்ன பயம்? இங்கே நிறைய குழந்தைங்க உன்னை மாதிரி இருக்காங்க...விளையாடலாம், படிக்கலாம்—என்ன பயம் மை சைல்ட்?''—

என் நினைவு தெரிந்ததிலிருந்து அன்பான வார்த்தைகளைக் கேட்டு அறியாத நான், அன்று முதல் அன்பை அனுபவிக்கத் தொடங்கினேன்.



மாசத்துக்கு ஒருதரம் வீட்டுக்கு ஒருநாள் அனுப்புவார் மதர்.

அழுத கண்களோடு மதரிடம் வந்து நான் நின்ற நாட்கள் எத்தனை?

பள்ளியில் புது உடுப்பு எடுத்துத் தருவார்கள். வீட்டுக்குப் போட்டுக் கொண்டு போய்க் காட்ட வேண்டும் என்று, ஆர்வமாய்ப் போவேன்.

'உனக்கு நன்னா இருக்காதுடீ—பாப்பா, கௌரிக்குக் கொடுத்துடு' என்பாள் என்னைப் பெற்றவள்

ஒருவர் வயிற்றில் பிறந்து விட்டதால் பாசம் பீறிடுமென்பதோ, கூடப் பிறந்தவர்கள் என்பதால் பந்தம் இறுகிவிடும் என்பதோ உண்மையல்ல என்பதெல்லாம் உணரத் தொடங்கினேன்.

எனக்குப் பதிமூன்று வயசு அத்தைக்குக் கல்யாணம் என்று இரண்டு நாட்கள் போயிருந்தேன்.

அத்தையின் அழகைக் கண்டு பெரிய இடம் வாய்த்திருந்தது.

அத்தைக்கு அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். கூட நின்று வேடிக்கைப் பார்த்த என்னை நோக்கிச் சம்பந்தி வீட்டார், 'யார் இந்தப் பொண்ணு? நேத்திலேர்ந்து இங்கேயேசுத்தறது' என்றார்— ஒருநிமிஷ மௌனம். 'எங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணு' என்றாள் அத்தை. பக்கத்திலிருந்த அம்மாவும் தங்கைகளும் வாயே திறக்கவில்லை.

சீ...என்ன மனுஷர்கள் என்ற ஆத்திரம், அவமானம் எழ மதரிடம் ஓடினேன். ''இனிமேல் என்னை வீட்டுக்கு அனுப்பாதீங்க மதர்—எனக்கு அம்மா, அப்பா, கூடப் பிறந்தவங்க கிடையாது— நீங்கதான் எல்லாம்—என்னால் சும்மா சும்மா அவமானப்பட முடியாது—நெஞ்சு சல்லடையாய் பேச்சு—இனி பேச்சுக் கேட்க மனசில் பலம் இல்லை'' என்று அவர் மடியில் விழுந்துக் கதறினேன்.

பந்தம், பாசம், குடும்பம், என்ற உணர்வெல்லாம் அன்று செத்து மடிந்தன—

அவலட்சணத்தைக் கொடுத்த இறைவன் புத்தியைக் கொடுத்திருந்தான். வெளிச்சம் வரும் பல ஜன்னல்களை ஒரு பக்கம் மூடிவிட்டாலும் வேறு பக்கம் இதமான காற்றும், வெளிச்சமும் தரக்கூடிய பெரிய வாசலைத் திறந்து வைத்து விட்டான்.

பி. ஏ. முடித்தேன்—எம். ஏ. தேர்வில் பிரமாதமாக வெற்றி பெற்றேன். மதரின் உதவியோடு நல்ல பாங்க் ஒன்றில் பயிற்சி பெற்ற நான், இன்று ஒரு அதிகாரி—ஆயிரத்து நானூறு ரூபாய் சம்பாதிக்கிறேன்.

குடியிருக்க சின்ன இடம்—மாதவிம்மா என்ற நல்ல இதயம் கொண்ட கிழவி எனக்கு ஆள், துணை எல்லாம்.

வாங்கும் சம்பளத்தில் ஐநூறை மதரின் பள்ளிக்கு என்னை ஆளாக்கிய பள்ளிக்குக் கொடுக்கிறேன். என்னைப்போல் அல்லலுற்ற குழந்தைகளில் சிலரையாவது கரை சேர்க்க இந்தப் பணம் உதவாதா?

நிம்மதியாய் இருக்கிறேன்.

நேற்று மாலை பாங்கிலிருந்து ஆட்டோவில் வந்து இறங்கி, படியேறி மாடிக்குப் போனேன், பாதி வழியிலேயே மாதவிம்மா இறங்கி வந்து, 'உங்கம்மா, அண்ணன் வந்திருக்கு' என்றாள். அவளுக்கு என் கதை ஓரளவுக்குத் தெரியும்.

மேலே போனேன்.

''என் ராஜாத்தி உன்னைப் பார்த்து எத்தனை வருஷமாச்சுடியம்மா—நன்னா இருக்கியா? ஏண்டியம்மா ஒரு தடவைகூட ஆத்துக்கு வரலை? அப்பா படுத்த படுக்கையா கிடக்கறார்டீ...'' என்று அம்மா கட்டிக் கொண்டு அழுதாள்.

கையை பிடித்துத் தாங்கி உட்கார வைத்தான் அண்ணன். ''ஏம்மா—மாடி வீட்லே குடி இருக்கே?



கஷ்டப்பட்டு ஏத்றியே? கீழ் போர்ஷனாகக் குடி இருந்தா உனக்குச் சௌகரியமாச்சே...நான் வேண்ணா நல்ல வீடா பார்க்கட்டுமா?' என்றான்.

அவர்கள் பரிவோ, பேச்சோ என்னைத் தொடாதது எனக்குப் புரிய, 'யார் நீங்கள்?' என்பதுபோல பார்த்து விட்டு உள்ளே போய் விட்டேன்.

'உன் எதிரியையும் அன்பாய் நடத்து' என்று மதர் சொல்லிக் கொடுத்து நான் வளர்ந்தவள்.

ஆதலால் இரவு நன்றாய்ச் சாப்பாடு தயார் பண்ண சொல்லி அவர்களுக்குச் சாப்பாடு போட்டேன்.

வெளியூரிலிருந்து வந்த அலுப்புத் தீர, சாப்பிட்டு விட்டு உறங்கிப் போனார்கள்.

காலையில் எழுந்து காபி சாப்பிட்ட பிறகு குடும்பத்தின் வறுமையை, தங்கைகளின் கஷ்டத்தை அண்ணாவின் மனைவி படுத்தும் பாட்டை அம்மா எடுத்துரைக்க முனைந்தபோது நான் தடுத்தேன்.

''நேத்து, ராத்திரி நேரத்திலே, உங்களைப் போகச் சொன்னா எப்படின்னுதான் சாப்பிட்டுட்டுப் படுத்துக்க சொன்னேன். உங்களுக்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இருக்கிறதா எனக்குத் தெரியலை. நான் நீங்கள்ளாம் இல்லாம நிம்மதியா வாழ்ந்துண்டு இருக்கேன்—ஒரு காலத்தில் உங்க அன்பு வேணும்னு நான். பரிதவிச்சதுண்டு—ஆனா இப்போ அப்படி இல்லை. நான் எனக்கு தானே வாழக் கத்துண்டேன். அதனாலே இனிமேபுதுசா உங்க உறவோ, பாசமோ எனக்குத் தேவையில்லை—எத்தனை சீக்கிரம் இங்கேயிருந்து கிளம்பறேளோ அத்தனை நல்லது—எனக்குப் பாங்குக்கு சுருக்காப் போகணும் வேலை இருக்கு.''

அம்மாவும், அண்ணாவும் இப்படியொரு பேச்சை எதிர்பார்க்கவில்லை.

முகத்தை மூடியிருந்த முகமூடி கிழிய, ஆத்திரம், ஆங்காரம் கொப்பளிக்க, மாற்றி மாற்றிக் கத்தித் தீர்த்தார்கள்.

இதோ, பையை எடுத்துக் கொண்டு பார்ப்பவர்களிடமெல்லாம் வயிறு எரியப் புலம்பிக் கொண்டே போகிறார்கள்.

இப்படிச் சந்தி சிரிக்க இவர்கள் போவது எனக்குக் கஷ்டமாக இல்லை.

நான் உடம்பில் ஊனமுள்ளவன்தான்.

ஆனால், அவர்கள் மனசே ஊனமானவர்கள் அல்லவா! போகட்டும்—எனக்குக் கவலை இல்லை.

# ட்ரங்கால்

அவளுக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்வதென்றால் ரொம்பப் பிரியம். கல்யாணமாகுமுன் பிறந்த வீட்டில் காலேஜ் போகும் கன்னியாக இருந்த நாட்களில் அவளுக்கு எண்ணெய் தேய்த்துவிட என்று ஒரு பெண்மணியை அம்மா நியமித்திருந்தாள், கஸ்தூரி.—அதான் அந்தப் பெண்மணி—அடாது மழைபெய்தாலும் வெள்ளிகிழமை காலை ஆறரைக்கெல்லாம் 'பாப்பா' என்று அழைத்துக் கொண்டு வருவது தப்பாது.

மிளகும் வெந்தயமும் போட்டு காய்ந்த எண்ணெயில் 'சொய்ங்' என்று சப்தம் எழ ஒரு வெற்றிலையைப் பொரித்து எடுத்து, ஒரு கிண்ணம் எண்ணெயை அம்மா கஸ்தூரியிடம் கொடுப்பாள்.

அரைமணிப் பொழுது தலையை அமுக்கி உலுக்கித் தட்டி, உதறி அத்தனை எண்ணெயையும் தலைக்குள் இறக்கிவிடுவாள் கஸ்தூரி.

உடலுக்கும் எண்ணெய் தடவி நீவின பிறகு இதமான வெந்நீரில் சாதக் கஞ்சி சேர்த்த சீயக்காய்த் தூளைத் தேய்த்ததும் குளியல் முடியும்

அவள் துவட்டிக் கொண்டு வருமுன் கணகணவென்று தணல் தயாராய் இருக்கும். மட்டிப்பால் சாம்பிராணி கலவையின் புகை ஈர முடியில் ஏறி அவள் மேனியே மணத்துப் போகும்.

பொல பொலவென்று உதிருதிராய் மென்மையாய் இடுப்புக்குக் கீழ் தொங்கும் முடியைத் தளர்த்திப் பின்னவிட்ட பிறகே கஸ்தூரி அவளை விடுவாள்.

ஆனால், போன மூன்றாம் மாசம் திருமணமாகிக் கணவனுடன் தனிக் குடித்தனம் செய்யப் போபாலுக்கு வந்ததிலிருந்து இதெல்லாம் அவளுக்குப் பழைய கனவாகி விட்டது.

போபால் நகரில், நான்கு ஃபிளாட் உள்ள கட்டிடத்தில் அவர்கள் வலது பக்க மாடி ஃபிளாட்டில் இருந்தார்கள்.

காலையில் ஏழிலிருந்து எட்டுவரைக்கும் தண்ணீர் வரும். குளியல், சமையல், கை கால் அலம்ப என்று எல்லாவற்றிற்கும் அப்போது வைத்துக் கொண்டால் தால் —இல்லா விட்டால் மறுபடி மாலை ஐந்து மணிக்கே பைப்புக்குக் கருணை பிறக்கும்.

வேலைக்காரி பாய் அங்குள்ள இரண்டு ஃபிளாட்டில் வேலை செய்பவள், தண்ணீர் வரும் முதல் அரைமணியில் அவள் வீட்டில் அவசரக் காரியங்களை முடித்துவிட்டு, எதிர் ஃபிளாட்டுக்குப் போனால் பத்து மணிக்குமேல் நிதானமாய்த் திரும்ப வந்து மற்றவேலைகளை முடிப்பாள். அவள் கணவனுக்குக் காலை ஏழரை மணிக்கு ஃபாக்டரியில் இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம்.

காலையில் எழுந்து டிபனை முடித்துத் தண்ணீர் பிடிப்பதைக் கவனித்து, வேலைக்காரிக்கு வேலையைக கொடுத்துக் கணவன் ஆபீஸுக்குப் புறப்பட உதவி பண்ணிவிட்டுக் குளித்தேன் என்று இரண்டு சொம்பு விட்டுக் கொண்டு நிமிர்ந்தால், மதியம் சமையலைக் கவனிக்கத்தான் போது இருந்ததால் வந்த முதல் சில நாட்களில் எண்ணெய்க் குளி குளிப்பதற்குள் அவள் திண்டாடிப் போனாள்.

முதல் நாள் வழக்கம்போல் கின்னம் எண்ணெயைத் தலையில் அமுக்கித் தேய்த்துக் கொண்டு அரை மணி ஊறிய பின் குளிக்கப் போனவளுக்குப் பிடித்து வைத்திருந்த இரண்டு வாளி ஜலத்தில் சிக்கனமாய்க் குளிக்கத் தெரியாமல் போனதால் சீயக்காயைத் தேய்த்து அலசும் முன்னரே தண்ணீர் தீர்ந்துபோனது. கைவலிக்க வலிக்கத் தேய்த்தும் எண்ணெய்ப் பிசுக்கே போகாமல் மொழுக் மொழுக்கென முடி பிசுபிசுத்தது.



எது எப்படியானாலும் சரி—தொடர்ந்து காக்காய் குளியலாவது குளித்தே தீருவது என்று நினைத்தவள் அடுத்த சில குளிமுறைகளுக்குள் இன்னொரு புதுக்கஷ்டத்தையும் உணர்ந்தாள்.

அவள் போய்க் கதவைச் சார்த்திக் கொள்வதற்கும்' போஸ்ட்மேன் வருவதற்குமோ, தோட்டி வருவதற்குமோ இல்லை, பக்கத்து வீட்டுப் பெண்மணி விஸிடிங் வருவதற்குமோ சரியாக இருந்தது. வாசல் மணி 'டிங்டாங்' என்று ஓயாது அலறியபோது எண்ணெய் தலையும் அதுவுமாய் உள்ளே அவள் தவித்துப் போனாள்.

இப்படிக் குளிக்கும்போது வீட்டைக் கவனிக்க ஒருவர் தேவைப்படுவதை, தண்ணீர் பற்றாக்குறையை, எண்ணெய்ப் போகாத தலையின் அவஸ்தையை, வாசனை மணக்கும் சாம்பிராணி தூபம் இல்லாததை அவள் வெகு நன்றாகவே புரிந்து கொண்டு விட்டதால், ''நாட்கள் செல்லச் செல்ல'' எண்ணெய் தேய்த்துக் கொள்ளாவிட்டால் என்ன? குடியா முழுகிவிடும்—நாலு நாட்களுக்கு ஒருமுறை ஷாம்பு போட்டால் போதாதா?'' என்று எண்ணத் தொடங்கி அதையே செயலிலும் காட்ட முற்பட்டாள்.

ஆனால் மாசம் ஒன்று ஆவதற்குள் ஊறவைத்த எண்ணெய்க் குளியலுக்கு அடிமையாயிருந்த தலைமுடி சண்டித்தனம் பண்ணத் தொடங்கியது

தலையில் சதா அரிப்பு—கண்களில் ஜிவு ஜிவு என்ற எரிச்சல்—இதற்கெல்லாம் மசியாமல் இருந்தவள் வாரும் போது முடி பந்து பந்தாகக் கழலத் தொடங்கி, சேர்ந்தாற்போல நான்கு நாட்களாய்த் தூக்கம் இல்லாமல் அவஸ்தையும் பட்டுவிடவே 'சரி—இதற்கெல்லாம் காரணம் நான் எண்ணெய்த் தேய்த்துக் கொள்ளாததுதான்'

என்று தனக்குத் தானே நினைத்தவளாய் அன்று உறங்கி எழுந்ததும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கத் தயாரானாள்.

பெரிய தகர ட்ரம் நிறைய தண்ணீர் பிடித்து வைத்த பின், வேலைக்காரியைப் பக்கத்துவீட்டு வேலைகளை ஒன்பது மணிக்குள் முடித்துக் கொண்டு சீக்கிரம் வந்து விடச்சொன்னாள்.

கணவனுக்கு டிபன் செய்து கொடுத்து அனுப்பி, காரக்குழம்பு, பருப்புத் துவையல், ரஸம், செய்து சமையலை மூடி வைத்தாள்.

அரைக் கிண்ணம் எண்ணெயைப் புகையக் காய்ச்சி ஆற வைத்து உள்ளங்கையில் எடுத்து உச்சந்தலையில் அழுந்த தேய்த்துக் கொண்டு கொஞ்சநேரம் ஊறினாள். கண்களுக்குள் எண்ணெய் கசிந்து எரிச்சல் எடுப்பதற்கும் பாய் வருவதற்கும் சரியாக இருக்கவே 'நான் குளிக்கப் போறேன்—இந்த வெங்காயத்தை உறிச்சிவை—வாசலில் யாராவது கூப்பிட்டாங்கன்னா அம்மா குளிக்கறாங்கனு சொல்லு' என்று ஹிந்தியில் பணித்துவிட்டுக் குளிக்கப் போனாள்.

தூக்கம் வரவில்லை. தலைமுடி கொட்டுகிறது, உடல் பளபளப்பு குறைந்து விட்டது என்று ஏகமாய் எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு விட்டோமே, எத்தனை நாழிகை தேய்த்தால் இந்தப் பிசுக்குப் போகுமோ என்ற மலைப்போடு சுற்றிக் கொண்டிருந்த பழம் புடவையை அவிழ்த்தவள் உடலுக்கு எண்ணெயைத் தேய்த்துக் கொள்ளத் தொடங்கினாள்.

காலிக் கிண்ணத்தைக் கீழே வைத்தபோது வாசல் மணி அடிப்பது தெளிவாகக் கேட்டது.

'அட சட்—சனியன்—நான் எண்ணெய் தேய்த்துக்கிறது யார் மூக்கிலே வேர்க்குதோ? நிதானமாய்க் குளிக்க ஒருநாள் ஒழிய மாட்டேங்குதே!''



இரண்டு நிமிஷத்தில் பாத்ரூம் கதவை பாய் தட்டி மேம் சாப்...மேம் சாப் என்று கூவினாள்.

'யாராய் இருந்தால் என்ன? அம்மா குளிக்கறாங்க... அப்புறமா வாங்கனு சொல்லக் கூடாது?...என்று மனசில் நினைத்தாலும் ''என்ன பாய்?'' என்றாள் உரக்க—

''குஹா சாப் வீட்டுப்பெண் வந்திருக்கா மேம் சாப்... உங்களுக்குப் போன் வந்திருக்காம—உங்க மெட்ராஸிலிருந்து...''

ட்ரங்காலா?

மெட்ராசிலிருந்தா?

கதவை இரண்டு இஞ்சுக்குத் திறந்து பாயிடம் அந்தப் பெண்ணைக் கூப்பிடு என்றாள்—

வந்தாள்—

''என்ன அல்கா?''

''உங்களுக்கு மெட்றாஸிலிருந்து கால், ஆண்டி, உங்கள் போரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள்...' என்றாள் அல்கா...

இருக்கும் கோலத்தில் எப்போது குளித்து, எப்போது போய்ப் போன் பேசுவது?—

''பத்து நிமிஷங்களில் வருகிறேன் அல்கா...எக்ஸ்சேஞ்ஜில் சொல்கிறாயா?''—

அல்கா புறப்பட்டுப் போனாள்—

மீண்டும் கதவைச் சாத்தினவள் இரண்டு சொம்பு தண்ணீரைத் தலையில் கொட்டிக் கொண்டாள். டபராவில் சீக்காயைக் கரைத்து கட்டியும் முட்டியுமாய்த் தலையில் அள்ளி வைத்துத் தேய்க்கத் தொடங்கினாள்.

எனக்கு யார் போன் பண்ணப் போறாங்க?

மாமனார் வீட்டிலேந்து இருக்குமோ?

மாமியாருக்குப் பிரஷர் காரணமாய் மயக்கம் அதிகம் வரதுனுட்டு போன வாரம் எழுதியிருந்தாங்களே, ஜாஸ்ஸ் ஆயிடிச்சோ?

அவளுக்குப் பயமாக இருந்தது.

மாமனார் கூப்பிட்டார்னா ஆபீஸுக்கு அத்தான் நம்பருக்கில்லே போன் பண்ணுவாங்க? என் பெயரைச் சொல்லி, எனக்கு ஏன் பி. பி. போடறாங்க?

மனசுக்கு இப்போது கொஞ்சம் தெம்பாக இருந்தது.

ஸோ—மாமனார் வீட்டிலிருந்து நிச்சயம் இந்தக் 'கால்' இல்லை...

அப்பா, அம்மா யாருக்காவது உடம்பு சரியில்லையோ? உடனே வரச்சொல்லிக் கூப்பிடறாங்களோ? அண்ணிக்கு இது மாசமாச்சே? போன தடவையே சிஸேரியன் பண்ணினாங்களே! இந்த முறையும் அப்படிப் பண்ணி ஏடாகூடமாய் ஏதாச்சும் ஆயிடுச்சா?

அண்ணா நல்லவன்; பாவம் அவனுக்கா இப்படிக் கஷ்டம்?

கண்களை மூடிக்கொண்டு முடியை முன்னால் கொணர்ந்து தேய்த்தவளின் தொண்டையைத் துக்கம் அடைக்க, கண்கள் கலங்கத் தொடங்கின.

சீ—என்ன அசட்டுத்தனமான நினைப்பு? அப்பா வீட்டிலிருந்தோ, அண்ணனிடமிருந்தோ சமாசாரம் வரணும்னா கால் ஃபரம் திருச்சினு சொல்லி இருப்பாங்க? இப்போது மெட்ராஸிலிருந்து இல்லே பேன் வந்திருக்குது...

அவளுக்கு மேலும் மனசில் தெம்பு கூடியது.

அடித் தலையைத் தேய்த்த பிறகு நுனி முடியில் சீயக்காயை அப்பி அவசரமாய்க் கைகள் வலிக்கத் தேய்க்கத் தொடங்கினாள்...

மெட்ராஸிலிருந்து யாரு?

அத்தையாயிருக்குமோ?



அவுங்க வீட்டுலே ஏதாவதுன்னா எனக்கெதுக்கு போன் பண்ணப் போறாங்க? மிஞ்சிப் போனா தந்தி தானே கொடுப்பாங்க?

அவள் தலையை அலசலானாள்.

யாராயிருக்கும்?

நிச்சயமாய்க் கெட்ட சேதி ஒன்றுமில்லை என்று ஏனோ மனசில் பட்டுப் போனதால் தைரியமடைந்தவளாய் மேலும் யோசித்தாள். என் பேரைக் குறிப்பிட்டுக் கூப்பிடணும்னா என்னைத் தெரிஞ்சவங்களாத்தானே இருக்கணும்?

ஒரு வேளை பூமாவாக இருக்குமோ?

பூமா அவள் கல்லூரித் தோழி—பெரிய தொழிலதிபரின் மகனை மணந்து கொண்டு சென்னையிலேயே வாழ்பவள்.

'திடீர்னு ஒருநாள் போபாலுக்கு வந்து நீ குடித்தனம் பண்றதைப் பார்க்கப் போறேன் பாரு?' என்று போன லெட்டரில்கூட எழுதி இருந்தாளே?

அவதான் கூப்பிடுறாளா?

இருந்தாலும் இருக்கும்—

அவளுக்கு என்ன—தண்ணி மாதிரி காசு—ஒரு போன் பண்ணிட்டு ஜம்முனு பிளேன்ல வந்து குதிப்பா—

சிநேகிதி வந்தாலும் வரலாம் என்றநினைப்பு சந்தோஷத்தைக் கொடுத்தது.

மிஸஸ் தாத்தாகிட்டே கத்துக்கிட்ட பெங்காலி ஸ்வீட்டும், மிஸஸ் கேத்திரி சொல்லிக் கொடுத்த சன்னா படூராவும் செய்யணும், 'நீ எப்படி இதெல்லாம் கத்துக் கிட்டேனு' அவ ஆச்சரியப்பட்டு போவா—

மணி வைச்சு தைச்ச பெரிய ஹாண்ட்பாக், என் கிஃப்டா வாங்கித் தாணும். பிர்லா மந்திர், லேக், டி.டி. நகர், ஸான்சி எல்லாம் கூட்டிக்கிட்டுப் போகணும். ஆமா, தனியா வராளோ இல்லை, ஹஸ்பெண்டோட சேர்ந்து வராளோ?

அவள் குளித்து முடித்து விட்டாள். எண்ணெய் போனதா இல்லையா என்று நிதானிக்க நேரம் இல்லை. புடவையைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள்.

முகத்துக்கு மட்டும் பவுடர் போட்டு பொட்டு வைத்து, இரும்பு பீரோ சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டு, 'பாய் நான் இப்ப வந்திடறேன்...வீட்டை பார்த்துக்க...' என்று சொல்லிவிட்டு அரக்கப் பரக்க தெருவில் இறங்கி நடந்தாள்.

திடீரென்று ஒரு நினைப்பு எழுந்தது.

போன மாசம் நாவல் பரிசு போட்டிக்கு நாவல் ஒன்று எழுதி அனுப்பிவிட்டு அதைப்பற்றி ஊருக்கு எழுதியிருந்தாள். 'அந்தப் பத்திரிகை உதவி ஆசிரியர் அத்தானுக்கு பிரண்டுதான்...உனக்குப் பரிசு கிடச்சிருந்தா நான் உடனே தெரிவிக்கிறேன்'...என்று நாத்தனார்—டாக்டர் கமலம்—எழுதியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

மைகாட்! ஒருவேளை எனக்கு முதல் பரிசே கிடைச்சிருந்தா? அதுதான் ஆபீஸுக்கு இவங்களுக்குப் போன் பண்ணறாங்களா? இருக்கும் இருக்கும்...குஹா வீட்டு நம்பர் மாமனார் வீட்டிலே எல்லாருக்கும சொல்லியிருக்கோமே—அவசரம்னா இருக்கட்டும்னு...'முதல் பரிசு ஏ! அப்பா...அதுவா? எனக்கா?...

அவள் மனசின் குதூகலம் தாங்க முடியாமல் லேசாய் ஓடத்தொடங்கினாள்.

அந்தப் பணத்தை என்ன பண்ணலாம்? ஒரு வைர மோதிரம் பண்ணிக்கணும்...அப்புறம் டெல்லி, ஆக்ரா எல்லாம் போய் சுத்திப் பார்த்திட்டு வரணும்...இவங்களுக்கு ஒரு டபிள் நிட் பாண்ட் தைக்கணும்—

குஹாவின் வீடு வந்து விட்டது.

அவள் கதவின் முன் நின்று மணியை அடித்தாள்.

மிஸஸ் குஹா கதவைத் திறந்தாள்.



''ஸாரி, நான் குளித்துக்கொண்டிருந்தேன்'' என்று ஹிந்தியில் பேசிக்கொண்டே அவள் போனை எடுத்து ஆபரேட்டரை அழைத்தாள்.

ஆபரேட்டர் சென்னையுடன் தொடர்பு கொண்டு ஐந்து நிமிஷங்களில் கனெக்ஷன் கொடுப்பதற்குள் அவளுக்கு மனசின் பரபரப்புத் தாங்க முடியாமல் போயிற்று.

கைகளில் வியர்வை கசந்தது. இதயத்தின் படபடப்பு காதில் கேட்டது.

''ஹலோ'' என்ற சென்னை ஆபரேட்டர் ''எக்ஸ்டென்ஷன் ஸிக்ஸ்டீன்?' என்று வினவினாள்.

''ஆமாம்—நான்—பி பி. பேசுகிறேன.''

ஆபரேட்டர் சென்னை நம்பருடன் தொடர்பு கொடுத்தாள்.

'ஹலோ...ஹலோ...' என்று பெரிய, மிகப் பெரிய குரலில் அவள் கத்தினாள்.

''ஹலோ...அம்முகுட்டியோ!'' ஒரு கிழத்தன்மை நிறைந்த குரல் மலையாளத்தில் பதில் கொடுத்தது.

அம்முகுட்டியா?''

''ஹலோ நான் ராஜி பேசறேன்...அங்கே யார் பேசறது?'' அவள் கத்தினாள்.

''ராஜியா? ஐவாண்ட் அம்மு குட்டி... மிஸஸ் நாராயணி ஸலோ... ஹலோ ஆபரேட்டர்''—கிழவர் டொக் டொக் என்று டெலிபோனைத் தட்டி எக்ஸ்சேன்ஜை அழைத்தார்...

எக்ஸ்டென்ஷன் ஸிக்ஸ்டியில் இருக்கும் ‡மிஸஸ் நாராயணிக்கு வந்த போன் என்றும் சென்னை பார்டி ஸிக்ஸ்டி என்றது ஆபரேட்டர் காதில் ஸிக்ஸடீன் என்று விழுந்தால் மிஸஸ் நாராயணி என்ற எவளோ ஒருத்திக்கு போன் வரப்போய் எக்ஸ்டென்ஷன் ஸிக்ஸ்டீனில் இருக்கும் மிஸஸ் குஹா, மிஸஸ் நாராயணன் ஆன அவளை அழைத்து விட்டாள் என்பதும் அடுத்த சில நிமிஷங்களில் தெளிவானது.

அசடு வழிய போனை வைத்து விட்டு அவன் மிஸஸ் குஹாவிடம் சொல்லிக் கொண்டு வீட்டுக்குப் போகத் தெருவில் இறங்கையில் சரியாகத் தேய்க்கப்படாத எண்ணெய் கழுத்தில், நெற்றியில், இறங்கி உடம்பு பூராவும் அவனுக்குக் கசகசத்தது

# மதுரா

ரயில் கிளம்ப இன்னும் பத்து நிமிஷங்களே இருந்தன. அண்ணாவும், மன்னியும் மதுராவுடன் கிளம்பப் போகிறார்கள். ஒருவருஷ காலமாய் என் நெஞ்சு ருசித்த இனிய உணர்வுகளெல்லாம் என்னை விட்டுப் போகப் போகின்றன.

என் துக்கத்தை நன்கு புரிந்து கொண்டது போல ஒரு பக்கம் அண்ணாவும், மறுபக்கம் மன்னியும் வந்து நின்று கொண்டார்கள். வழி அனுப்ப வந்திருந்த அப்பாவும் அம்மாவும் சற்றுத் தள்ளி இருந்தார்கள்.

''ஸோ?...நாங்க புறப்படறோம் இந்தா...உடம்பைப் பார்த்துக்கோ...மாப்பிள்ளையை ரொம்ப வேலை அது. இதனு அலைய விடாதே...'' தோள் மீது கை போட்டு இழுத்து தன்னோடு அணைத்துக் கொண்டான் அண்ணா.

எனக்கும் அண்ணாவுக்கும் பத்து வயசு வித்தியாசம் சின்ன வயசிலிருந்து என்னைக் குழந்தையாய்ப் பாவித்து, பாவித்துப் பழகிப் போனதால், இன்றும், என் இருபத்தெட்டாவது வயசிலும் நான் அவனுக்குக் குழந்தைதான்.

'நீயும் ராகவனும் இத்தனை பொறுப்பா மதுராவை பார்த்துக்கலைனா எங்களால் நிம்மதியா இந்த ஒரு வருஷம் அமெரிக்காவிலே இருந்திருக்கவே முடியாதும்மா. ராதா அண்ட் ஐ ஓவ் எ லாட் டு யூ டு...' அண்ணா தன் மனசில் இருக்கும் எதையோ தெளிவுபடுத்தத் தவித்தான்.

அவன் வார்த்தைகளை ஆமோதிப்பது போலத் தலையை ஆட்டின மன்னி என் கையை எடுத்துத் தன் கையோடு கோத்துக் கொண்டாள்.

நான் ஒன்றுமே பேசவில்லை—

என் மனசு வருத்தம் எல்லோருக்குமே புரிந்துதான். ஒருவரும் பேசாவிட்டால் எப்படி? யாராவது பதில் சொல்ல வேண்டுமே என்று அம்மா முன்வந்தாள்.

''கொழந்தையை இந்து ரொம்ப அழகாப் பார்த்துண்டா...மதுராவும் சமத்து...அவளை ஒரு வருஷம் வைச்சுக்க நாங்களும் அதிருஷ்டம்பண்ணியிருந்தோம்...''

பேச்சு வார்த்தை உணர்ச்சி வசப்பட்டுப் போகவே அப்பா பேச்சை மாத்தினார்.

''ஆமா ... எங்கே ராகவனையும் மதுராவையும் காணோம்?''

முகத்தைத் திருப்பி என் கணவரும் மதுவும் போன திசையைப் பார்த்தேன். சாக்கோ பார் ஐஸ்க்ரீம் ஒன்றைக் கையில் பிடித்துக் கடித்த வண்ணம் மது இவருடன் துள்ளித் துள்ளி வந்து கொண்டிருந்தாள்.

அவள் எப்பவுமே அப்படித்தான்—

குதிகால் தரையில் பாவாமல் அப்படி ஒரு தடைஸ்பிரிங் குதிப்பது போல ஆடி ஆடி நடப்பாள்.

மதுரா...அவள் பெயரில் இருந்த தித்திப்பு அவள் குணத்திலும் அழகிலும் குறைந்தா இருந்தது?

ஆறு வயசு நிரம்பின குழந்தைக்கு எங்கேயிருந்து வந்தது இப்படி ஒரு அழகு, சமர்த்து?

போன வருஷம் அண்ணாவிடமிருந்து இந்தக் கடிதம் வந்த தினம் எனக்கு நன்றாக நினைவிலிருந்தது.

கம்பெனியிலிருந்து மேல் பயிற்சிக்காக என்னை ஒரு வருஷம் அமெரிக்காவுக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறார்கள். ராதாவையும் அவர் செலவிலேயே உடன் அழைத்துப் போகச் சொல்லியிருக்கிறார்கள். மதுராவை உன்னிடமும் ராகவனிடமும் விட்டுவிட்டுப் போக எங்களுக்கு ஆசை. உங்களுக்குத் தொந்திரவாக இல்லாமல் இருக்குமா?''



அண்ணாவின் கடிதத்தைப் படித்தவருக்கு ஒரு சில நிமிஷங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

மதுவா? எங்களோடு ஒரு வருஷமா? மாலை ஆபீஸிலிருந்து வந்த இவரிடம் பூரித்த முகத்துடன் லெட்டரை நீட்டினேன்.

படித்தவர், ''கரும்பு தின்னக் கூலியா? குட்...குட்'' என்று தன் சந்தோஷத்தை வெளிப்படையாகத் தெரிவித்ததோடு அல்லாமல் அன்று இரவே அண்ணாவுக்கு டிரங்கால் செய்து ''என்னப்பா சௌகரியம், அசௌகரியம்னு பேசறே? கரும்புத் தின்னக் கூலியா வேணும்?'' என்று என்னிடம் சொன்னதையே திருப்பிக் கூறவும் செய்தார்.

அப்பா அம்மாவும் உள்ளூரில் இருக்கையில் அண்ணா எதற்கு என்னிடம் பெண்ணைவிடத் தீர்மானித்தான் என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான்.

எங்களுக்குக் கல்யாணமாகி வருஷங்கள் ஆறு ஆகின்றன இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு குறை பிரசவம் ஆனதோடு சரி— பிறகு ஒன்றும் இல்லை. குழந்தைகள் என்றால் இவருக்கு ரொம்பப் பிடிக்கும் அதுவும் மதுகுட்டி என்றால் கேட்கவே வேண்டாம்.

ரீஜனல் மானேஜராகப் பணிபுரியும் இவருக்குக் கை நிறையச் சம்பளம், ஆள் அம்பாரம் எல்லாம் உண்டு-

''வீட்டில் உட்கார்ந்தால் சோம்பேறித்தனம் வளரும் வொய் டோண் யூ டேக் அப் ஸம் ஜாப்?'' என்று பல தடவைகள் இவர் சொன்னதால், பள்ளி ஒன்றில் நர்ஸரி டீச்சராக நான் இருந்தேன். ஒரே காலனியில் இரண்டு தெருக்கள் தள்ளி அப்பா அம்மாவும் நாங்களும் தனித் தனி வீட்டில் இருந்தோம்.

அப்பா அம்மாவின் மேற்பார்வையில் எங்களோடு மதுராவைவிட்டுச் செல்வதைத்தான் அண்ணா அழகாய் 'உன்னோடுவிடப் போகிறேன்' என்று எழுதியிருந்தான்.

அண்ணா அன்பைக் கொடுக்கத் தெரிந்தவன்—நாசுக்கானவன்— குழந்தைகள் இல்லாதவர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்ற இதம் அறிந்தவன்.

மதுரா வந்து சேர்ந்தாள்.

மதுரா...அவளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லட்டுமா?

அன்று மலர்ந்த ரோஜாவின் நிறம். மொழு மொழு வென்ற உடம்பு. வட்டமான கறுப்புக் கண்கள் அந்தக் கறுப்பை மிஞ்சுகிறாற் போல தலைமுடி. நெத்தியில் ஃப்ரின்ஜ் வெட்டின அழகு. மணி மணியாய்ப் பேச்சு. நினைக்கும் போதே ஓடிச்சென்று அணைத்துக் கசக்க வெறியைத் தூண்டும் அசாதாரண கவர்ச்சி.

பிறந்த எட்டாம் மாசம் 'ம்மா'...என்றவள் அடுத்த வார்த்தையாய் 'அத்தை' என்று சொன்னதாலோ என்னமோ என்னிடம் ஒரு அதிதமான பாசம். மதுராவை பள்ளியில் அப்பர் கேஜியில் சேர்ந்தோம்.

நான் வேலைப் பார்க்கும் பள்ளியில் சேரவில்லை என்று அவளுக்கு மகா குறை.

''வொய் கான்ட் ஐ ஜாயின் இன் யுவர் ஸ்கூல் அத்தே?''—என்று கண்களை விரித்துக் கொண்டு கேட்டாள். வடக்கே இருந்ததால் ஆங்கிலம்தான் சரளமாய் வரும்.

''நீ படிக்கறது டிசம்பர்—ஜனவரி பள்ளி கண்ணம்மா நான் இருக்கறது ஜுன்—ஏப்ரல் எப்படியம்மா சரிப்பட்டு வரும்?''—மதுராவுக்கு ஏமாற்றமே.

காலையில் இலரும் நானும் ஒன்றாய் வேலைக்குக் கிளம்பும் போது மதுராவைப் பள்ளியில் விட்டுவிட்டுப் போவோம்.

''ஷால் ஐ ஸிட் ஆன் யுவர் லாப்?'' என்றாள் முதல் தினம் மது.

''வேண்டாம் மது...புடவை கசங்கிடும்?''



மாலை வீடு திரும்பும்போது கேட்காமலேயே மடியில் ஏறி அமர்ந்து கைகளைக் கழுத்தில் மாலையாக்கிக் கொண்டாள் மதுரா.

''இப்போ ஆத்துக்குத்தானே போறோம்—புடவை கசங்கலாம் இல்லியா அத்தே?''

அவள் முகத்தில் குறும்பு; சந்தோஷம்.

வந்த சில நாட்களில் சதா சர்வ காலமும் ஆங்கிலத்திலேயே அவள் பேசினபோது, ஒருநாள் நான் 'என்னம்மா' எப்பப்பாரு இங்கிலிஷிலேயே பேசறே! தமிழ்லே பேச வேண்டாமா? ஐய்ஐய்யோ...இந்தப் பெண்ணுக்குத் தமிழே வரலைனு யாராவது கேலி பண்ணப் போறா?'' என்று கேலி செய்தேன்.

மறுநாள்—

பள்ளியிலிருந்து திரும்பினவள் ''அத்தே இங்கே வா'' என்றாள். வந்தேன்— ''உட்காரு'' என்று என்னை அமர்த்தினவள், பள்ளிப் பையை எறிந்துவிட்டு அபிநயம் பிடிக்கப் போவது போல எதிரில் நின்று கொண்டாள்.

ஒரு கையை ஆட்டி ஆட்டி, ''தோ...தோ...நாய்க்குட்டி...துள்ளி வா வா நாய்க்குட்டி, உன்னைத்தானே நாய்க்குட்டி...ஓடிவாவா நாய்க்குட்டி'' என்று கீச்சுக் குரலில் பாடலானாள்.

வெயிலில் ஆடின சிகப்பு இன்னும் முகத்தைவிட்டு மறையவில்லை

பள்ளியிலிருந்து வந்த குழந்தைக்குப் பசிக்கு உணவு உட்கொள்ள கூடத் தோன்றவில்லை—

கஷ்டப் பட்டு மனனம் செய்து வந்ததை எனக்குச் சொல்லிக் காட்டும் சிரத்தை மட்டும் வெளிப் படையாய்த்துள்ள, பாட்டு முடிந்ததும் பின்புறமாய் வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''நன்னா தமிழ்லே பேசறேனா, அத்தை?'' என்றாள். நேற்று நான் விளையாட்டிற்காக சொன்னதையா இந்தச் சின்னக் குழந்தை இத்தனைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு விட்டாள்.

இதற்குத்தான் என் மேல் எத்தனை—ப் பாசம்? என் வார்த்தை மேல் எத்தனை நம்பிக்கை?

ஒருநாள் இரவு தூங்குபோது தூக்கம் வராமல் புரண்டு புரண்டுப் படுத்தாள் மதுரா

''ஏன் கண்ணம்மா, தூக்கம் வரலையா!'' நான் பேச்சு கொடுத்ததும் உருண்டு, என்னை நெருங்கி இடுப்பில் கால் போட்டு அணைத்துக் கொண்டாள் மது.

ஏதோ கேட்க வேண்டும் போல தோன்றியதால் தலைமுடியைக் கோதிவிட்டு ''அப்பா, அம்மா ஞாபகம் வரதா, மதும்மா?'' என்றேன்.

பதில் சொல்லாமல் ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தாள் மதுரா. பிறகு இந்தக் கன்னத்தில் ஒரு முத்தம், அந்தக் கன்னத்தில் ஒரு முத்தம் என்று எனக்குக் கொடுத்துவிட்டு ''எனக்குத்தான் நீ இருக்கியே அத்தே'' என்றாள்.

ஈஸ்வரா? இது என்ன பந்தம்! இந்தச் சின்ன குழந்தைக்கு எத்தனை விவேகம்!

''பெண்ணை உன்கிட்டே விட்டுட்டு அவா ஒரு வருஷம் போகப் போறா—அதிகப்படியான செல்லத்தை நீ அவளுக்குக் கொடுத்து கெடுக்காம பார்த்துக்கோ...'' என்று என் அம்மா முதல் நாளே சொல்லி இருந்ததால் மதுரா மேல நான் எவ்வளவு பிரியமாக இருந்தேனோ, அத்தனைக்கத்தனைக் கண்டிப்பாகவும் இருந்தேன்.

ஒரு சமயம் ஊருக்கு நல்ல சர்க்கஸ் கம்பெனி ஒன்று வந்திருந்தது, எனக்கும் இவருக்கும் போக முடியாதபடி ஏதேதோ வேலைகள் இருந்ததால் மதுராவை தாத்தா பாட்டி அழைத்துப் போனார்கள்.

''அங்கே போய் தாத்தாவைத் தொந்தரவு பண்ணக் கூடாது. உனக்கு பாப்கார்ன், கொக்கோ கோலா ரெண்டும் வாங்கித்தர தாத்தாகிட்டே சொல்லி இருக்கேன்...வேறே கேட்டுத் தொண தொணக்கக் கூடாது, சரியா?'' என்று உபதேசம் பண்ணி மதுராவை அனுப்பியிருந்தேன்.



இரவு ஒன்பது மணிக்கு அவர்கள் வீடு திரும்பினார்கள்.

பேத்தியை உள்ளே கொண்டுவிட்ட அப்பா கையில் வைத்திருந்த காட்பரிஸ் சாக்லெட்டை என்னிடம் நீட்டினார்.

''என்னப்பா?''

சிரித்தார் அப்பா—''இவளுக்காக வாங்கினேன்ம்மா ...என்ன சொல்லியும் எடுத்துக்க மாட்டேனுட்டா.''

''என் மதூ?''

தூக்கம் கண்களில்கூத்தாட என் இடுப்பை அணைத்து கொண்டாள் குழந்தை.

''நீதானே தாத்தாகிட்டே பாப்கார்ன், கோக் ரெண்டும் வாங்கித்தரச் சொல்லி இருக்கேன். வேற எதும் வாங்கிக்காதேன்னே அத்தே?''

நாங்கள் அத்தனை பேரும் அசந்து விட்டோம்—

இது என்ன கட்டுப்பாடு இந்தச் சின்ன வயசில்?

அன்று மதுராவுக்குப் பிறந்தநாள். எல்லோருமாய் கோவிலுக்குப் போயிருந்தோம்—

தாமரை மொட்டு போல கைகளைக் குவித்துக் கொண்டு ஏதோ வேண்டிக் கொண்டாள் மது—

''என்னம்மா? பெரிய மனுஷிபோல பிரார்த்தனை?'' இவர் கேலி செய்தபோது பதில்சொல்லாமல் சிரித்தாள்.

ஆனால், அன்று மாலை அம்மா எங்களிடம் சொன்னாள், ''இத்துனூண்டுக்குப் புத்தியைப் பாரேன்? என்னம்மா வேண்டின்டேன்னு கேட்டேன் அத்தைக்குச் சுருக்காப் பாப்பா பொறக்கணும்னு வேண்டிட்டேன்'னு சொன்னா!'' இவளுக்கு இதெல்லாம் யார் கத்துக்கொடுத்தார்கள்?

ஒரே வருஷம் தானே? ஓடுவதற்குக் கேட்க வேண்டுமா?

அண்ணாவும் மன்னியும் ஊர் திரும்பி விட்டார்கள் கடலும், நதியும் சங்கமிப்பது போல பெற்றோரும், மகளும் சேர்ந்து கொண்டார்கள்.

இந்த ஒரு வருஷத்தில் எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்! பூப்போல மணக்கும் நினைவுகள்? எல்லாம் இல்லாமல் இனி எங்களால் இருக்க முடியுமா?

கோபித்துக் கொண்டால்கூட முகம் சிணுங்காமல் பூனைக்குட்டி மாதிரி காலடியிலேயே சுற்றும் மதுரா இல்லாமல் எங்களால் இருக்க முடியுமா?

மது இல்லாமல் குளிர்காலத்து மரங்கள் போல ஒன்றுமே இல்லாமல் மொட்டையாய் நாங்கள் நிற்க வேண்டியதுதானா?

''அத்தே...என்ன யோசனை?'' இடுப்பைக் கட்டிக் கொண்டு உலுக்குகிறாள் மதுரா—குனிந்து அவளை அணைத்துக் கொள்கிறேன். முத்தங்களைப் பொழிகிறாள் அவள்—

''மணியாயிடுத்து, ஏறிக்கோங்கோ.''

வண்டி ஏறும்முன் இவரைக் குனிய வைத்துக் காதுக்குள் ஏதோ ரகசியம் முணுமுணுக்கிறாள் மது.

பிறகு என்னை இறுக இணைத்து முத்தமிட்டு விட்டு வண்டி ஏறுகிறாள்.

வண்டி புறப்பட்டுப் போய் விடுகிறது.

என் மனசில் சூன்யம்.

பெற்றவர்களைக் கண்டதும் என்னை மறந்துவிட்டாளோ என்ற ஆதங்கம்—

என் மனசை அறிந்தது போலக் காரில் ஏறினதும் அம்மா சொல்லுகிறாள்;—''ராதா பெற்ற தாயென்றால் —மதுராவுக்கு நீ பெறாத தாய்—ஞாபகம் வச்சுக்கோ இந்து...''

ஆமோதிப்பது போலத் தலையாட்டுகிறார் இவர்.



'உன் மேல் மது அளவு கடந்த பாசம் வச்சிருக்கா இந்து—அப்பா, அம்மாவை ஒரு வருஷம் பிரிந்துவிட்டு இப்போது அவர்களோடு சேர்ந்து ஊருக்குப் போகும் போது உன் நினைவுதான்—யு நோ வாட் ஷி ஸெட் டு மி பிஃபோர் ஷி லெப்ட்? ''அடுத்த லீவுக்கு அனுப்பச் சொல்லி அப்பாகிட்டே சொல்லுங்கோ, அத்திப்பேர்'னு சொன்னா. இன்னும் நாலு மாசம் மறுபடி மது வந்துடப் போறா. ஸோ...சியர் அப் இந்து...''

இவர் சொல்லுவது சரிதான்—குளிர் காலத்தில் மொட்டையாக மாங்கள் அப்படியேவா நின்று விடுகின்றன? மறுபடியும் வசந்தம் வருவதில்லையா? பூக்கள் பூத்து மணத்தைப் பரப்புவதில்லையா?

அப்படித்தான் இதுவும்.

மதுரா மீண்டும் மீண்டும் வருவாள்—எங்கள் வாழ்க்கையில் தென்றலாய் ஆயுசு பர்யந்தம் வீசப் போகிறாள்!

நான் முகம் சிரிக்க, மனம் தெளிய, நிமிர்ந்து உட்கார்ந்து இவரைப் பார்த்துச் சிரிக்கிறேன்.

# ஜுரம்

அம்மணிக்கு ரொம்பக் கவலையாய் இருந்தது. சாப்பாடு இறங்காமல், தூக்கம் வராமல் மனசுக்குள் மரங்கொத்தி போல உட்கார்ந்து கொண்டு சதா கொத்திப் பிடுங்கிய கவலை.

அவளைச் சொல்லி என்ன? அவளின் கவலைக்குக் காரணம் அப்படிப்பட்டதுதான்.

அம்மணிக்குப் பதினாலு வயசில் கல்யாணம். பதினைந்து வயசில் திரண்டதும், கணவனுடன் குடும்பம் நடத்தப் புக்கத்துக்குப் போனவள் எண்ணி மாசங்கள் எட்டாவதற்குள் போன மச்சான் திரும்பிவந்தான் என்ற கதையாய்த் திரும்பத் தகப்பன் வீட்டுக்கே வந்து சேர்ந்தாள். டைப்பாயிடைத் தன்னை வாரிக்கொண்டு போகச் சம்மதித்த புருஷன்காரன் சும்மா போகவில்லை; அம்மணிக்கு வயத்தில் ஆறு மாசக் கருவைத் தந்துவிட்டே போயிருந்தான்.

பிறக்கும்போதே அப்பனை முழுங்கியவள் என்ற பெயரோடு ஜனித்தவள் ருக்கு என்கிற ருக்மிணி.

அப்பா அம்மாவின் கஷ்ட ஜீவனம் அம்மணிக்குப் புரியாததல்ல. அவர்களின் ஒரே பொழுது போக்கு ஒன்றுக்குள் ஒன்றாய், அடுக்கும் சம்படங்களாய்க் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுவதுதான் என்பது அந்தச் சின்ன வயசிலே புரிய ஒரு வருஷ காலம் ஆனதும் பெண்ணை அம்மாளைப் பார்த்து கொள்ளச் சொல்லிவிட்டு வக்கீல் வீட்டிற்குச் சமையல்காரியாகப் போனாள். அவளின் அல்ப சொல்ப தேவையான சாப்பாடு, துணிமணி வகையறாக்களை வக்கீலாத்து மாமி கொடுத்து விட்டதால், வாங்கும் சம்பளத்தை அப்படியே முழுசாய்ப் பெற்றவர்களிடம் கொடுத்துத் தன் பெண்ணை அவர்கள்வளர்க்கும் நன்றிக் கடனைத் தீர்த்து வந்தாள் அம்மணி.



அம்மணியின் கை சமையலைப் பற்றி இங்கே கொஞ்சம் சொல்ல வேண்டும். வத்தக் குழம்பும், சீரக ரஸமும் வைத்தால் கூட வாசனையில் வீடே குளிக்கும் அப்புறம் அரைத்துவிட்ட சாம்பாரும், கூட்டும், பருப்பு ரஸமும் மணப்பதற்குக் கேட்கவா வேண்டும்? அப்படியொரு கை மணம். பட்சணங்கள் செய்யும் விதரணையைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்; மணி மணியாய் முறுக்கு, நாவில் கரையும் மைசூர் பாகு என்று எது செய்தாலும் அதற்கு எங்கிருந்தாவது ஒரு தனி ருசி வந்து புகுந்து கொள்ளும். அடுப்படியில் சாமான்களைச் சிந்தி, அள்ளி களேபரமாக்காமல் அமைதியாய் இருந்த இடம் தெரியாமல் செய்வது அவளின் இன்னொரு விசேஷம்.

பத்து வருஷங்கள் போல ஆகியிருக்கும். விவரம் தெரிந்து அம்மாவோடு இருக்கஆசைப்பட்ட ருக்கு மாசத்துக்கு ஒருதடவை அத்திப் பூத்தாற்போல சித்த நாழிகை வீட்டிற்கு வந்துத் தங்கிவிட்டு ஓடும் தாயிடம் தன் விருப்பத்தைக் கெஞ்சலோடும் அழுகையோடும் சொல்ல முற்பட்டாள்.

பெண்ணின் ஆசை நியாயமானதாகத் தோன்றவே தன் கை வேலையில் உள்ள நம்பிக்கையால் சின்ன போர்ஷன் ஒன்றில் தனிக் குடித்தனத்தை அமைத்தாள் அம்மணி. வக்கீலாத்து வேலையை விட்டாள். யார் யார் வீட்டில் விசேஷ நாட்களுக்குச் சமைக்கக் கூப்பிடுகிறார்களோ அங்குக் காலையில் சென்று காரியங்களை முடித்துவிட்டு மாலையில் பெண்ணோடு இருக்க ஓடி வந்துவிடுவாள்.

அம்மணியின் கைக் காரியம் பத்து வருஷங்களில் அவளை நன்றாகவே ஸ்திரப்படுத்தி விட்டதால், வேலைகளும் அதன் மூலம் வந்த வருமானமும் இவளும், இவள் பெண்ணும் மானமாய் வாழப் போதுமானதாகவே இருந்தன.

பெண்ணைத் தன் சக்திக்கு ஏற்பப்பார்த்துப்பார்த்து வளர்த்தாள் அம்மணி. பெரிசாய் தங்கத்தில் நகையும், ஸில்கில் பாவாடையும் வாங்கிக் கொடுக்க முடியா விட்டாலும் நாள் கிழமைகளுக்குப் புதுசு எடுத்து ரப்பர் வளை, நைலான் ரிப்பன், பிளாஸ்டிக் மணிமாலை என்று அணிவித்துப் பெண்ணைக் கிட்டத்தில் இருந்த பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தாள்-

பலகாரங்கள், பட்சணங்களுக்குத்தான் பஞ்ச மில்லையே. யார் வீட்டில் என்ன செய்தாலும் அதில் சிலவற்றை இவளுக்குக் கட்டிக்கொடுத்து விடுவார்களாத லால், பாதி நாட்களுக்குப் பள்ளியிலிருந்து திரும்பும் பெண்ணுக்கு லட்டுவும், மிக்சரும் கொடுத்து உபசரிப் பாள் அம்மணி.

ருக்கு எஸ். எஸ் எல். ஸி. முடித்த கையோடு மாப் பிள்ளை பார்க்கும் படலத்தைத் தொடங்கினாள் அம்மணி.

''என்னம்மா, நீ எனக்கு வயசு பதினைஞ்சுதான் ரொம்பி இருக்கு. இப்போ என்னப்மா கல்யாணத்துக்கு அவசரம்? உன்னோட கொஞ்ச நாள் ஹாய்யா இருக்கே னம்மா...காலேஜ் படிப்பு படிக்கறேம்மா.''

மகளின் கெஞ்சலை அம்மணி காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. 'அதது-காலா காலத்தில் நடந்தால் தான் அழகு; அப்பன் இல்லாத பெண்ணைக் கவனிக்க யாரும் இல்லை என்ற பேச்சு எழுந்துவிடக் கூடாது; என் கடமையை நான் தெம்போடு இருக்கும்போதே முடிக் கணும்—' என்ற வைராக்கியத்துடன் இருந்ததால் ருக்குவின் பேச்சை இலட்சியம் செய்யாமல் போய் வந்த இடங்களிலெல்லாம் இதைப் பற்றியே பிரஸ்தாபிக்கத் தொடங்கினாள்.

''பெண்ணுக்குப் பதினைஞ்சு முடிஞ்சு, பதினாறு பொறந்துடுத்து; அவளை ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுத்திட்டா கவலை இல்லை. தெரிஞ்ச இடம் ஏதாவது இருக்கா, மாமி?''



வக்கீலாத்தில், ராமன் மாமி ஆத்தில், செட்டியார் வீட்டில், மாடி வீட்டுக் கோமதி மாமியாத்தில், கோவில் களில் கல்யாணங்களில் என்று ஓர் இடம் விடாமல் கண்ணில் கண்டவர்களிடமெல்லாம் விசாரித்தாள்.

''என்னடீ அம்மணி அதுக்குள்ள அவசரம்? ரெண்டு வருஷம் போகப்படாதோ?'' என்றும்—

''கல்யாணத்துக்கு ரெடியா இருக்கியா? கையிலே எத்தனைச் சேர்த்து வெச்சிருக்கே? சீர் செனத்தி என்ன பண்ணுலே;'' என்றும்.

''ஜாதகத்தைக் கொண்டு கொடு இவர் ஆபீஸ் க்ளார்க்கோட பையன் ஒருத்தன் இருக்கானாம். பொருத்தம் பார்க்கச் சொல்ரேன்னா'' என்றும்—

''மேலே படிக்க வையேண்டி அம்மணி—நீ தான் அறியாத வயசிலே அகப்பட்டுண்டு லோல் பட்டே! காலம் மாறிடுத்து; தெரியுமோன்னா? படிச்சு, வேலை பாக்கிற பெண்களுக்குத்தான் இப்போ மவுசு'' என்றும்,

தலைக்குத் தலை பேசினார்கள்.

யார் எது சொன்னாலும் புன் சிரிப்போடு கேட்டாள்; தக்கபடி தலை ஆட்டுவாள் அவ்வளவுதான். தன் தீர்மானத்தை மட்டும் அம்மணி மாற்றவில்லை. ஆனால், ஜாதகத்தைக் கையில் எடுத்த பிறகுதான் பெண்ணுக்கு அங்காரக தோஷம் செம்மையாய்இருப்பது தெரிய வந்தது. இதனுடன் மூல நட்சத்திரமும் சேர்ந்து கொண்டது. மாமனார் இல்லாத இடமாகப் பார்க்க வேண்டும். தோஷத்துக்கு ஈடு செய்கிற மாதிரி பிள்ளை யின் ஜாதகம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட இவளின் அந்தஸ்துக்குச் சரிபட்டு வருகிற இடம் அமைய வேண்டும்.

ஏ. அப்பா:

வருஷங்கள் மூன்று ஓடிப்போயின. பார்த்த ஜாதகங்கள் விசாரித்த விசாரிப்புகள் அலைந்த அலைச்சல்கள் சொல்லி மாளாது.

ரொம்ப காசு பணம் எதிர்பார்க்காத, சாதாரணப் பிள்ளை கண்ணில் படுவதே குதிரைக் கொம்பாயிருந்தது. அப்படிப் பட்டால், அங்காரகத் தோஷத்தைச் சரி பண்ணுகிற ஜாதகம் அமைவது அபூர்வமாயிருந்தது. இரண்டும் சரியாய் வந்த இடத்தில் மாமனார் குத்துக்கல் போல ஜம்மென்று இருந்தார். கிட்டத்தில் போனால் அடிக்க மாட்டார்களா?

அம்மணி தவித்து உருகிப்போன பிறகு எப்படியோ, யார் புண்ணியத்திலோ ஒரு வழியாய் ஓர் இடம் குதிர்ந்தது.

புரோகிதர் வீட்டுப்பிள்ளை எஸ் எஸ். எல். ஸி. படித்துவிட்டு, ஆபீஸ் ஒன்றில் பியூனாக இருக்கிறான். புரோகிதர் காலமாகி விட்டார். இவன்தான் மூத்தவன். குடும்பத்துச் சுமை தாங்கி. கண்ணுக்குச் சுமாராய் இருந்தான்.

''பெண் படிச்சிருக்கா, ஷார்ட் ஹாண்ட் டைப்பிங் கத்துக் கொடுத்து வேலைக்கு அனுப்பிச்சா, உங்களுக்கு ஆட்சேபணை உண்டா?'' என்று கேட்டார்களே தவிர, மற்றபடி அடாவடித்தனமாய் சீர், செனத்திகள் கேட்கவில்லை.

''கட்டிக் கொண்ட புருஷனுக்கு இடம் என்றால் எனக்கு என்ன?' — அம்மணி ஆட்சேபணை ஏதும் சொல்லவில்லை. பாக்கு வெற்றிலை மாற்றி நிச்சயதார்த்தத்தை நடத்தினார்கள்.

''பிள்ளை வேலை பார்த்துண்டே, போஸ்ட் மூலமா பி ஏ. க்குப் படிக்கிறான். பரீட்சை வரது அதனாலே மூணு மாசம் கழிச்சுக் கல்யாணத்தை வைச்சுக்கலாம்'' என்றாள் சம்பத்தியம்மாள்.



அம்மணி சம்மதித்தாள்.

தை மாசம் நிச்சயம் ஆனதற்கு வைகாசியில் முகூர்த்தம் வைத்தார்கள். மனசுக்குள் ஓயாமல் கணக்குப் போட்டுப் பார்த்தாள் அம்மணி. பாங்கில் சேர்த்து வைத்திருக்கும் பணம் மூவாயிரம், தெரிந்த நாலு வீடுகளில் தலைக்கு ஐநூறு என்று கடனுதவி கேட்டிருக்கிறாள்—அது இரண்டாயிரம் ஆக மொத்தம் ஐயாயிரம்.

பிள்ளைக்கு கையில் கொடுக்கப் பேசியிருப்பது ஆயிரத்து ஐநூறு. இரண்டு குண்டு ஒரு திருமாங்கல்யத்தை அரைப் பவுனில் பண்ணலாம். கைக்கு ஒரு ஜதை வளை மூணு பவுனில். நல்ல வேளையாய் தங்கத் தோடு காதில் இருக்கிறது. நகைகள் இரண்டாயிரம் ஆகுமா? கூறை, மற்ற புடவைகளை ஐநூறில் முடித்தால், கல்யாணச் செலவுக்கென பாக்கி ஆயிரம் இருக்கும். இது போதுமா? போதுமோ போதாதோ இருப்பது அவ்வளவுதான். இதற்குள்தான் செய்து முடிக்க வேண்டும். புண்ணியவதி ஆடிட்டர் ஆத்து மாமி அவர்கள் பங்களாவிலே கல்யாணத்தை நடத்தச் சொல்லி இருக்கிறாள். வாசலில் இரண்டு வாழை மரங்கள் நட்டால் போதும். மத்த வீட்டு மாமிகள் கண்டிப்பாய் புடைவையோ, பாத்திரமோ வாங்குவதாகச்சொல்லி இருப்பதையும்!கொண்டு ஒருவழியாய்க் கல்யாணத்தை நிறைக்க பண்ணிவிடலாம் கவலை இல்லை—அப்புறம் வாங்கின கடனை அவர்கள் சமயத்தில் உதவி செய்ததை நினைத்துக் கொண்டே ஆயுசுக்கும் உழைத்து அடைத்து விடலாம்.

வைகாசியில் நடக்கப் போகும் ருக்குவின் திருமணத்தை ஆவலுடன் எதிர்நோக்கிய அம்மணிக்குப் பங்குனியில் மாபாரமாய்க் கவலை உண்டாயிற்று.

'தொண்டை கரகரங்கறது' என்றாள் மகள் ஒருநாள். அடுத்தநாள் 'தலைய வலிக்கிறதம்மா' என்றாள்.

மிளகு, மஞ்சள் பொடி தட்டிப்போட்ட பாலைக் கொடுத்து ''குடி; சரியாயிடும்'' என்றாள் அம்மணி.

மூன்றாம் நாள் தலைவலி இல்லை; ஆனால் கதகதவென்று ஜுரம். தெரிந்த கை வைத்தியங்களைச் செய்தாள் அம்மணி. வாரம் ஒன்றானது.

'தொண்டை வலியும், உடம்புலே அசதியும் அப்படியே இருக்குமாம்' என்று சதா பெண் சிணுங்கியதால் டாக்டரிடம் கூட்டிப் போனாள்.

பல வீடுகளில் நுழைந்து ருசி ருசியாய் சமைப்பதில், அம்மணிக்குத் தெரியாத மனுஷர்கள் இல்லை. மாடி வீட்டுக் கோமதிமாமியின் பிள்ளை டாக்டருக்குப் படித்துவிட்டு பெரிய ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கிறான். அவன் வீட்டுக்கு அழைத்துப்போய் ருக்குவைக் காட்டினாள் அம்மணி.

நாக்கை நீட்டி, கண்களைப் பிதுக்கி, ஸ்டெத் வைத்துப் பார்த்த டாக்டர், ''ஒண்ணுமே இல்லை; ஏன் வீணாக் கவலைப்படறேள்? ஜுரம்கூட சரியாக தொண்ணூற்று ஒன்பது டிகிரிதான் இருக்கு. எந்தக் கோளாறும் இல்லை. வெதர் சேஞ்ச் ஆறதால இப்படி இருக்கும்'' என்றவன் மூன்று நாட்களுக்கு ஸல்ஃபா மாத்திரிகளைச் சாப்பிடச் சொல்லி அனுப்பினான்.

மூன்று நாட்கள் என்ன, மேற்கொண்டு பத்து நாட்களும் கடந்தன.

தொண்டை வலி, உடம்பின் அனத்தல் அப்படியேதான் இருந்தன. மீண்டும் ருக்குவை டாக்டரிடம் அழைத்துப் போனாள் அம்மணி.

''தொண்டை வலி அப்படியே இருக்காம் டாக்டர்; முழுங்கச் சிரமமாய் இருக்குங்கறா. வைகாசி முதல் முகூர்த்தத்திலே கல்யாணம். சாப்பாடு சரியா சாப்பிடாம இளைச்சுப் போயிடுவாளோன்னு கவலையா இருக்கு.''

டாக்டர் ருக்குவை அழைத்துக்கொண்டு பெரிய ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னார். சென்றார்கள்.

கிட்டத்தட்ட மூன்று வாரங்களாய் ஜுரம், தொண்டை வலி, இது எதனால்? காய்ச்சல் அதிகம் இல்லைதான். ஆனாலும் இதற்குக் காரணம்? 'வொய் திஸ் த்ரோட் ப்ராப்ளம்?'

சின்னப்பெண், சந்தேகம் எதற்கு என்று தொண்டை எக்ஸ்ரே, ரத்த, மல, மூத்திர டெஸ்ட்களைச் செய்தான் அவன்.

எல்லா ரிசல்டும் நார்மல்,

சக டாக்டர்களிடம் இதுபற்றிப் பேசினான்.

''வொய் காண்ட் வீ ரூல் அவுட் தி பாஸிபிலிடி அஃப் த்ரோட் கான்ஸர்?'' என்று ஒருவர் சொல்ல, பேரியம் மீல்' கொடுத்து ஸ்பெஷல் எக்ஸ்ரேயையும் எடுத்தாகி விட்டது.

திரும்ப நார்மல்—

அம்மணியின் பேரில் உள்ள அபிமானத்தால், தனக்கும் தன் சகாக்களுக்கும் தெரிந்த அளவு ருக்குவை எப்படியெல்லாமோ பரிசோதித்த பிறகு அம்மணியை தனியாய் அழைத்து அவன் சொன்னான்.

''உங்கப் பெண்ணுக்கு ஒரு கோளாறும் இல்லை மாமி—எல்லா தினுசிலேயும் டெஸ்ட் பண்ணிப் பார்த்தாச்சு, லவலேசம் தப்புத் தெரியலை. சில பேருக்குச் சாப்பிட சாப்பாட்டுல சில சங்கதிகள் ஒத்துக்காம போச்சுன்னா திடீர்னு இப்படி அலர்ஜி ஏற்படறது உண்டு. அப்படி அலர்ஜியாக இருந்தா எந்தப் பதார்த்தம் அவளுக்கு ஒத்துக்கலைங்கறதைக் கண்டுபிடிச்சு அதைத்தவிர்க்கணும். சுருண்டு படுத்துண்டு, உடம்பைப் பத்தியே பேசாம, அவளை அதட்டி வெளியே, வாசல்லே போகச் சொல்லுங்கோ. நாலு பேரோடு பழகினா தன் உடம்பைப்பத்தி நினைச்சுக்க மாட்டா.

இத்தனை வருஷமா சாப்பிடற அதே சாப்பாட்டைத் தானே சாப்பிடுகிறாள். திடும் என்று எது ஒத்துக்காமல் போயிற்று! இதை எப்படிக் கண்டுபிடிப்பது?

டாக்டர் சொன்ன மாதிரி வீட்டுக்கு வந்ததும் பெண்ணிடம், 'உனக்கு ஒண்ணும் இல்லையாம்—படுத்துண்டு மாமாலம் பண்ணாதே—எழுந்திரு. வக்கீல் மாமியாத்துக்குப் பட்சணம் பண்ணப் போறேன். கூடமாட வந்து ஒத்தாசை பண்ணு—'' என்று அதட்டலாய்ப் பேசினாள்.

என்ன அதட்டி என்ன? என்ன சொல்லி என்ன?

அம்மாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ருக்கு சகஜமாக இருக்க முனைந்தாலும் பிராண்டும் தொண்டை வலியையும் மாலையானால் வரும் சுதகதப்பையும் அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை.

சரியாகச் சாப்பிட மறுத்தாள்—

'முழுங்க முடியலைம்மா'—என்றாள்.

'தொண்டைலே எரியறதும்மா—என்றாள்.

'போம்மா,நான் என்ன சின்னகுழந்தையா?வேணும்னு இல்லாததையும் பொல்லாததையும் நினைச்சுண்டு பேசறதுக்கு? வலிக்கிறது''—என்று கண்ணில் நீர் திரள, காதுக்குள் விரலைவிட்டுக் கொண்டு மகள் பேசினதும் இத்தனை நாளாய்த் தோன்றாத பயமும் கவலையும் அம்மணியைப் பிடித்தன.

வேணும்னே கற்பனைப் பண்ணிக் கொள்ளும் பெண் இல்லையே! ஒருவேளை நிஜமாய்த்தான் முழுங்க முடியவில்லையோ? சாப்பிடாமல் உடம்பு இளைச்சு நாராய் போறதே! டாக்டர் பிள்ளையாண்டான் பணம் பைசா வாங்காமல் என்னென்னவோ டெஸ்ட், வைத்தியம் செய்தான், ஒருகோளாறையும் கண்டுபிடிக்க முடியலைன்னான்—சும்மா சும்மா டாக்டரிடம் என்னன்னு போய்க் கேட்பது?

எதிர் ஆத்தில். பக்கத்தாத்தில், தெரிந்தவர்கள் சொன்ன உபாயங்களையெல்லாம் செய்யத் தொடங்கினாள் அம்மணி.



சனிபகவானுக்கு நல்லெண்ணெய் விளக்கேற்றினாள்; துர்க்கைக்கு எலுமிச்சம்பழம் மாலை கோத்துச் சாற்றினாள். அனுமனுக்குக் கடைந்த வெண்ணெய், புத்துக்குப் பால், நவக்கிரக ஸ்தோத்திரமும் வைத்திய நாதாஷ்டகமும் படித்தாள்.

மகளுக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டாள். ஒருநாள் துடைப்பக்குச்சி, அடுத்தநாள் உப்பு, மிளகாய், இன்னொருநாள் ஆரத்தியில் கற்பூரம் என்று சுற்றியவள் யாரோ சொன்னார்கள் என்று நாலு தெருக்கூடும் மண்ணையும் முட்டையையும்கூட சுற்றிப்போட்டு கொள்ளிகண்களைச் சபித்துப் பார்த்தாள்.

ம்ஹூம், ஒன்றுக்கும் பலன் இல்லை.

கல்யாணத்துக்கு முழுசாய் மூன்றுவாரங்கள் இல்லை. இது என்ன சோதனை?

வியாதிக்காரப் பெண்ணை மறைத்து வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விட்டார்கள் என்ற பழி வருமோ?

திரும்ப டாக்டரிடம் கூட்டிப் போனாள்.

''என் பிரண்ட் மனோதத்துவ டாக்டர் கிட்டேயும் பேசிப் பார்த்தேன். அவன் சொல்றான். 'சில சமயம் கல்யாணம்னா பெண்கள் பயந்துப்பா, அதனால் தங்களுக்கு உடம்பு சரியில்லாததாகக் கற்பனைப்பண்ணிப்பா. கல்யாணம் ஆகிப் புருஷனோட இரண்டுநாள் பழகினா சரியாடும்னான். அவன் சொல்றது கரெக்ட்டுனுதான் எனக்குத் தோணறது''—என்றான் அவன்.

அம்மணிக்குத் தெரிந்தவர்களும் வேண்டியவர்களும் ஒட்டு மொத்தமாய் அவளை அதட்டினர். 'ஒண்ணுமேயில்லாத பொண்ணுக்கு நீயே வியாதியைவரவழிச்சுடுவே போலிருக்கே. பேசாம. தேமேனு இருடி—டாக்டர் சொல்ற மாதிரி கல்யாணம் ஆனா—தானே சரியாயிடும் என்றனர்.

அன்றைக்குக் கோவிலில் அர்ச்சனைக்குப் போன போது குருக்களிடம் தன் மனவியாகூலத்தைச் சொல்லி வருத்தப்பட்டாள் அம்மணி.

'டாக்டர் ஒண்ணுமே இல்லேங்கறார்—சாமியை வேறோடு புடுங்கியாச்சு—இன்னும் என்ன பண்றதுன்னு தெரியலை, மாமா.''

''நா சொல்லறதைக் கேளு அம்மணி—இப்படித்தான் தெரிஞ்சவாத்துலே மனசு வருத்தம் இருந்துதாம்; ஒரு நாளைக்குப் பத்து தடவை, பத்து நாளைலே நூறு தடவை விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணுங்கோன்னு ஒரு பெரியவர் சொன்னாராம்; பண்ணியிருக்கா. மனசு கவலை நீங்கிப் போச்சுன்னு அவர் சொல்லி நான் கேட்டேன். நீயும் பத்து நாளைக்குப் பண்ணிப் பாரேன். கார்த்தால எழுந்து குளிச்சிட்டு உட்கார்ந்தா, இஞ்சு மணிநேரம், ஓடிப்போயிடும். ஒரு பாயஸத்தை வைச்சு நைவேத்தியம் பண்ணு—கடைசி நாள் அன்னிக்கு ஒரு சுமங்கலிக்குச் சாப்பாடு போட்டு, முடிஞ்ச அளவு தட்சிணையை வெத்திலைப் பாக்கோட வைச்சுக்குடு— எல்லாம் சரியாறதா, இல்லையான்னு பாரேன்—''

அம்மணி அவர் பேச்சுக்கு அடி பணிந்தாள்.

காலையில் மூன்று மணிக்கு எழுந்து குளித்து, பய பக்தியோடு பாராயணம் பண்ணினாள். ஒன்பது மணிக்குள் அதை முடித்துக் கொண்டு வெளிவேலைகளுக்குப் போனாள்—விடாது ஐந்துமணி நேரங்கள் உட்கார்ந்து படித்ததால் முழங்கால் முட்டுவிட்டுப் போயிற்று. குனிந்து, குனிந்து கழுத்து வலி பிராணனை வாங்கியது. பகலில் வேலை வேறு. திண்டாடித்தான் போனாள்.

ஆனால் சரியாக ஏழாம்நாள் ருக்கு 'அம்மா தொண்டைவலி கொஞ்சம் மறைஞ்ச மாதிரி இருக்கு' என்றபோது உடம்பின்அசதி அம்மணிக்கு ஓடிப்போனது.



எட்டாம் நாள் இன்னும் குணம் தெரிந்தது.

ஒன்பதாம் நாள் ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு சிப்பம் குழம்பு சாதம் சாப்பிட்டாள் ருக்குமணி—மகளின் சிரிப்பும் துள்ளலும் மனசுக்கு இதமாய் இருந்தன. கடைசி நாளன்று லட்ச நாமங்களைப் பாராயணம் செய்து முடித்து, அன்று சுமங்கலிகளுக்கு வயிறாரவிருந்து உணவு படைத்தாள் அம்மணி.

ஒண்டு குடித்தனக்காரர்களுக்கெல்லாம் சந்தோஷம்.

''ருக்கு இப்படிச் சிரிச்சுப் பார்த்து, மாசம் இரண்டாறது மாமி. பகவான் உங்கப் பிரார்த்தனையை நிறைவேத்திட்டான்—''

ஆம்; ஒவ்வொரு முறை ஸஹஸ்ர நாமம் பாராயணத்தைப் படித்து முடித்ததும் நமஸ்காரம் பண்ணுகையில். ''என் பெண் தொண்டை ரணத்தைச் சரியாக்கு, ஜுரத்தைப் போக்கு, அவளை நன்றாய்ச் சாப்பிட வைத்து, திடமாய் வை— வேறொன்றும் வேண்டாம்'' என்று தானே அம்மணி நெஞ்சுருகப் பிரார்த்தித்தாள்?

கைமேல் பலன் இருந்தால் குதூகலத்துக்குக் கேட்பானேன்?

சாப்பிட்டு வெகு திப்தியுடன் சுமங்கலி மாமி எழுந்து கை அலம்பினதும் ருக்கு கையால் மஞ்சள் குங்குமம், தட்சணை, ரவிக்கைத் துண்டு, தாம்பூலம் கொடுத்து விழுந்து நமஸ்கரிக்கச் சொன்னாள்.

''வியாதி வெக்கை இல்லாமல், கெட்டிப்பாய் இருடீ குழந்தை; வேறு ஒண்ணும் வேண்டாம்' என்று அந்த

22854

வயசான சுமங்கலி வாழ்த்திய போது அம்மணிக்கு ஏகத் திருப்தி. சுமங்கலி மாமி சாப்பிட்ட களைப்பில் சற்றுப் படுத்து எழுந்தாள்.

நிரம்பிய வயிறும், தாம்பூலம் தரித்துச் சிவந்த வாயுமாய் சுமங்கலி வாழ்த்தியது வீணாகலாமா?

வாசலில் நிழலாட அம்மணி திரும்பிப் பார்த்தாள்.

மாப்பிள்ளையின் தம்பி, அரக்கப் பரக்க நின்றிருந்தான்.

''மாமி...மாமி...''

''என்ன சுப்பு...என்ன விஷயம்?''

''மாமி செத்த முன்னால் ஆபீஸுக்குப் போறப்போ அண்ணா மேலே பஸ் ஏறி, மாமி... அவன்...அவன்... அந்த இடத்திலேயே மாமி...ஐயோ...மாமி...'' வாய் கோண சுப்பு வாக்கியத்தை முடிக்காமல் 'ஹோ' வென்று கத்தத் தொடங்கினான்.

சரியாய் அரைமணி நேரம் முன்னால், 'வியாதி வெக்கை இல்லாம, தெம்பாய் இரு— வேறே ஒண்ணும் வேண்டாம்' என்று சுமங்கலி மாமி வாழ்த்தியதும், தான் 'அது போதும், வேறு ஒண்ணும் வேண்டாம்' என்று திருப்தி பட்டதும் பளீரென்று நெஞ்சில் சீறிட 'நான்பாவீ —மஹா பாவி' என்று அவலமாய் ஓலமிட்ட வண்ணம் தரையில் சாய்ந்தாள் அம்மணி

# விபத்து

பஸ்ஸின் வேகம் குறைந்ததை உணர்ந்தவனாய் மூடிக் கொண்டிருந்த கண்களை அவன் திறந்தான்.

ஹெட் லைட்டின் வெளிச்சத்தில் சற்று முன் ஒன்றன் பின் ஒன்றாக லாரிகள், பஸ்கள், கார்கள் நிற்பது தெளிவானது.

மணி என்ன?

ஏழு தானா? அதற்குள்ளா இத்தனைக் கருமை?

சென்னையிலிருந்து எவ்வளவு தூரம் வந்திருப்போம் இன்னும் பாண்டிச்சேரிக்கு எத்தனை மைல்கள்?

மைல் கல் ஏதாவது தெரிகிறதா என்று வெளியே ஊன்றிப் பார்த்தான். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.

பஸ் ஒரு குலுக்கலுடன் பிரேக் போட்டு நின்றதும், ஆடி விழுந்து கொண்டிருந்த பலர் கண் விழித்தனர்.

'என்ன ஊருங்க?'

''ஏன் நின்னுடுச்சி? ஊர் ஒண்ணையும் காணோமே?

ஓரிரு குரல்கள் முணுமுணுத்தன.

சிலர் கைகளை மேலே தூக்கி ஹாவ் என்று அசிங்கமாய்க் கொட்டாவிவிட்டு சோம்பல் முறித்து. மரத்துப் போன உடம்பை, கால்களை ஆட்டிக் கொண்டனர். தலையை இப்படியும் அப்படியும் திருப்பி, மளுக் மளுக் கெனச் சொடுக்கிக் கொண்டனர்.

அவனுக்கு முன் சீட்டில் இருந்த பெண்மணி—தலை தொள தொளப்பாய் துவளத் தூங்கி வழிந்தவள். பிரேக் போட்ட வேகத்தில் தலை ஜன்னல் கம்பியில் 'தங்'கென இடித்ததால், 'ஸ் அப்பா...' என்று சலித்த வண்ணம் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

பருத்த மேனியைச் சற்றே திருப்ப எண்ணியவளாய், 'தே, கொஞ்சம் தள்ளுங்க' என அருகில் அமர்ந்திருந்த சோனி கணவரை அதட்டி நகரச் செய்து, ஒரு காலை மடக்கி, ஒரு புறமாய் உடலைத் திரும்பி, ஜன்னல் கம்பி களில் முதுகைச் சாய்த்து, மீண்டும் 'உஸ்... அப்பாடி' என்றாள்.

அந்த அம்மாள் நல்ல பருமன். அழித்தால் சாதாரண சைஸில் ஆறு பேர்களையாவது பண்ணலாம்; அத்தனை தடிமன்.

கறுத்த மேனி; அதில் மிட்டாய் ரோஸ் கலரில் தர்மா வரம் ஜரிகைப் பட்டுச் சேலை, வெள்ளைக் கற்கள் பதித்த பெரிய முகப்பு வைத்த கனமான இரட்டை வடம் சங்கிலி தாலிச் சரடு. கூடவே அவளின் கழுத்து வியர்வையில் மடிப் பில் அகப்பட்டுக் கசகசத்த அழுக்கு மஞ்சள் கயிறு.

உருண்டு திரண்ட கைகளில் மணிக்கட்டைத் தாண்ட மாட்டேன் எனப் பிடிவாதம் பிடித்த தங்க வளையல்கள் காதுகளில் வெள்ளைக் கல் தோடு, மூக்கை மறைத்துக், கொண்டு பட்டையாய் வெள்ளைக் கல் பேசரிகள், எண்ணெய் வழிய வழிய இருந்த தலையில் ஒரு பிசுக்குப் பிடித்த ரிப்பனை வைத்துப் போடப்பட்ட பிச்சோடா. அதை வட்டமாகத் தழுவிய கனகாம்பரம்

பஸ்ஸில் ஏறி அந்த அம்மாளும் அவளின் கணவரும் தன் முன் இருக்கைகளில் அமர்ந்தபோது உண்டாகாத எரிச்சல், கோபம், பஸ் புறப்பட்ட கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அவனுள் தோன்றிவிட்டது.

இந்தக் காதிலிருந்து அந்தக் காதுக்குக் கிழிந்த பெரிய வாயை வைத்துக் கொண்டு ஒரு கணம் மூடாமல் அந்தப் பெண்மணி 'லொட லொட' வென்று கட்டியதும்



கட்டாதுமான தொண்டையில் நாலரைக் கட்டை ஸ்ருதி யில் ஓயாமல் பேசி வந்தது அவனுக்கு வெகு சீக்கிரம் தாள முடியாததாகவே ஆனது.

வேறு ஏதாவது இடம் காலியா—என்று பார்த்தவ னுக்குக் கிடைத்தது ஏமாற்றமே.

என்னென்னவோ பேச்சுக்கள். யார் யார் மண்டை களையோ உருட்டல்கள். குடும்பத்துச் சமாசாரம், அக்கம் பக்கத்து வம்புகள் என ஒன்றுவிடாமல் அவள் அலசிப் பேசினபோது, அவனுக்கு அவன் அறையை ஒட்டியிருந்த தோட்டத்தில் வசித்துக் கொண்டு, மாலை வந்து இருள் சூழத் தொடங்கினாள். 'கிர்ர்...' என்று கத்தத்தொடங் கும் சுவர்க்கோழியின் நினைப்புத்தான் வநதது.

யார் தன் பாட்டைக் கேட்கிறார்கள். யாருக்குத் தன் குரல் இனிமையாக இருக்கிறது என்றெல்லாம் இந்தக் கோழி எண்ணுமோ? பிறருக்குத்தன் செய்கை எத்தனைத் துன்பமாக இருக்கிறது என்று புரிந்துகொள்ளுமோ? இப்படி அசட்டுத்தனமாய்த் தனக்குத்தானே யோசனை பண்ணி 'இது என்ன வெட்டி எண்ணம்?' என்று அவன் சிரித்துக் கொண்டதுண்டு.

தாம்பரத்திலும் மாமண்டூரிலும் பஸ் நின்றபோது 'ஏதாச்சும் வாங்கி வாங்க' என்று கணவனைவிரட்டவும், அவரும் சாதுவாய் இறங்கிப்போய் கடலை மிட்டாய், காராசேவு, ஒரு டஜன் பூவம் பழம் எல்லாம் வாங்கி வந்தார்.

வாய்க்குத் தீனி கிடைத்தால் பேச்சு கொஞ்சம் குறை யலாம் என அவன் சந்தோஷித்தது நடக்காமல், ஒரே சமயத்தில் தின்று கொண்டே 'சப் சப்' என்ற சப்தங்க ளூடே பேசும் கலையை அந்தப் பெண்மணி தொடர்ந்த போது அவனின் வெறுப்பு உச்ச கட்டத்திற்கே போய் விட்டது.

சுவர்க்கோழி—கொஞ்சம் வாயை மூடேன்—

எனக்குத்தான் இத்தனை எரிச்சல் வருகிறதா? அல்லது மற்றவர்களுக்கும் இதே நிலை தானா?

அவன் சுற்றிலும் பார்த்தான்.

அவனுக்கு வலப்புறம் ஒரு வயசான ஆண். வாயில் போட்ட புகையிலைச் சாற்றைச் சற்றைக் கொருதரம் எழுந்து ஜன்னல் வழியாகத் துப்புவதிலேயே அவர்கவனம் இருந்ததே தவிர வேறு எதையும் கவனிப்பவராகவோ அல்லது சகபயணிகளிடம் வாய்கொடுப்பதில் விருப்பம் உள்ளவராகவோ தெரியவில்லை. இதுவும் நல்லதுக்குத்தான்.

அந்தப் பக்கம் ஒரு பிராமணக் குடும்பம். பாண்டிச்சேரியில் சொந்தக்காரர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகிறார்கள் என்பது காதில் விழும் பேச்சுக்களிலிருந்து தெளிவானது.

பின்னால் இரண்டு இளவட்டங்கள் புஸ் புஸ்ஸென்று சிகரெட் புகையை விட்டுக்கொண்டு முதல் நாள் பார்த்த ஆங்கில சினிமாவைக் கொஞ்சம் விமரிசித்தார்கள் அப்புறம் கொஞ்சம் தூங்கினார்கள். மாமண்டூரில் இறங்கிக் காபி சாப்பிட்டபின் இந்தப் பஸ்ஸில் பயணம் செய்யும் இளம்பெண்களைப் பார்ப்பதில் திருப்தி அடையாதவர்களாக, மற்ற பஸ்களையும் ஒரு நோட்டம்விட்டு வந்தார்கள். 'நீலப்புடவைக்காரி விஷயத்தில் ஜீனத் அமன்' என்றான் ஒருவன். இன்னொருவனும் தன் பங்குக்கு என்னென்னவோ பேசினான்.

மற்றபடி முன்னாலும் பின்னாலும், எதிர்ப் பக்கத்திலும் நிறைய ஆண்கள், சில பெண்கள், நாலைந்து குழந்தைகள். பஸ் புறப்பட்ட முதல் அரைமணியில் அத்தனை பேர்களின் குரல்களும் கலந்து ஒலித்தது, கொஞ்சம் கொஞ்சமாய் கேட்கத் தொடங்கியது.

அச்சிறுபாக்கத்தைத் தாண்டின பிறகு லேசாய் மழை பிடித்துக்கொண்டு, வெளிச்சம் குறைந்து இருள் சூழ்ந்



ததும் பஸ்ஸினுள் விளக்குகள் ஏற்றப்பட்டன. ஒருவழியாய்ப் பேசிக் களைத்துப்போன அந்தப் பெண்மணி தூங்கத் தொடங்கினாள். கடவுளே உனக்கு நன்றி— என்ற நினைப்போடு இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தவனின் கொஞ்சம் நிம்மதியும் பஸ் நின்றதில் பறிக்கப்பட்டது.

''ஏன் நிறுத்திட்டான்? என்னாச்சுங்க? என்னத்துக்காக முன்னாலே அத்தனை வண்டிங்க நிக்குதுங்க?''

''சுவர்க்கோழி கத்தத் தொடங்கிவிட்டது. இனி அது எப்போது ஒழியுமோ? பஸ்ஸில் கசமுசா என்ற சப்தம்.

தலைக்குத் தலை கேள்விகள்.

''என்ன விஷயம் கண்டக்டர்?''

''இங்கே ரயில்வே கிராஸிங் உண்டுங்க. ஆனா அதுக்கு இன்னும் ஒரு கிலோமீட்டர் போலப்போவணும். என்னத்துக்காக இப்படி நடு வழியிலே நிறுத்திருக்காங்கனு புரியலியே...பாக்கறேன்.''

கீழே குதித்த கண்டக்டரை இளவட்டங்களும் இன்னும் சில ஆண்களும் தொடர்ந்தனர்.

சாலையில் அப்பியிருந்த கருமையினூடே பின் பக்கத்துச் சிகப்பு விளக்குகள் எரிய வரிசையாய் வண்டிகள் நிற்பதும். ஆங்காங்குக் கும்பல் கும்பலாய் ஜனங்கள் மொய்த்திருப்பதும் மெள்ளத் தெளிவானது.

எண்ணி இரண்டு நிமிஷங்கள்—

கண்டக்டர் திரும்பி வந்தார். கூடவே முன் நின்ற லாரியின் ஓட்டுனர்கள், க்ளீனர் பையன் இன்னும் யார் யாரோ...

''என்னண்ணே?''

''ரயிலு வர்ற சமயம்னு கேட்டை இறக்கி இருக்கறானுங்க—அத்தர் கவனிக்காம லாரிக்காரரு பூந்துட்டாராம்.''

''அடப்பாவி—அப்புறம்?''

''அப்புறம் என்னா விழுப்புரம்! கேட்டை அடிச்சி நொறுக்கிக்கிட்டு லாரிக்காரரு பூந்துட்ட தலால, ரெண்டு பக்கமும் வண்டிகளை நிப்பாட்டிட்டாங்க...''

''அட, ராவணா.''

''எக்ஸ்பிரஸ் ரயிலுங்க வர்ற நேரம். அதனால] இப்போதைக்குப் பாதை கிடையாதாம்.''

'ச்சூ...ச்சூ...' என்ற சலிப்புக் குரல்கள் பஸ்ஸினுள் ஒலித்தன.

''லாரிக்காரரு என்னானாரு?''

''யாரு போய்ப்பார்த்தாங்க? வழி நெடுக்கவண்டிங்க நிக்குது—அம்மாந் தூரம் யாரு போவறது? நாங்களே இப்பத்தான், நீங்க வர்றத்துக்கு அஞ்சு நிமிஷம் முன்னாலே வந்தோம்; போய்ப் பார்த்த ஆளு யாராச்சும் வருவாங்க—அப்ப விபரம் புரியும்—''

வண்டி இப்போதைக்குக் கிளம்பாது என்று தெரிந்த பிறகு பலர் கீழே இறங்கி நின்று கொண்டனர். சிலர் முன்னால் நடந்து சென்றால் விபத்தைப் பார்க்கலாமோ, இன்னும் விவரங்களை அறிந்து கொள்ளலாமோ என்ற நப்பாசையில் சென்றார்கள்.

அவனுக்கு இறங்க மனம் இல்லை என்றாலும் முன் ஸீட் அம்மாளின் தொண தொணப் பேச்சைச் சகியாமல் எழுந்து வெளியே போனான்.

மழை சின்ன தூரல்களாகத் தூறிக் கொண்டிருந்தது. வானத்தில் மருந்துக்கு ஒரு நட்சத்திரம் கூட இல்லை. நல்ல மழை வரப்போவதற்கான அறிகுறியாய் மேகங்கள் திரண்டிருந்தன.

போன இளவட்டங்கள் திரும்பி வந்தன.



''என்ன விஷயம் தம்பி?''—ஜன்னலின் வழியாகத் தலையை வெளியில் நீட்டி அந்தப் பெண்மணி விபரம் கேட்டாள்.

ஆனானப் பட்டவர்களெல்லாம் சும்மா இருக்கையில் இந்தச் சுவர்கோழி மட்டும் ஏன் கிடந்துத் துடிக்கிறது?—

ரயில்லே கிராஸிங் கேட் ரொம்ப தள்ளி இருக்குங்க—அங்க போகலை. ஆனா வழி நெடுக ஆளுங்கதான்—எண்பது மைல் ஸ்பீடுலே வந்து கேட்டைத் தள்ளிகிட்டு லாரி புகுந்துடுச்சாம். லாரி டிரைவரு அவுட்டு தான்னு பேசிக்கறாங்க.''—

''அடக் கட்டையிலே போறவனே'' என்றார், பிராமணர்.

''யமராஜா ரெண்டு கையையும் விரிச்சுண்டு நின்னு வாவான்னா, வரமாட்டேங்க முடியுமோ?'' என்று ஒத்து ஊதினாள் பிராமணரின் பாரியாள்.

''தட் ஈஸ் ஹிஸ் ஃபேட்'' என்றது ஒரு பேண்ட் அணிந்த பெண்ணின் குரல். சுவர்கோழி சும்மா இருக்கலாமா? தன் பங்குக்குக் கட்டைக் குரலில் கத்த ஆரம்பித்தது.

''யாரு வீட்டுப் பிள்ளையோ, எந்த மகராசி பெத்த ராஜாவோ? ம்...போச்சு...பொசுக்குனு போச்சு... தண்ணி போட்டுக்கிட வேண்டியது. கண்மண் தெரியாம வுழுந்து சாக வேண்டியது—இவன் லாரியை ஓட்டின வேகத்திலே இன்னும் யார் யாரெல்லாம் பலி ஆகி இருக்காங்களோ?'' லாரி டிரைவர் தண்ணி போட்டதையும் சிலரைப் பலி வாங்கிய பின் தானும் செத்ததையும்கூட இருந்து பார்த்த மாதிரி அந்தப் பெண்மணி பேசினாள்.

கேட்டை நெருங்குகையில் வண்டிக்குள் இருந்த அனைவருக்கும் என்ன காட்சிகளைக் காணப் போகிறோமோ என்ற பதைப்பும்—

''நீங்க சொல்றது மெய்தாம்மா—அந்தக் கேட் பக்கத்திலேயே கேட்மேனோட குடிசை இருக்குது. லாரி மோதி எங்கப் போய் நின்னுதோ, யார் யார் அதுக்குத் தீனி ஆனாங்களோ புரியலை''—சாலையில் நின்றிருந்த ஒரு காக்கி நிஜார்காரர் பதில் சொன்னார்.

அம்மாள் தன் கணவனைக் கிளப்பினாள்.

''தே—நீங்க போய்ப் பாருங்க, சும்மா வெட்டியா இங்க உட்கார்ந்திட்டு—என்ன பண்ணறீங்க? பாவம் யார் மாட்டிக் கிட்டாங்களோ, எனக்கு மனசு பதைக் குதே—''

''மழை வலுக்குது...நான் எப்படிப் போறது?... பாரு இறங்கினவங்க எல்லாம் வண்டிக்கு வந்துட்டாங்க. பாரு'' அவர் மெல்ல முனங்கினார்.

இந்தப் பெண்மணிக்கு ஏன் மனசு பதைக்கவேண்டும் என்று அவன் யோசித்துக்கொண்டே பஸ்ஸில் ஏறினான்.

''எப்ப வழி விடுவாங்களாம்?''

யாரோ கேட்ட கேள்விக்கு, தனக்குத்தான் சகலமும் தெரிந்த மாதிரி அந்த அம்மாளே பதில் சொன்னாள்.

''யாரு கண்டது? போலீஸ் வரணும்பாங்க; ரயிலு வண்டிங்க போகணும்பாங்க, பொணத்தை எடுக்கப் படாதும்பாங்க, என்னென்னவோ பேசிக் காக்க வைப் பாங்க இல்லிங்களா, டிரைவர் சாரு?''—

பீடி பிடித்துக் கொண்டிருந்த டிரைவர் பதில் ஏதும் கூறவில்லை.

போது விடிஞ்சா நாத்தனார் பொண்ணுக்குக் கல் யாணம்—இன்னிக்கு ஜானவாஸம். பொழுதோட போயிடுவோம்னு நினைச்சேன்; இப்படி நடுக்காட்டிலே மாட்டிண்டுட்டோமே, ஈஸ்வரா?''

மாமி அங்கலாய்த்தாள்.

முன்னால் எங்கோ இருந்த கைக்குழந்தை ஒன்று உரக்க அழத்தொடங்கியது.



''சரியாச் சொன்னீங்க போங்க—இப்படித்தான் எங்க ஊர்லே கார்க்காரன் ஒரு ஆளுமேல ஏத்திட்டான். மூளை சிதறிப்போய் ஆளு அந்த எடத்திலேயே அவுட். உறவுக் காரங்க அளுவறாங்க அளுவறாங்க, அப்படி அளுவறாங்க போலீஸ் வந்து இங்கே கோடுபோட்டு அங்கோ போட்டு பண்ண வேண்டியதெல்லாம் பண்ணி அப்புறமா மூட்டையிலே அள்ளிக் கட்டிக் கொடுத்தாங்க. அந்த மாதிரி இப்பவும் செஞ்சு முடிச்சப்புறம்தானே நமக்கு வழி விடுவாங்க? அதுவரைக்கும் நிக்க வேண்டியதுதான்.''

பேசி முடித்த பெண்மணி பையிலிருந்த தண்ணி புட் டியைக் கணவரைவிட்டு எடுத்துத் தரச்சொல்லி அரை பாட்டில் ஜலத்தை ஒரே மூச்சில் குடித்தாள் பின்பு வாழைப்பழம் இரண்டை உறித்து, கிள்ளி வாயில் போட்டுக் கொண்டே பேச்சைத் தொடர்வதற்குள் இளைஞன் ஒருவன், கீழே நின்றிருந்தவன், 'ஆ' என்று அலறிவிட்டு, வண்டிக்குள் தாவி ஏறினான்.

''என்னா தம்பி?''—

''பாம்புங்க...கால் மேல ஏறி ஓடுது—''

''பாம்பா? எங்கே, எங்கே?''—பஸ் விளக்கு வெளிச் சத்தில் பயணிகள் பாம்பு தெரிகிறதா என்று எட்டிப் பார்த்தார்கள்.

ம்ஹூம்—ஒன்றும் இல்லை.

''இப்படித்தாங்க எங்க ஊர்லே ஒரு பையனைப் பாம்பு கடிச்சி...'' சுவர்க்கோழி யாரும் தன் பேச்சைக் கேட்கிறார்களா இல்லையா என்ற எண்ணமே இல்லாமல் நீளமாய்ப் பேசியது சரியாக் காதில் விழாதபடி கைக் குழந்தையின் அலறல் அதிகமானது.

''பசிக்குது''என்று ஒரு சிறுவன் சிணுங்கினான்.

''தலையை வலிக்குதுங்க'' என்றாள் பெண் ஒருத்தி.

''ஜானவாசத்துக்குக் கார் ஏற்பாடு பண்ணியிருக்க ளாமா?'' என்றார் பிராமணர்.

''ஓ! திஸ் ஈஸ் எ ரியல் போர்'' என்றான் இளைஞன்
பேண்ட் போட்ட பெண்ணைப் பார்த்தபடி.
பேச்சுக்கள்; கேள்வி பதில்கள், எரிச்சல் கலந்த அலுப்
போடு முக்கி முனகிக் கொண்டு மேற் கொண்டு இருபது
நிமிஷங்கள் ஊர்ந்தன.
திடீரென்று சாலையில் சலசலப்பு.
''பாதை சரியாயிருக்காம்; வழி விடறாங்க.'
சோர்ந்திருந்த உள்ளங்களில் சுறுசுறுப்பு.
இது நாழிகை இல்லாதபடி திடீரென்று எதிர்சாரியில்
வண்டி விளக்குகளின் வெளிச்சம் தெரியலாயின.
''பாதை சரியாகிடுச்சா? அதுக்குள்ளாவா? லாரிக்
காரரு என்னானாரு? யார் யாருக்கு அடி? போலீஸ் வந்
திருச்சா! ரயிலு வண்டிக போயிடுச்சாமா?''—
பஸ்ஸுக்குள்ளிருந்து பிறந்த பல கேள்விகளுக்குப்
பதில் சொல்ல வேறு யாரும் கிடைக்காததால் பயணி
களை ஏதோ சமாதானங்களைக் கூறிக் கொண்டார்.
தாண்டிச் சென்ற வண்டிகளில் ஒன்றை நிறுத்தி
விபரம் கேட்போம், என்றதும் நடக்காதபடி, ஒரு
நாழிகை காத்துக் கிடந்த அலுப்பில் அவரவர் ஓட்டம்
பிடித்துக் கொண்டிருந்தனர்
ஒரு வழியாய் இவர்கள் பஸ்ஸும் புறப்பட்டது.
''அந்த ஆள் முழுசா கிடைக்காரோ, இல்லை தூள்
தூளா ஆயிட்டாரோ? குழந்தைங்க பயப்படப்போவது.
முகத்தை இப்படித் திருப்பிடுங்க...''
''புது லாரியாமில்லே?''
''அவனுக்கு என்ன? இன்ஷூரன்ஸ் இல்லே கொடுக்
கப் போவுது?''
''சின்ன வயசுக்காரனாமே?''
''பிள்ளைக் குட்டிங்க இருக்கும்—பாவம்''—
கேட் வந்து விட்டது.



இவர்களின் பஸ் அந்த இடத்தை அடைவதற்குள் எதிர்சாரி காலியாகவே கொஞ்சம் நிதானிக்கமுடிந்ததால் டிரைவர் கேட்டினுள் மெள்ள வண்டியைச் செலுத்தினார்.

இந்தப் பக்கம் கேட் நன்றாய்த்தானே இருக்கிறது?
லாரியும் ஆட்களுமாய் சிதைந்து வழி நெடுகக் கிடக்கப் போகிறார்கள் என்று எண்ணிப் பார்த்தவர்களுக்கும் இடம் சுத்தமாக இருந்தது ஆச்சரியத்தைத் தந்தது.

நீலச் சட்டை, டிராயர் அணிந்த இருவர் மட்டும் கையில் சிகப்பு லாந்தரை வைத்துக் கொண்டு தண்டவாளங்களின் மத்தியில் நின்றிருந்தனர்.

''அட! மாணிக்க அண்ணா? என்னங்க விஷயம்?''—

டிரைவருக்குத் தெரிந்த ஆள் போலும்—வண்டியைச் சற்றே நிறுத்தி அவர் கேள்வியைக் கேட்டதும் ''ம்...ம்... போங்க போங்க'' என்று வண்டிகளை ஓட்டிக் கொண்டிருந்த மாணிக்கம் நிமிர்ந்தார்.

''யாரு? துரையா? ஒண்ணுமில்லேப்பா...கேட்டை இறக்கிறபோது லாரி உள்ளார நுழைஞ்சிடுச்சி. அந்தப் பக்கக் கேட்டைக் கடக்கறதுக்குள்ளே கேட்டு கீழே இறங்கிட்டது அதை லேசாய்த் தட்டிக் கேட்டு லாரி ரோடுக்கு வந்தால் கேட்டு வேலை பண்ணலை—ஸ்டேஷனுக்குத் தகவல் அனுப்பிச்சுப் பதில் வரதுக்கு லேட் ஆயிடுச்சு. ரயில் வண்டிக் கேட்டைக் கடக்கும்போது விபத்து உண்டாகக் கூடாதுன்னுட்டு இங்க நின்னு ட்ராபிக்கைக் கண்ட்ரோல் பண்றோம்' அவ்வளவுதான்''

''லாரி எங்கே? டிரைவருக்கு ரொம்ப காயமா?''

''அதெல்லாம்ஒண்ணுமில்லே—அதோ அங்கேநிக்குது பாரு லாரி—ரயில்லே ஆபீஸருங்க வந்து பார்த்துட்டாங்கன்னா அவரை விட்டுடுவோம்—சரி...சரி... கிளம்பு. பாதையை அடைக்காதே—''

லேசாய் நசிங்கிக் கிடந்த கேட்டுக்கு அப்பால், ஓரமாய் ஒரு லாரி—அலுங்காமல் குலுங்காமல் நின்றுருந்தது.

அதைத் தாண்டும்போது பஸ் உள்ளே இருந்த அத்தனை பயணிகளும் ஒட்டு மொத்தமாய் எட்டிப் பார்த்தார்கள். உடைத்திருந்த ஹெட் லைட் மேல் சாய்ந்த வண்ணம் டிரைவர் பீடி பிடித்துக் கொண்டிருக்க, லாரி மற்றபடி முழுசாய் மொட்டு போல நின்றிருத்தது.

''இதுவா? இதுங்களா அந்த லாரி?''

சுவர்க் கோழியின் குரலில் இருந்த ஏமாற்றம் அவனுக்கு நன்றாய்ப் புரிந்தது.

பாண்டிச்சேரிஅரவிந்தர் ஆஸ்ரமத்தில் சிலமாசங்கள் தங்கி, அவரின் நண்பனாகி, பின் தன்நாட்டுக்குத் திரும்பிவிட்ட வெள்ளைக்கார நண்பன் ஒருவன், 'ஏன் உங்கள் நாட்டில் ஜனங்கள் ஆங்காங்கே என்னேரமும் சதா நின்று வெட்டிப். பேச்சுப் பேசுகிறீர்கள்? அவரவர்களுக்கு வேலை, பொறுப்பு என்று ஏதும் இல்லையா? அப்புறம் ஒன்றைப் பத்தாக்கி, நூறாக்கி, கண் காது ஒட்டவைத்துப் பேசுகிறார்களே இது ஏன்?—உங்களின் வளர்ச்சிக்கு இந்தப் பழக்கம் உதவுமா?'' என்று கேட்டது இப்போது திடீரென்று ஞாபகத்துக்கு வர அவன் வாயை விட்டுக் கடகடவென்று சிரிக்கத் தொடங்கினான்.

# திருடன்

கிச்சாமி 'தாம்தூம்' என்று குதித்துக்கொண்டிருந்தார். நாலு நாட்களாய் அவர் வீட்டில் திருடுபோகிறது யார் எப்படித் திருடுகிறார்கள் என்பது மாயமாக இருந்ததால் கிச்சாமியின் கோபம் கட்டுக் கடங்காமல் இருந்தது.

அந்தச்சின்ன டவுனிலிருந்து கிச்சாமியின் வீடுவினோதமான அமைப்பைக் கொண்டது 'ப' எழுத்துப் போல இருந்த அந்த வீட்டின் நடு மத்தியில் தான் இருந்து கொண்டு, இந்தப் பக்கத்தையும் அந்தப் பக்கத்தையும் தலா எழுபத்தி ஐந்து ரூபாய் என்று வாடகைக்கு அவர் விட்டிருந்தார். இந்தப் பக்க வீட்டில் கல்யாணமாகி எட்டே மாசங்களான சாரதா, ராமபத்திரனும், அந்தப் பக்கம் பதினைந்து வருட தாம்பத்திய வாழ்க்கையில் ஆறு குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட சீனு சாஸ்திரி தம்பதியும் குடும்பம் நடத்தி வந்தார்கள்.

கிச்சாமியின்போர்ஷனை ஒட்டியிருந்த வராந்தாவில் ஒரு சமையல் அறையும் ஒரு சின்னப் படுக்கை அறையும் உண்டு. அதில் கிச்சாமியின் அம்மங்கா—அந்த வீட்டுப் பெண் போல வளர்ந்தவள்—தன் புருஷனுடன் பல காலமாய் இருந்து வருகிறாள்.

இரண்டு பக்கமும், எதிர் சாரியிலும் அக்ரஹாரத்து வீடுகள்—கொல்லைப்பக்கம் சவுக்குத் தோப்பும், அதை அடுத்து வயல்களும் அமைந்திருந்தன.

வீட்டைச் சுற்றி நாலு தென்னை, ஒரு மா, எலுமிச்சை மரங்களும், இரண்டு அரளிச் செடிகளும் இருந்ததால் பாதுகாப்பாக இருக்கட்டுமே என்று சுற்றி வேலி போட்டிருந்தார் கிச்சாமி.

இத்தனை பந்தோபஸ்து இருந்தும் கிச்சாமியின் இல்லத்தில் திருடு போகிறது.

ஆறு மாசங்களுக்கு ஒரு முறை தென்னை மரங்களில் இருக்கும் காய்களைம் பறிக்கும் போது, மட்டை, பன்னாடை, காய்ந்த பாளை இலைகளை வெட்டச் சொல்லி வெகு சிரத்தையாகக் காய வைத்து, வெந்நீர் அறையில் அடுக்கி வைப்பார் கிச்சாமி.

வெந்நீர் போடக் காசு கொடுத்து விறகு வாங்கிக் கட்டுபடி ஆகுமா என்ன?

வழக்கம் போல இந்த முறையும் மரங்களைச் சுத்தம் செய்து, கழித்துப் போட்ட மட்டை, பன்னாடைகளை நான்கு நாட்களுக்கு முன் காயப் போட்ட கிச்சாமி மறுநாள் புரட்டிக் கொடுத்தால் வெயிலில் சீக்கிரம் காயுமே என்று பின் தோட்டத்திற்குப் போனபோது அவருக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கிறது; எல்லாம் போட்டது பேட்டபடி கிடக்க, பன்னாடைகளின் அளவு மட்டும் கணிசமாகக் குறைந்திருப்பதைப் போல் தோன்றியது.

''ஏண்டி—பன்னாடைகளை எடுத்தியா என்ன?'' என்று சகதர்மிணி கோமதியைக் கேட்டார்.

''இல்லியேன்னா...உங்களைக் கேக்காம நா ஏன் எடுக்கறேன்'' என்று அவள் சொல்லவும்— 'சரி நாமாக நினைத்துக் கொண்டோமோ — அளவு குறைய வில்லையோ?' என்று சமாதானம் செய்து கொண்டு நான்கு தென்னை மட்டைகளைக் கையில் ஏந்தியவாறு வாசல் திணையில், சென்று அமர்ந்தார்.

அன்று பகல் முழுவதும் கீத்துக்களைக் கிழித்து ஈர்க்குச்சி எடுப்பதிலேயே செலவழிந்தது.

''ஒரு துடைப்பம் முப்பது பைசா விக்கறது—நாலு அஞ்சு துடைப்பம்னா சும்மாவா?'' என்று முணுமுணுத்த



வாறே ஈர்க்குகளை உதிரியாய் வைத்தால் காற்றில் அலைக் கழிந்துவிடும் என்ற பயத்தில் சின்னச் சின்னக் கட்டுகளாகக் கட்டிப் பின் தோட்டத்தில் ஏற்கனவே காய வைத்திருந்த பொருள்களிடையே கொண்டு போட்டார்.

மறுநாள் காலை இன்னும் இரண்டு மட்டைகளி லிருந்து ஈர்க்குகள் எடுப்போம் என்று போனால்சொச்சம் இருந்த பன்னாடைகளையும் காணோம். முதல்நாள் கிழித்துப்போட்ட ஈர்க்குச்சி கட்டுகளிலும் இரண்டைக் காணோம்.

உண்மையிலேயே கோபம் வந்தது கிச்சாமிக்கு.

''எந்தப் பனாதைப் பயல் பன்னாடைக்கும் ஈர்க் குச்சிக்கும் அலையறான்?'' மற்றக் குடித்தனக்காரர்கள் காதுகளில் விழுகிறாப்போலவே கத்திவிட்டுத் தோட்டத் தில் குறுக்கும் நெடுக்குமாய் ஆத்திரத்துடன் நடந்தார். யார் எடுத்திருப்பார்கள்?

அவருக்குப் புரியவில்லை,

அதேசமயம் வலது பக்க போர்ஷனிலிருந்து சாரதா, பாய்லர் சாம்பலைக் கொணர்ந்து வெளியே கொட்டின போது நார் மாதிரி ஏதோ அதில் சிக்கியிருப்பதைப் போலத் தெரிந்தது.

ஒருவேளை பன்னாடையை எடுத்து பாய்லர் பத்த வைக்க உபயோகித்தார்களோ?

கேட்டு விடுவது என்று அவளைக் கூப்பிட்டார்.

''பன்னாடை உலத்தியிருந்தேனே— பார்த்தியோ?''

சாரதா சென்னையில் பிறந்து வளர்ந்தவள், இப்போது ஆறுமாச காலமாய்த்தான் கிராமத்தில் குடித்தனம் செய்வதால் பன்னாடை என்றால் என்ன என்று அவளுக்குப் புரியவில்லை.

''அப்படீன்னா?''

''பன்னாடை தெரியாது. பன்னாடை?'' அழுத்த மாகப் பேசினார் கிச்சாமி.

சாரதாவுக்கு வசவு வார்த்தையான 'பன்னாடை' யைத் தெரியும்—அதுவா?

''அதாம்மா—தென்னை மரத்திலே பிசிறு பிசிறாய் தொங்குமே, நார் மாதிரி?''

''ஓ! அதுவா — நான் பார்க்கலே மாமா—''

''இல்லே உங்காத்து பாய்லர் சாம்பல்லே நார்மாதிரி இருந்தது—எடுத்து பாய்லர் பத்த வைச்சயோனு கேட் டேன்'' கிச்சாமி முடிக்கவில்லை—

உள்ளே இருந்த சாரதாவின் கணவன் ராமபத்திரன் 'விருட்'டென்று வெளியே வந்தான். கையிலிருந்த சாக் கைப் பொத்தென்று கீழே போட்டான்,

''தெரிஞ்ச தச்சன்கிட்டேயிருந்து மரச்சுருள் வாங்கி வச்சிருக்கேன்—பாய்லர் பத்த வைக்க சௌகரியமா இருக்குமேனு... வேணா பார்த்துக்கோங்கோ...நாங்க ஏன் உங்க பன்னாடைய எடுக்கப் போறோம். பொம் மனாட்டிகள் கிட்டே பேசறச்சே அளவா தெரிஞ்சுண்டு பேசினாத் தேவலை...'' ராமபத்திரன் கோபமாக இருப்பது கிச்சாமிக்குப் புரிந்தது.

இளம் மனைவியுடன் என்ன பேச்சு? என்று மறை முகமாக கண்டிக்கிறானோ?

''ஹி...ஹி தப்பா எடுத்துக்காதேப்பா...ஏதோ தெரியு மானு கேட்டேன். அவ்வளவுதானே ...'' கிச்சாமி சமாளித்துவிட்டு உள்ளே எழுந்து போனார்.

அன்று கிழித்துப் போட்ட ஈர்க்குச்சிக் கட்டுகளும் மறுநாள் காணாமல் போனபோது, 'சரி—யாரோ நம் மிடம் விளையாடுகிறார்கள்' என்ற எண்ணம் தோன்றி சீற்றம் அதிகமாகி விட்டது.

''நானும் நாலு நாளா பாக்கறேன்— ஒண் ணொண்ணா திருடு போறது... யார் அது, தைரியமாக



எங்காத்துக் கொல்லை லேந்து எடுக்கறது?... கை அழுகிப் போயிடும்...சேச்சே... வரவரக் காலம் கெட்டுப் போயி மனுஷா பன்னாடைக்கும் ஈர்க்குச்சிக்கும் அலைய றாளே''— என்று வாய் ஓயாமல் புலம்பலே செய்தார்.

''போயும் போயும் பன்னாடைக்கும் ஈர்க்குச்சிக்கும் இப்படித் தவிககறேளே... நீங்க பாட்டுக்கு ஏதாவது சொல்லப் போய், யார் காதுலேயாவது விழுந்து ரசா பாசமா ஆகப்போறதுன்னா...நேத்தே அந்தப் பிள்ளை யாண்டான் ராமபத்திரன் கோவிச்சுக்கலை? விடுங்கோ'' கோமதியின் சமாதானம் கிச்சாமியின் கோபத்தைக் கூட்டவே செய்தது.

''போயும் போயும்பன்னாடைன்னு நிஷித்தமா பேச றியே!... அன்னாடம் வெந்நீரிலே மட்டும் மகாராணி மாதிரிக் குளியல் வேண்டியிருக்கு...காசு கொடுத்து விறகு வாங்கிப் பாரு... தெரியும் சமாசாரம்...'' என்று அவளிடம் சிடுசிடுத்துக் கொண்டே சாப்பிட்டு முடித்து எழுந்தார்.

கை கழுவ கிணற்றடிக்கு வந்தவருக்கு அம்மங்கா சமையல்கட்டை அலம்பி விடுவது தெரிய, அப்படியே நின்று ஒரு நிமிடம் கவனித்தார்.

புதுத் துடைப்பம் போலத் தெரியறதே? ரெண்டு நாளா நான் காயபோட்டதை எடுத்துண்டு வந்து தான் உபயோகிக்கிறாளோ? கைச் செம்பை 'தக்' என்று கீழே வைத்துவிட்டு எதிர்ப் பக்கம் போனார்.

''என்ன அம்மங்கா...துடைப்பம் வேணும்னா என் னைக் கேக்கறது? அது என்ன கேக்காம எடுக்கிறபழக்கம் என்னதான் சொந்தம் பந்தம்னாலும் இப்படியா... சேச்சே... நன்னாயில்லையே...''

அம்மங்கா வாயைத் திறந்தால் எட்டு ஊருக்குக் கேட்கும்.—மஹா வம்பி—சண்டைக்காரி. வழக்கமாய்

அவளிடமிருந்து ஒதுங்கியே இருக்கும் கிச்சாமி இன்று துடைப்பம் போன ஏக்கத்தில் வலியப்போய் மாட்டிக் கொண்டார்.

''என்ன கிச்சாமி சொன்னே? உன் துடைப்பக் கட்டையை நான் எடுத்துண்டுட்டேன்னா? அட சீ—அதுக்கு வேற ஆளைப் பாரு—உன் அல்ப புத்தி உன்னை விட்டு எங்கே போகும்? நாலணாவா விட்டெறிஞ்சா, இந்தா இந்தான்னு வாசல்லே குடுக்கறான்—அதை விட்டுட்டு நீ கிழிச்சு போட்டிருக்கிறதை நான் எடுத்து உபயோகிச்சா எனக்கு ஏது விமோசனம்? வாசல்லே போன வாரம் ரெண்டு துடைப்பம் வாங்கினப்போ உன் பெண்டாட்டியே சாட்சி இருந்தாளே...கேட்டுக்கோ...டீ... கோமு... கோமு...இங்கே வாடி... அல்ப புத்தி, திருட்டு புத்தி எல்லாம் எங்கக் குடும்பத்துக்குக் கெடையாது...உங்க 'குடும்பத்திலேதான் அது பரம்பரையா வரது. ஆமாம்... இந்தாடி கோமு—இவன் சொல்றதைக் கேட்டியாடி? நாக்கை பல்லுமேலே போட்டு தைரியமா கேட்க வந்துட்டானே?'' இவள் குரல் கேட்டு வந்து நின்ற கோமதியிடம் மூச்சு விடாமல் கத்தித் தீர்த்தாள் அம்மங்கா.

''அவர் குணம் உங்களுக்குத் தெரியாதா...என்னமோ தெரியாத்தனத்திலே கேட்டுட்டார். விடுங்கோ—''என்று அலளிடமும், ''உள்ளே வாங்கோன்னா!...... எனக்கு மானம் போறது''என்று மெல்லிய குரலில் கணவனிடமும் கிசுகிசுத்து விட்டுத் தன் கட்டுக்குத் திரும்பினாள் கோமு.

அங்கம்மாவைப் பகைத்துக் கொண்டால் அன்றைய நிம்மதிக்கு வேட்டு என்று கோமதிக்குத் தெரியும்.

வாயைத் திறந்தால் மூடமாட்டாளே! கிச்சாமியின் தந்தையையும் அவருடைய தாயையும் அவர்கள் செய்த அசட்டு, அல்ப காரியங்களைப்பற்றியும் ஒரு குரல் பேசி விட்டுதான் ஓய்வாள்.

கிச்சாமியின் தந்தை வழி பாட்டி பொல்லாதவளாம். —ஜம்பம் வேறு ரொம்ப உண்டாம். வீட்டில் சாப்பாடு



ஆனதும் எல்லாரும் சாப்பிட வாழை இலையில் எண்ணெயைத் தடவி வாசலில் எறியவேண்டும் என்பாளாம். தெருவில் போகிறவர்களெல்லாம் இவர்கள் வீட்டில்நெய் ஆறாக ஒடுகிறது. இலையை பாரேன்—தொய்யத் தொய்ய நெய் பள பளக்கிறது' என்று நினைக்க இந்த ஏற்பாடாம். இப்படி எத்தனையோ விஷயங்களை அம்மங்கா கோபம் வந்தால், வெளியே கத்திப் பேசத் தொடங்கி விட்டால், நாலு வீட்டுக்கு அந்தண்டையும் கேட்கும். அப்புறம் வேறு வினை வேண்டாமே!

அன்று மதியம் கிச்சாமியின் நண்பர் ஒருவர் வீடு தேடி வந்தார். வந்தவர் ஒரு கட்டு செம்பருத்திக் கட்டைகளைக் கொண்டு வந்து, ''நீ ரொம்ப நாளாய்க் கேட்டுண்டு இருக்கியே—இன்னிக்குச் செடியைக் கழிச்சேன்—உன் ஞாபகம் வந்தது—எடுத்துண்டு வந்தேன்'' என்று சொல்லிக் கொடுத்து விட்டுப் போனார்.

அவர் போன கையோடு தோட்டத்தில் பின் பக்கம் நல்ல வெளிச்சம் வருகிற இடத்தில் கொத்தி, இந்தக் கட்டைகளை வரிசையாய் நட்டார் கிச்சாமி. துளிர் விட்டு வளர்ந்த பிறகு தேவையான இடத்தில் பெயர்த்து நடலாம் என்ற எண்ணம்.

நல்ல சிவப்பு செம்பருத்தி—அடுக்கடுக்காய் பூக்கும்—ஸ்வாமி படங்களுக்கு மாலை கட்டிப் போடலாம்.

கிச்சாமிக்குச் சந்தோஷமாக இருந்தது. கட்டை விரல் பருமனாயிருந்த அத்தனைக் குச்சிகளையும் வரிசையாய் நட்டு, அவை இருக்க சாணியை உருண்டையாய் நுனியில் செருகி வைத்தார்.

மறுநாள் வெயிலுக்கு முன் குச்சிகளுக்குத் தண்ணீர் விடுவோம் என்று போனால் பாதிக் குச்சிகள் அபேஸ்.

தை, தை என்று குதிக்கவே தொடங்கிவிட்டார் கிச்சாமி

''என்னடி மாயமா இருக்கு? இன்னதுதான் திருட்டுப் போறதுன்னு விவஸ்தை இல்லை?...'' என்று ஹோ என்று கத்தினவருக்குக் கிட்டிப்புள் ஆடும் சீனு சாஸ்திரிகளின் பையன்கள் மேல்தான் சந்தேகம் எழுந்தது.

''ஏலேய்...'' ஓரமாய் அரை நிக்கருடன் நின்றிருந்த பையனைக் கூப்பிட்டார்.

''ஏண்டா இங்கே நட்டிருந்த கட்டைகளைக் கிட்டிப் புள் ஆட எடுத்தியாடா? எனக்கு இப்போ உண்மை தெரியணும்...நானும் நாலு நாளாப் பார்க்கிறேன்... சொல்லுடா...யார் எடுத்தது?''

இவருடைய ஆங்காரமான கத்தலைக் கேட்டு குடித் தனக்காரர்கள் ஒட்டு மொத்தமாக வந்து நின்று விட்டார்கள்.

''எங்காத்துக் கொழந்தை குச்சியும் கட்டையும் ஏன் எடுக்கிறான்?'' என்று சாஸ்திரிகள் சாதாரணமாய்க் கேட்க, ''வானரங்களைப் பெத்துப் போட்டிருக்கிறே... அதுகள் குச்சி, கட்டையை எடுக்காமல் வேறு யார் தைரியமா இந்தத் தோட்டத்துக்குள்ளே நுழைஞ்சு எடுக்கப் போறா?'' என்று கிச்சாமி கத்த—ஒரே ரகளை!

''நாங்களும் உங்காத்திலே இத்தனை வருடங்களா இருக்கோம்...ஒரு சாமான் காணாமப் போனதுண்டா? அல்பமா கட்டையும் குச்சியும் காணாமப் போனதுக்கு எங்களைச் சொல்றேளே—இது நன்னாருக்கா?'' சாஸ் திரிகள் மானி. பிள்ளை பெறத் தெரியுமே தவிர, சண்டை போடத் தெரியாது—அழுது விட்டார்.

''போனாப் போறது... நீங்க உள்ளே வாங் கோன்னா...காலங் காத்தால அந்தப் பிராமணரை அழவிடறிங்கோ. உள்ளே வாங்கோ'' என்று கிச்சாமி யின் கையைப் பிடித்துக் கெஞ்சி உள்ளே அழைத்துப் போனாள் கோமதி.



''வர வர இந்தப் பிராமணனுக்குப் புத்திசரியில்லாம ஆயிண்டு வரது...வேற வீட்டுக்குக் குடியைமாத்திட்டாத் தேவலை...'' என்று முணுமுணுத்துக் கொண்டு ராமபத் திரனும்,

''அல்பம்... அல்பம்— செடி கட்டையைக் காணோம்னா அந்தக் கொழந்தையை இப்படியா உலுக்குவா?...சீ...பாவம் பரம்பரை அல்பம்...'' என்று புலம்பிக் கொண்டு அம்மங்காவும், அவரவர் போர்ஷ னுக்குப் போனார்கள்.

கிச்சாமி அன்று முழுவதும் வெளியே வரவில்லை.

'நான் இல்லை—நீ இல்லை என்றால் யார்?'

யாரோ இந்தக் குச்சி, கட்டைகளைத் திருடுவது வாஸ்தவம்தானே? அது யார்?

மண்டையைப் பிய்த்துக் கொண்டார்.

ராத்திரி சரியாகத் தூக்கம் இல்லை.

விடியற்காலை ஐந்து மணி இருக்கும்...எழுந்து விட்டவர் கிணற்றடியில் பல் தேய்த்து விட்டுச் சுகமாகக் காற்று வீசினதால், அங்கேயே அமர்ந்து சந்தியா வந்தனத்தைச் செய்யத் தொடங்கினார்.

அப்போதுதான் கிச்சாமி திருடனைப் பார்த்தார்.

பக்கத்திலிருந்த சவுக்குத் தோப்பிலிருந்து வெளிக் கிளம்பிய கழுகு, ராட்சத சிறகுகளை விரித்துப் பறந்து வந்தது. பூமியை நோக்கித் தாழப் பறந்து ஒரே வினாடியில் செம்பருத்திக் கட்டை ஒன்றைக் கால்களால் பிடுங்கிக் கொண்டு, மறுபடி உயரே பறந்து சவுக்கு மரம் ஒன்றில் உட்கார்ந்து கொண்டது.

கிச்சாமி ஆடவில்லை—அசங்கவில்லை.

மீண்டும் அந்தக் கழுகு அழகாய் மற்றுமொரு கட்டையை உருவிக்கொண்டு போய் அதே மரத்தில் உட்காரவும் கிச்சாமி தலையைத் திருப்பி மரத்தை ஊன்றிப் பார்த்தார்.

நான்கு கிளைகள் கூடுமிடத்தில் பெரிய கூடு ஒன்று குச்சிகளாலும், நார், பன்னாடை இலைகளாலும் உருவாவது இவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

கழுகு கூடு கட்டுவதற்காகச் சாமான்கள் தேடப் போய், இவருடைய பன்னாடைகளும் செம்பருத்திக் கட்டைகளும் அகப்பட்டுக் கொண்டனவா?

ஒரே அளவுள்ள துடைப்பக் குச்சிகளையும், செம் பருத்திக் கட்டைகளையும், மெத்தென்று இருக்க பன்னாடையையும் சேர்த்துக் கூடு கட்டுகிறதா?

அட! பொல்லாத கழுகே!

மற்றக் குடித்தனக்காரர்களுக்கு இந்த விஷயம் தெரிந்து போனால் என்ன சொல்வார்கள் என்று நினைத்த கிச்சாமிக்கு வெட்கமாகவும் அவமானமாகவும் இருந்தது.

# ஓர் உயிரின் விலை 10 காசு

வண்டலுக்குச் சுமார் பதினான்கு, பதினைந்து வயசிருக்கும். இந்தச் சின்ன டவுனுக்கு நாங்கள் வந்த நாளாய்ப் பால் ஊற்றும் பாக்கியத்தின் மகன்.

முதன் முதலில் நான் அவனைச் சந்தித்தது, தாய்க்குப் பதிலாகப் பால் ஊற்றப் பித்தளைச் செம்பு நிறைய பாலை எடுத்துக் கொண்டு அவன் வந்தபோதுதான்.

பாக்டரி காம்பௌண்டு சுவரைத் தாண்டி இடது கைப் பக்கம் வந்தால் எங்கள் இல்லம்.

வீட்டின் எதிரில் நெடுஞ்சாலை. சாலைக்கு அப்புறம் சேரி—மற்றபடி எங்கள் தொழிற்சாலையையும் வீட்டையும் சுற்றி வயல்காடுகள்தாம்.

வாசற் கதவு சாற்றியிருந்தால் 'அம்மா' என்று இவன் இரண்டுமுறை கூப்பிட்டுக் கூட என் காதில் அது விழவில்லை.

'மணி இருக்குது பாரு—அடி' என்று தோட்டக்காரன் சொல்லிக் கொடுக்கவே வாசல் அழைப்பு மணியை வண்டல் அடித்தான்.

டிங் டாங்—

இசைபாடும் அந்த மணியின் ஓசை அவனுக்கு வினோதமாய் இருந்திருக்க வேண்டும். அடுத்த அரை நிமிஷத்தில் பத்துத் தடவைகள் டிங்டாங், டிங்டாங் என்று வாசல் மணி பாடி ஓய்ந்தது.

யார் இப்படி மணியை மரியாதை இல்லாமல் அடிப்பது என்ற கோவத்துடன் கதவைத் திறந்தேன்.

பளீரென்று முப்பது பற்கள் தெரிய இவன் நின்று கொண்டிருந்தான்.

''யார்டா நீ?''

''நா பாக்கியத்தோட மவன்மா—பாலு கொணாந்திருக்கேன்.''

பால் கொண்டு வந்தா என்ன? அம்மான்னு கூப்பிடக்கூடாது? அப்படிப் போட்டு அடிச்சா மணி கெட்டுடும். இனிமே ஒருதரம் அடி போதும்—என்ன!''

அவன் தலையை ஆட்டினான்.

''ஏன் உங்கம்மா வரலியா?'' என்றேன் பால்வாங்கிக் கொண்டே.

''இல்லிங்க—அவிடு வாங்க டவுனுக்குப்போயிருக்கு.''

ஒரு லிட்டர் பாலை ஊத்தியவன் பாக்கி இருந்த பாலையும்—கிட்டத்தட்ட கால் லிட்டர்—என் பாத்திரத்திலேயே ஊத்திவிட்டான்.

பாக்யெம் கொசிறே விடமாட்டாள். இவன் அதி தாராளம்.

''உன் பேர் என்னடா?''

''வண்டலுங்க''

''அது என்னடா வண்டல்னு ஒரு பேரா?''

அவனுக்கு ஏதும் சொல்லத் தெரியவில்லை.

''நா வரேனுங்க'' ஒரே ஓட்டமாய் ஓடிப் போனான்.

வண்டலின் துறுதுறுப்பும், விஷமக் களை கூத்தாடும் முகமும், வெகுளித்தனமும் பார்க்கப் பார்க்க எனக்கு அவனைப் பிடித்தது.

சாதாரணமாய் மாடுகளை மேய்த்துக் கொண்டு எங்கள் வீட்டுப் பின்னால் இருந்த வயல்களில்தான் திரிவான்.



முழுசாக அவன் உடுத்தி நான் பார்த்ததில்லை. ஒரு கோவணம், இல்லை மிஞ்சிப் போனால் கிழிந்த நிக்கர்; அவ்வளவுதான்.

''ஏண்டி பாக்கியம்! பிள்ளையைப் படிக்க அனுப்பாமல் இப்படிக் கெடுக்கறே?'' என்றேன் ஒரு சமயம் அவளிடம்.

''ஆங்—அதுக்குப் படிப்பு வரலைம்மா. அதான் சுத்துது. நம்ம ஏன் அவனுக்குப் படிப்பை நிறுத்தப் போறோம்—'' என்றாள் பதிலுக்கு.

அடுத்த முறை வண்டலைப் பார்த்தபோது இதையே கேட்டேன்.

''ஏண்டா—படிக்கப் போன்னா, மாட்டேன்னு ஊர் சுத்திரியாமே? படிச்சு முன்னுக்கு வரதை விட்டுட்டு ஏண்டா இப்படி மாடுகளோடு மாடாய்த் திரியறே...?''

''ஆங்—நானா படிக்க மாட்டேன்னேன்? எங்கம்மா தான் போதும்டா நீ படிச்சிக் கிளிச்சது—மாடு மேய்டானுடுச்சி'' என்றான்.

இதில் யார் பேச்சை நம்புவது?

இரண்டு நாட்களுக்கொருமுறை வந்து ''பலகாரம் தாம்மா'' என்பான். இருப்பதைக் கொடுப்பேன். தின்றுவிட்டு ஓடி விடுவான்

அன்று கார்த்திகை

மாலை ஆறு மணி இருக்கும். வானம் இருட்டி விட்டது. எதிர் சேரியிலிருந்து 'கார்த்தியோ, கார்த்தியோ' என்று பசங்கள் கொண்டாட்டமாய்க் கத்துவது கேட்க, நிமிர்ந்து பார்த்தேன்.

பூ வாணம் போல எதையோ கையில் வைத்துக் கொண்டு சேரிப்பசங்கள் அனைத்தும் இப்படியும் அப்படியுமாய் ஓடி மகிழ்ந்தனர்.

என்ன பூவாணம் அது? பூப் பூவாய் கிட்டத்தட்ட பதினைந்து, இருபது நிமிஷங்களுக்கு எரிகிறதே!

அத்தனை பேர்களுக்கும் தலைவன் போல வண்டல் நின்று கொண்டு இரண்டு கைகளிலும் பூவாணம் வைத்துச் சுழற்றியது பார்க்க அழகாய் இருந்தது.

மறுநாள் காலையில் பால் ஊற்ற வந்தவனிடம், ''என்னடா அது? பூப் பூவாய் கொட்டித்தே, அதுதான்'' என்று கேட்டேன்,

வண்டலுக்கு ஒரே குஷி! பட்டணத்து அம்மாவுக்குத் தெரியாதது தனக்குத் தெரியும் என்பது போல—

''கார்த்திப் பூவாணம் தெரியாது? அட—என்னாங்கம்மா நீங்க? நான் இன்னிக்கு அதைப் பண்ணிஇருட்டின பொறவு உங்களுக்கு உட்டுக் காட்டறேன் பார்க்க றீங்களா?''

நான் சம்மதித்தேன்.

மதியம் சரியாக மூன்று மணி இருக்கும்.

''அம்மா''—கொல்லைப் பக்கத்திலிருந்து வண்டல் கூப்பிடுவது கேட்டது.

போனேன்

கையில் நீள நீளமாய்க் கம்பு மாதிரி ஒரு கொத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

''என்னடா?''

''பனம்பூ கொண்டாந்திருக்கேன்—''

''பனம் பூவா? எதுக்குடா?''

''என்னங்கம்மா நீங்க—கார்த்தி வாணம் பாக்கணும் னீங்க?''

''ஆமாம்...அதுக்கு எதுக்கடா பனம் பூ?''

''ஆங். இது தெரியாதம்மா ஒங்களுக்கு? பனம் பூவ எடுத்து, குழி தோண்டி தீ மூட்டி கரியாக்கி, அந்தக் கரிப் பொடியை துணியிலே வச்சக்கட்டி, ஒரு கம்புலே சொருகி தீ மூட்டி கனிஞ்ச பொறவு சுத்தினா பூப் பூவாக் கொட்டும்—அதாம்மா கார்த்தி வாணம்!''



அடேயப்பா—அதில் இத்தனை வேலை இருக்கிறதா?

''ஏண்டா—அதுக்காக பன மரத்திலேயா ஏறினே? விழுந்தா என்னடா பண்ணறது?''

சிரித்தான் வண்டல்.

அன்று கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அந்த பனம்பூவுடன் மன்றாடி நான்கு வாணங்கள் தயார் பண்ணினான்.

மாலையில் அவன் அவ்வாணங்களை இப்படியும் அப்படியும் சுழட்டி, சுழட்டி ஒரு கைதேர்ந்த நாட்டியக்காரி போல் ஆட்டினபோது நாங்கள் அசந்து விட்டோம்.

அன்று அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தேன்.

''மொத்தமும் எனக்காம்மா?'' வண்டலின் முகத்தில் ஏக சந்தோஷம்.

''வாத்தியார் படத்துக்குப் போகப் போறேன்ம்மா'' என்று சொல்லிவிட்டுக் குதித்துக் கொண்டு போனான்.

எங்கள் தோட்டத்தில் பெரும்பகுதி புல் மண்டி கிடப்பதால், அவ்வப்போது மாடுகளுக்குப் புல்வெட்டி எடுத்துச் செல்லவும் வண்டல் வருவான்.

பெரிய பொட்டுக் கூடையும், குறு வாளுமாய் வந்து இரண்டு கூடை புல் வெட்டிக் கொண்டு போவான்.

ஒரு நாள் புல் வெட்டிக் கொண்டு வந்தவன் ''அம்மா'' என்று அழைக்கவும் போனேன்.

''உங்களுக்குப் பாம்புனா பயமா?'' என்றான்.

எனக்கு, எதற்காக அவன் கேட்கிறான் என்றே புரிய வில்லை.

கையிலிருந்த துணி மூட்டையைப் பிரித்தான். இரண்டு பாம்புக் குட்டிகள். மெல்லிசாய் கறுப்பும் மஞ்சளுமாய் நெளிந்து ஓடின.

நான் அலறி விட்டேன்.

'பாம்பு', 'பாம்பு'—அடி—அடி.'

வண்டல் நான் இத்தனை பயந்தாங்கொள்ளியாக இருப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை.

கபக்கென்று கையால் அப்பாம்புகளைப் பிடித்தான். அரைநொடியில் பழையபடி மூட்டை கட்டி விட்டான்.

''இதுங்க காளையாங் குட்டி பாம்பும்மா—ஒன்றும் பண்ணாது—''

என் பயம் போகவில்லை.

''விஷமோ, விஷமில்லையோ—அடிச்சுடுடா—''

''ஆங்—ஒரு காளையாங்குட்டியை அடிச்சா உடனே பத்து வரும், தெரியுமா? நான் வூட்டுக்கு கொண்டு போறேன்.'' புல் கூடை, பாம்பு சகிதம் அவன் போய் விட்டான்.

இப்படித்தான் இன்னொரு சமயம் ''அம்மா பச்சைப் பாம்பு பாக்கறீங்களா'' என்று கூவினான்.

கிட்டத்தட்ட நான்கு அடிக்கு இருந்த பச்சைப் பாம்பைத் தலையை இரண்டு விரல்களால் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான்.

நெளியும் அதன் உடம்பைக் கண்டாலே எனக்குச் சகிக்கவில்லை.

பார்த்துக் கொண்டே இருக்கையில் பாம்பின் வாலை மட்டும் ஒரு மூன்று அங்குலத்துக்கு நகத்தால் வெட்டி எடுத்தான். அருகில் இருந்த கல்லை எடுத்துப் பாம்பின் தலையை 'நச்'சென்று நசுக்கினான்—பிறகு தூரப் போட்டான். பாம்பு வாலுடன் 'நான் வர்ரேம்மா, என்று கிளம்பினான்.

''எதுக்கடா அந்த வாலு?''

''அட-என்னம்மா ஒங்களுக்கு ஒண்ணுமேதெரியலை. இந்தப் பச்சை பாம்பு வாலைக் கயத்திலே கோத்து கழுத்திலே கட்டிட்டா காத்து, கறுப்பு அண்டாதும்மா.''

என்ன நம்பிக்கையோ—என்ன பழக்க வழக்கமோ?

இன்னொரு நாள் எங்கள் பாதாம் மரத்தில் கூடு கட்டியிருந்த காக்கை இவன் மாட்டின் முதுகில் கிளம்பி இருந்த புண்ணைக் கொத்திக் கொத்திப் பெரிதாக்கி



விட்டதென்று வண்டலுக்குக் கோபம் வந்துவிட்டது. காக்கையைத்துரத்தித் துரத்தி, கூடு எங்கே என்று கண்டு பிடித்தவன் மரத்தில் ஏறிக் கூட்டைக் கலைத்து, முட்டைகளை உடைத்து ஹதம் பண்ணியிருக்கிறான். இரண்டு நாட்கள் கழித்து தலையில் ரத்தக் காயத்துடன் வந்து நின்று 'மருந்து இருந்தா கொடுங்கம்மா'' என்றான் என்னிடம்.

ஸால்வான் க்ரீம் கொடுத்துவிட்டு, ''எப்படியடா காயம் பண்ணிண்டே?'' எனறாள்.

''காக்கா கொத்திடுச்சும்மா'' என்கிறான் சாவகாசமாய்.

'காக்கா கொத்தறதா? உனக்கென்ன பைத்தியமா?'

இவன் கூட்டைக் கலைத்து, முட்டைகளை உடைத்ததில் கோபம் கொண்ட காக்கை, இவனை அடுத்த பல நாட்களுக்கும் துரத்தித் துரத்தி ரத்தம் வரக் கொத்தியதை நானே பார்த்தேன்.

என்ன பிள்ளையோ—என்ன முரட்டுத்தனமோ?

பாம்பைக் கையால் பிடிக்கிறான் — காக்கைக் கூட்டைக் கலைக்கிறான், கழுகுகளைச் சீண்டுகிறான். பல்லி, நண்டு எதைப் பார்த்தாலும் வெறும் கையால் பிடித்து டப்பாவில் அடைத்து, வேடிக்கைக் காட்ட எடுத்துப் போய் விடுகிறான். பனை மரம், தென்னை மரம் என்று ஒருமரம் பாக்கி இல்லை—நிமிஷமாய் ஏறி இறங்கி விடுகிறான்.

கிணற்றுக்குள் மேல் கட்டையிலிருந்து பெரியநீச்சல் சாம்பியன் போல டைவ் அடித்துக் குளிப்பான்.

எல்லாம் பயங்கர விளையாட்டுத்தான்.

தன் உயிரின் மதிப்பைத் தெரிந்துகொள்ளாமல் வாழும் வண்டலுக்கு மரண பயமே கிடையாதோ?

ஒரு சமயம் என் கணவரும் நானும் நண்பர் வீட்டுக்குப் புறப்பட்டோம்.

வீட்டை விட்டு கார் வெளியே வந்து நெடுஞ்சாலையில் ஓடத் தொடங்கியது.

எங்களுக்கு முன் ஒரு டிராக்டர், ட்ரெயிலரில் அம்பாரமாய்க் கரும்புகளை ஏற்றிக் கொண்டுபோனது.

ஐந்து மைல் தள்ளி இருக்கும் சர்க்கரை ஆலைக்குப் போகும் வண்டிகள் இவை.

கரும்புத்துண்டங்களை யாரும் எடுக்க முடியாதபடி கயிறால் கட்டி, சுற்றிலும் கருவேல முள் மரத்தைவெட்டி வேலி போலக் கட்டியிருந்தார்கள்.

இத்தனை பந்தோபஸ்த்தையும் மீறி ட்ரெயிலர் வண்டியை ஒரு கையால் பிடித்தவண்ணம் ட்ராக்டரின் வேகத்துக்கு ஓடிக்கொண்டே முள் உடம்பை கிழிக்க, மறு கையால் கரும்பை ஆட்டி ஆட்டி உருவி ஒவ்வொன்றாகத் தரையில் போட்டுக் கொண்டே ஓடினது யார் என்று நினைக்கிறீர்கள்?

சாட்சாத் வண்டல்தான்—

அவன் சகா ஒருவன். இவன் உருவிப்போட்டகரும்புத் துண்டங்களைச் சேகரித்தான்.

''நடு ரோடிலே வண்டிக்கு சரியா ஓடி, முள் உடம்பைக் கிழிக்க, இப்படி ஒரு துண்டுக் கரும்புக்காகப் பாடு படறதே இந்த பையன்! இதுக்குப் பயமே இல்லையா—''

எங்கள் கார் அவனைத் தாண்டும்போது ஜன்னல் வழியாகக் கத்தினேன்—

''டேய் வண்டல் - ஓடாதே ஐயா திட்டறாரு. கீழே விழுந்து கை கால் ஒடிஞ்சிதுணா?—''

என் பேரில் உள்ள மரியாதையால் வண்டல் நின்று விட்டான்.

ஆனால் முகத்தில் ஒரு விஷமச் சிரிப்பு.

நேத்து மதியம் உணவு ஆன பிறகு சற்றே, ஒய்வாப் படுத்தவள், 'அம்மா' என்று வேலைக்காரி அலறுவது கேட்டுத் திடுக்கிட்டு ஓடினேன்.

கம்பெனி வாசலில் பெரிய கூட்டம்.

என்னாயிற்று?

என்னைக் கண்டதும் கூட்டம் விலகுகிறது.



கூட்டத்தின் நடுவில் தரையில் வண்டல் ரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

நான் கிட்டே போனேன்.

''பாவியப் பய—கரும்பு வண்டி பின்னாலே ஓடிருக்கான்— எதிர்த்தாப்பல மாடு வந்திருக்கு. வண்டிக்காரரு சடார்னு ப்ரேக் போட்டாரு. இவன் திடுதிப்புனு வண்டிலே முட்டிகிட்டு கையெ நழுவ விட்டு, ரோடிலே உருண்டிருக்கான்— எதிர்த்தாப்பல பஸ் வந்திருக்கு—நாலு சக்கரமும் பையன் மேலே ஏறி அந்த இடத்திலே உசிரு போயிடிச்சும்மா'' கம்பெனி ஆள் ஒருவன் விளக்குகிறான்.

கூழாகிக் கிடந்த வண்டலைப் பார்த்தேன்—முகம் மட்டும் அப்படியே இருந்தது. முகத்தில் வேதனை இல்லை—அதே விஷமச்சிரிப்பு—அரைபட்டுக் கிடந்த வலது கையில் ஒரு சின்ன துண்டுக் கரும்பு.

அன்றைக்கு வண்டலின் உயிரின் விலை பத்து காசு!

●

# காலம் ஒரு நாள் மாறும்..

வானத்தில் யாரோ பெரிதாய் ஓட்டைப் போட்டு விட்டாற் மாதிரி ஒரு வார காலமாய் கொட்டின மழை அதன் ஆவேசம் குறைந்து தூறலாய்த் தூறிக் கொண்டிருந்தது.

துவைத்த துணி காயவில்லை.

தரையெல்லாம் கசகசப்பு.

தோட்ட இடங்களில் காளான் புசுபுசுவென்று பூத்திருந்தது.

எனக்குச் சகிக்கவில்லை.

என்ன மழை, பாழும் மழை! இப்படியா பிசாசு போலக் கொட்டும்.

கல் வீட்டில் இருக்கும் எனக்கே இத்தனை சலிப்புத் தோன்றினால், எதிரிலுள்ள சேரிவாழ் மக்களுக்கு இந்த அடைமழை எத்தனை துன்பத்தைத் தந்திருக்கும் என்று நான் எண்ணாமலில்லை.

கோணி ஒன்றைத் தலையில் போர்த்திக் கொண்டு வந்த வேலைக்காரி, ''உட்காரக்கூட இடம் இல்லிங்க... கூரை பொத்துகிட்டு ஊடு ஒழுகுது... என்னா பண்ணறது? கொழந்த குட்டிங்கல்லாம் தவிக்குது—'' என்று சொன்னபோது அவள் கஷ்டம் எனக்குப் புரிந்தது.

''வீடு ஒழுகினா, குழந்தைகளை அழைச்சிட்டு கார் ஷெட்டுக்கு வந்துடு'' என்று அவளிடம் சொன்னேன்.

''என் பாடு தேவலைம்மா... ஆத்துப்பக்க சேரிங்கன்னே சான் தண்ணி ஊட்டுக்குள்ளாற ஓடுதாம்... ஆத்துல வெள்ளம் வந்தாலும் வரும்னு பேசிக்கறாக... என்னாப் பண்ணறது?''



பேசிக் கொண்டே வீட்டு வேலையைக் கவனிக்கப் போய் விட்டடாள் அவள்.

ஆற்றில் எந்த நிமிஷமும் வெள்ளப் பெருக்கெடுக்கலாம் என்பதுதான் கடந்த இரண்டு நாட்களாகவே நிலவி வரும் பயம்.

தண்டோரா போட்டு விட்டார்களாம் இருந்தும் பல சேரிகளிலும் கிராமங்களிலும் ஜனங்கள் இடத்தைக் காலி பண்ணவில்லையாம். ''வெள்ளம் வராது...சும்மா பயமுறுத்தறாங்க...'' என்று தண்டோராவை அலட்சியப்படுத்தி விட்டார்கள். இந்த ஜனங்களுக்குத் தங்களுக்காகவும் தெரியலை; சொன்னாலும் தெரியலை...'' என்று இந்தப் பக்கமாய் போன ஹைவேஸ் என்ஜினியர் குறைபட்டுக் கொண்டார்.

எங்கள் இல்லம் ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் பெண்ணாறு நதியிலிருந்து கிட்டத்தட்ட ஐந்து மைல் தொலைவில் இருந்தது. வயலை நம்பி வாழும் குடும்பங்கள் அத்தனையும் பெண்ணாற்றின் கரைகளில் கிராமமாகவும், சின்னச் சின்னச் சேரிகளாகவும் வாழ்ந்து வருவது எங்களுக்குத் தெரியும்.

புலி வருகிறது, புலி வருகிறது என்ற கதை கடைசியில் உண்மையாகி விட்டது.

பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு வீட்டிற்கு வந்த என் கணவர் முகம் வேதனையில் கோணிக் கிடந்தது.

''என்ன சமாசாரம்?''

''பயந்தபடியே ஆகிவிட்டது! பெண்ணாற்றில் வெள்ளம்...ஜனங்கள் கடைசி நிமிஷத்தில் அலறிக் கொண்டு வெளியேறுகிறார்கள்... ரோடெல்லாம் ஒரே அலங்கோலம்...''

அவர் வேதனை எனக்கும் தொற்றிக் கொண்டது.

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடத்துக்கு போகப் போகிறேன்—நீயும் வருகிறாயா?'' என்ற கேள்விக்காகவே காத்திருந்தவள் அவருடன் காரில் ஏறிக்கொண்டேன்.

நெடுஞ்சாலையில் ஒரு மைல்கூடப் போயிருக்க மாட்டோம்...எதிரே திருவிழாக் கூட்டம்.

சாரி சாரியாய் ஜனங்கள்—

ஓலைப் பாயுடன், தகரப் பெட்டியுடன், தலையில் கூடையுடன் மண்பானைகளுடன், சாக்கு மூட்டையுடன் குழந்தைக் குட்டியுடன் நூற்றுக் கணக்கானவர்...

சைக்கிளில் ஒரு குடும்பத்தையே அழைத்துக் கொண்டும், கட்டை வண்டியில் ஆடுமாடு, சாமான்கள், குடும்பம் என்ற பாகுபாடின்றி அடைத்துக் கொண்டும் சிலர் எதிர்ப்பட்டனர்.

யம்மா...

ம்மே...

யம்மால்...

பிராணிகளின், மனிதர்களின் ஓலங்கள் கலந்து ஒலித்து ஆகாயத்தை நிரப்பின.

அழுகை, அழுகை—எங்கும் அழுகை!

பெண்ணாற்றுக்கு இரண்டு மைல்கள் இருக்கும் போதே காரை மேலே செலுத்த முடியாமற் கூட்டம் நெறியவே வண்டியை நிறுத்தி விட்டோம்.

பார்க்கப் பார்க்க மக்களின் அவலம் நெஞ்சை அறுக்க ஆரம்பித்தது.

இந்தக் கூட்டத்தில் ஒரு பெண்மணி என் கவனத்தை அதிகம் ஈர்த்தாள்.

சாலை ஓரத்துப் புளியமரத்தடியில், தேங்கிக் கிடந்த தண்ணீரில் உட்கார்ந்து கொண்டு, 'ஹோ' என்று அவள் கதறிக் கொண்டிருந்தாள். அவளருகில் ஒரு தகரப்பெட்டி அதன் மேல் ஒரு சாக்கு மூட்டையுடன்; ஐந்து வயசுப் பெண் ஒன்று நின்றிருந்தது.

அந்தப் பெண்மணிக்கு வயசு முப்பது, முப்பத்தைந்துக்குள் தான் இருக்கும்.

எண்ணெய் காணாத தலைமுடி—கிழிந்த புடவை.

அழுதழுது சிவந்து போன கண்கள்.

மூக்கைச் சிந்திக் கொண்டும், வயிற்றில் அடித்துக் கொண்டும், உரக்க அவள் அலறிக் கொண்டிருந்தாள்.



அவள் பக்கத்தில் ஓரிருவர் அமர்ந்திருந்ததைத் தவிர அவ்வப்போது ஒரு சிலர் அவளை நெருங்கி ஏதோ சொல்லிச் சமாதானம் செய்துவிட்டு, மறுபடி தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

சில நிமிஷங்கள் பொறுத்த எனக்கு, ''என் ராஜா... என் மவனே'' என்று அவள் விடாமல் கதறினது தாங்காமல் வண்டியிலிருந்து இறங்கி அவளிடம் சென்றேன்.

''என்னம்மா விஷயம்?''

ஒரே ஒரு அனுதாபக் குரலுக்காக ஏங்கிக் கொண்டிருந்தவளைப் போல அவள் இன்னும் பெரிசாய் அழ ஆரம்பித்தாள்

''ஐ ராசா...ஆ...''

இந்திராணி— அதுதான் அவள் பெயர்—மெல்ல மெல்ல விஷயத்தைச் சொன்னாள்.

வெள்ளம்...வந்திடுச்சி...ஓடுங்க என்று திடீரென்று விரட்டினார்களாம். பார்த்துக் கொண்டே இருக்கையில் கணுக்கால், சாண், முழம் என்று தண்ணீர் உயர்ந்து விட்டதாம். இருக்கும் பணம், துணியை ஒரு தகரப் பெட்டியில் போட்டுக் கொண்டு ஒரு வயசு பிள்ளையை இடுப்பிலும், ஐந்து வயசுப் பெண்ணை கையில் பிடித்துக் கொண்டும் இந்திராணி கிளம்பினாளாம் கிளம்பினவளுக்கும் பரணியில் மூன்றுபடி அரிசியைச் சாக்கில் கட்டி வைத்திருப்பது நினைவிற்குவர, பெண்ணை அடுத்த வீட்டு அம்மாளுடன் அனுப்பிவிட்டு, கைப்பிள்ளையை வாசத்திண்ணையில் அமர்த்தினாளாம். குடிசைக்குள் வந்து மேடைமேல் ஏறி, உயரத்தில் இருந்த சாக்கு மூட்டையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டாளாம்—

கீழே இறங்கினால் முழங்கால் ஜலம் தொண்டைக்கு வந்திருந்ததாம்...

எல்லாம் இரண்டு நிமிஷங்கள்கூட ஆகியிருக்காதாம். வாசலுக்கு ஓடி வந்தாளாம்—

திண்ணையில் பிள்ளை இல்லையாம்— வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டதாம்.

''ராசா...ராசா...னு கத்தித் தேடக்கூட இவுங்க விடலங்க...இன்னும் தண்ணி ஏறுது...நீ வானு இழுத்துக் கிட்டு வந்திட்டாங்க...எம் மவன்...ஏ ராசா'' அந்தத் தாய் முட்டிக் கொண்டு அலறினாள்.

கேட்டுக் கொண்டிருந்த எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

மூன்றுபடி அரிசிக்காகப் பிள்ளையை இழந்தவளா? என்ன மனுஷி இவள்?

அதையே அவளிடம் ஆத்திரத்துடன் கேட்கவும் செய்தேன்—

''உனக்கு மூளை இல்லை? வெள்ளம் வரும்போது பிள்ளையை விட்டுவிட்டுக் கேவலம் அரிசி எடுக்கவா போனே...''

''நா என்னா பண்ணுவேனுங்க?...அடுத்த வேளை சோத்துக்கில்லாம இருந்தா எப்படி? அதுதானுங்க...''

கையிலிருந்த பத்து ரூபாயை அவளிடம் கொடுத்து விட்டு வண்டிக்கு வந்து,''வீட்டுக்குப் போகலாம்—என்னால் இன்னும் பார்க்க முடியாது'' என்றேன் இவரிடம்.

வீட்டுக்கு வந்தோம்.

அரைமணிப் போது சென்றிருக்கும்.

வெள்ளத்துக்குப் பயந்து வந்த ஜனங்களை எதிர் சேரிப் பள்ளிக்கூடத்திலே தங்கச் சொல்லி அவர்கள் சாப்பாட்டுக்கு நிதி திரட்டுகிறார்கள். நாம் என்ன கொடுக்கலாம்? அரை மூட்டை அரிசி கொடுக்கலாமா?'' என்று இவர் கேட்டபோது, சரி என்று தலை ஆட்டினேன்.

மூன்றுபடி அரிசிக்காக குழந்தையை இழந்த தாயின் வேதனை என் நெஞ்சிலே முட்டிக் கொண்டு நின்றதால் வேறு ஏதும் பேசத் தோன்றவில்லை.

''அம்மா தபாலுங்க''— வேலைக்காரி அன்றைய கடிதங்களைக் கொணர்ந்து கொடுத்தாள்.



முக்கியமில்லாத ஓரிரு கடிதங்களைத் தவிர சங்கரிடமிருந்தும் ஒன்று இருந்தது.

சங்கர் என் ஒன்றுவிட்ட சித்தி மகன். ரொம்ப ஏழைமையான குடும்பத்தில் ஆறு பிள்ளைகளில் மூத்தவனாய்ப் பிறந்தவன். பள்ளிப் படிப்பு முடிக்குமுன் அவன் தந்தை இறந்து போனார்.

சங்கருக்கு உடம்பு பூராவும் மூளை— இப்படிப்பட்ட சிறந்த மாணவனைப் பாதிப் படிப்பில் நிறுத்துவதுதவறு என்று உணர்ந்த என் தந்தை, அவனை மேலே படிக்க வைத்தார். அவர் நம்பிக்கையை அவன் வீணாக்கவில்லை. வகுப்பில் முதல்,கல்லூரியில் முதல்,மாகாணத்தில் முதல், உபகாரச் சம்பளத்திலேயே என்ஜினீயரிங் முடித்தான். பெரிய வேலை அவனைத் தேடி வந்தது. பொறுப்பாகத் தம்பிகளைப் படிக்கவைத்தான். தங்கைகளைக்கல்யாணம் பண்ணிக் கொடுத்தான் அவன் புத்திக்கும் குணத்துக்கும் பணக்கார இடத்திலிருந்து மனைவி அமைந்து விட்டாள்.

இன்று இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு குடும்பத்துடன் பம்பாயில் உயர்வாய் இருக்கிறான்.

என் அப்பா மூலம் முன்னுக்கு வந்ததாலோ என்னமோ எங்கள் குடும்பத்தில் அவனுக்கு ஈடுபாடு அதிகம்.

அவனிடமிருந்து வந்த லெட்டரை ஆவலுடன் பிரித்தேன்.

''சௌக்கியமாய் இருக்கிறாயா? மாப்பிள்ளை, குழந்தைகள் நலமா?'' என்ற வழக்கமான கேள்விகளைக் கேட்டு விட்டு, அவன் மேலே எழுதியிருந்தான்.

''நான் சொல்லப் போவது உனக்கு அதிர்ச்சியைத் தரலாம்—பட், ப்ரிபேர் யுவர் செல்ஃப்—போன மாசம் திடீரென்று ஒரு முன் அறிவிப்பும் இல்லாமல் என்னை அரேபிய நாடுகளுக்கு வேலை நிமித்தமாய் மூன்று வருஷங்களுக்குப் போகும்படி மேலிடத்திலிருந்து ஆர்டர் வந்தது. ஒரு சில மாசங்கள் என்றால் போகலாம். மூன்று வருஷங்கள் என்றால் எப்படி?

இங்குக் குழந்தை அருணாவின் வைத்தியம் பாதியில் நிற்கக்கூடாது என்று டாக்டர் அபிப்பிராயப்படுகிறார். வேறு எங்கும் வைத்து இந்த வைத்தியம் பண்ணச் சரிப்படாது. கம்பெனியில் இதைச் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் பிடிவாதமாய் இருக்கிறார்கள். என் நிலைமை அவர்களுக்குப் புரியவில்லை. எனக்கும் வேறு வழியில்லை. அதனால் வேலையை ராஜினாமா செய்து விட்டேன்.

''இதை விட்டால் வேறு எத்தனையோ வேலைகள் இல்லாமலா போகிறது? நீ என்ன சொல்லுகிறாய்? ஐ நோ தட் யூ வில் அக்ரி வித் மீ...''

கடிதத்தை என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை.

சங்கர் வேலையை விட்டு விட்டானா!

இரண்டாயிரம்ரூபாய் சம்பளம்; கார், வீடு, ஆட்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டானா?

என்னால் நம்ப முடியவில்லை.

அவன் பெண் அருணாவிற்குப் பிறவியிலேயே நரம்புகளில் கொஞ்சம் கோளாறு உண்டு. அதைப் பம்பாய் ஆஸ்பத்திரியில் மருந்தும், யோகாசனமும் கலந்து கொடுத்துக் குணப்படுத்தி வருகிறார்கள் என்பது எனக்கும் தெரியும்.

ஆனாலும்...?

இந்த வைத்தியம் வேறு எங்கும் செய்யச் சரிப்பட்டு வராதா? சங்கர் அப்படித்தானே எழுதியிருக்கிறான்?

பெண்ணின் நலத்திற்காக இதுநாள் தான் அனுபவித்து வந்த சௌகரியமான வாழ்க்கையை ஒரே கணத்தில் ஊதித் தள்ளி விட்டானே!

நினைக்க நினைக்க எனக்கு பிரியமாக இருந்தது.

சங்கரையும், மகளுக்காகச் சௌகரியமாக வாழ்க்கையை 'பூ' என்று உதறிவிட்ட அவன் பாசத்தையும் நினைக்கும் போது, ஏனோ சற்று முன் தான் சந்தித்த இந்திராணியும், மூன்று படி அரிசிக்காக அவள் இழந்த மகனும் என் நினைவில் கூத்தாடினார்கள்.

இரண்டிலும் பெற்றவர்களும் பிள்ளையும் தான்—ஆனால் செய்கையில் எத்தனை வித்தியாசம்?



ஒன்று மலை.

இன்னொன்று மடு!

பாசம் என்பது ஒன்றுதான் என்றால்,எதனால் இந்த வேறுபாடு?

எதனால் இந்த வித்தியாசம்?

சங்கர் மகள் மேல் வைத்திருப்பதுதான் பாசமா?

இந்திராணி பிள்ளைமேல் கொண்டது பாசம் இல்லையா?

சங்கரும் ஏழைமையான குடும்பத்தில் பிறந்துவறுமையில் வாடி வளர்ந்தவன் தானே! அவனுக்கு மட்டும் தன் பெண்ணின் நலனுக்காக எல்லாவற்றையும் விட்டுவிடும் மனோ தைரியம் எங்கேயிருந்து வந்தது?

மூன்று படி அரிசியை எடுக்கப் போய் மகனை வெள்ளத்திற்குப் பலி கொடுத்த இந்திராணிக்கு அந்த மனோபலம் ஏன் இல்லை?

யோசிக்க, யோசிக்க எனக்கு ஒரு விஷயம் தெளிவாயிற்று.

இந்த வேலையை விட்டால் இன்னொன்று—என் குடும்பத்தை எப்படியாவது காப்பாற்றுவேன் என்று சங்கருக்குத் தைரியம் வந்தது எதனால்?

தன் படிப்பு, தன் புத்தி இவை மூலம் தன் மேலேயே சங்கருக்கு உள்ள ஆணித்தரமான ,நம்பிக்கையால் அல்லவா?

இந்திராணிக்கு என்ன தெரியும்? எழுதப் படிக்கத் தெரியுமா? புத்திசாலித்தனமாய்ப் பிழைக்கத் தெரியுமா? என்ன தெரியும்? அதனால் அவளுக்குத் தன் நம்பிக்கை ஏன்? அடுத்த வேளைக்குப் பிள்ளைகள் பசியால் அழுவது ஒன்றுதான் அவளுக்குத் தெரியும்—அதற்காக அரிசி எடுக்கப் போனாள்—அவளுக்கும் சங்கர் மாதிரிப் படிப்பும் தன்னம்பிக்கையும் இருந்திருந்தால் பிள்ளையை மூன்று படி அரிசிக்காக இழந்திருப்பாளா?

ம்ஹூம்; மாட்டாள்—

இந்திராணி போன்றோர் நம் நாட்டில் எத்தனை ஆயிரம் பேர் இருப்பார்கள்?

இவர்களுக்கெல்லாம் விடிவு உண்டா? சொல்லத் தெரியாத வேதனை மனசுக்குள் உருளுவதை தாங்கிக் கொள்ளத் தலையைப் பிடித்துக் கொண்டு மேஜைமேல் சாய்கிறேன்.

# வெள்ளிக்கிழமை ராத்திரி அவள் செத்துப் போனாள்

குனிந்து கொதித்துக் கொண்டிருந்த நொய்க் கஞ்சியைக் கிளறக்கூட முடியாதபடி ஈர விறகின் புகை அவள் முகத்தைத் தாக்கியது. நன்றாய் எரியாத அடுப்பை மூச்சைப் பிடித்துக் கொண்டு ஊதி நிமிர்ந்தபோது புகையின் காரணமாய் அவள் கண்கள் எரிந்தன.

வயிறும் மனசும் காய்ந்து எரிந்த வெப்பம் தாங்காது கண்களில் நீர் திரண்டது. வாய்விட்டு அழுதால் அதே அறையில் ஓரமாய்ப் படுத்திருக்கும் கணவன் விஸ்வத்துக்கு கேட்டுவிடுமே என்ற நினைப்பில், அவள் வெட்டிக் கொண்டு எழுந்த கேவலை அடக்கி, கையைத் தூக்கி ரவிக்கையில் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தலையைச் சற்றே ஒடித்து கணவனைப் பார்த்தாள்

கோவில் காளை போல மதமதவென்று வளர்த்தியுடன் ஓடி ஓடிச் சம்பாதித்த புருஷன், இன்று அரை உடம்பாய் வற்றிப் போய், கிடத்தின இடத்தைவிட்டு தகராமல் படுத்துக் கிடப்பது அவளின் துக்கததை அதிகரிக்கவே, வெருட்டெனத் தலையை மீண்டும் அடுப்புக்கே திருப்பிக் கொண்டாள்.

சிரிப்பும் கும்மாளமுமாய் இருந்த அவர்களின் இல் வாழ்க்கையில் தன் கொள்ளிக் கண்ணைப் போட்டது யார்?

கூழோ, கஞ்சியோ குடித்துக் கொண்டு, நன்றாய் வெளியில், வாசலில் போய் வந்து கொண்டு, மானத்தோடு குடும்பம் நடத்தி வந்தவர்கள் மேல் திருஷ்டி போட்டது யார்?



நொய் வெந்துவிட்டது. இறக்கிச் சூடு தணிய ஆற்றினாள். பால் கைவசம் இல்லாததால் சிறிது மோரும் உப்பும் கலந்து எடுத்துக் கொண்டு கணவனருகில் வந்தாள்

''எழுந்திருங்கோன்னா கஞ்சி கொண்டு வந்திருக்கேன். குடிச்சிட்டுப் படுத்துக்கோங்கோ.''

விஸ்வம் எழுந்து உட்கார்ந்தான்

''கொழந்தேள்ளாம் சாப்பிட்டேளா?...நீ என்ன சாப்பிட்டே?''...

''வக்கீலாத்துலேந்து கொண்டு வந்திருந்த பழையது இருந்தது. பசங்க அதைச் சாப்பிட்டு வாசல்லே விளையாடறா. எனக்குப் பசிக்கலை; சரோஜாவாத்திலே முறுக்கு சுத்தக் கூப்பிட்டிருக்கா போனேன்னா முறுக்கை சுத்திட்டு அப்படியே இரண்டு வாய் போட்டுண்டு வந்துடுவேன்...நீங்க கஞ்சியக் குடிங்கோ...''

கஞ்சியை குடித்துடம்பளரை மனைவியிடம் விஸ்வம் நீட்டியபோது அவன் கண்களிலிருந்து நீர் பெருகிக் கன்னத்தில் ஓடியது.

''என்னன்னா இது? சின்ன குழந்தையாட்டம்?''

கண்களைத் துடைத்த ராஜத்தின் கைகளை விஸ்வம் பிடித்துக் கொண்டு விசும்பினான், ''நா கையாலாகாதவன் ஆயிட்டேண்டி ராஜம்...நீயும் கொழந்தைகளும் பிச்சைக்காரா மாதிரி யார் யார் ஆத்துலோ சாப்பிடற நிலைமை வந்துடுத்தேடி...''

''என்னன்னா இது?...எனக்குத் தைரியம் சொல்ல வேண்டிய ஆம்பிளை நீங்களே இப்படி வருத்தப்பட்டா எப்படி? கால் ரெண்டும் இல்லாவிட்டாலும் புருஷனா நீங்க என் மஞ்சளுக்கும் குங்குமத்துக்கும் குந்தகம் இல்லாம, முழுசா இருக்கேளே! இது போதும்னா எனக்கு. அந்த அம்பாள் நம்பளைக் கைவிட மாட்டா...தைரியமா இருங்கோ''—

அம்பாளாவது கைவிடாமல் இருக்கிறதாவது?

குடியே மூழ்கிப் போய்விட்டது. இனி எந்தத் தினுசில் அம்பாள் வந்து கரை சேர்க்கப் போகிறாள்?

ம்ஹூம்—ஒன்றும் இல்லை.

ராஜத்துக்குத் தன்நிலைமை நிதர்சனமாகத்தெரிந்தது தான்; நொந்து கிடக்கும் கணவனைத் தேற்ற ஏதாவது சொல்ல வேண்டாமா? சொல்கிறாள்—அவ்வளவுதான்.

சின்ன வயசிலேயே தாய் தந்தையை இழந்தவள் ராஜம். பந்துக்களின் அன்பை அவளுக்குக் கொடுக்காத அம்பாள், தங்கமான குணத்தையும், 'பளிச்'சென்று கண்ணில் நிற்கும் உருவத்தையும் கொடுத்திருந்தாள்.

அவளைப் பத்து வயசு வரைக்கும் வளர்த்து வந்த உறவுக்கார மாமி, யாரோ சொல்லி யாரோ கை காட்ட, வந்த வரைக்கும் லாபம் என்று ராஜத்தைச் சித்து வேலைக்கு ஒரு டாக்டர் வீட்டில் விட்டாள்.

டாக்டர் வீட்டுக் குழந்தைகள், பெரியவர்கள் ஏவும் வேலைகளைச் செய்யத் தொடங்கி, அந்த வீட்டின் தேர்ந்த சமையற்காரியாகவே ராஜம் மாறினபோது அவளுக்கு வயசு பத்தொன்பது,

டாக்டர் தம்பதி நல்லவர்கள். ஒன்பதுவருஷங்களாய் உண்மையாய் உழைத்த பெண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுப்பது நம் கடமை என்று உணர்ந்து, ராஜத்துக்கு மாப்பிள்ளை தேடினவர்கள் கண்களில், 'பிராமணாள் காபி ஓட்டல்' சொந்தக்காரர் வேதாசலம் விழுந்தார். வேதாசலத்துக்கு விஸ்வம் ஒரே பையன்—எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணின பிறகு அப்பாவின் கடையிலேயே அவருக்கு உதவியாய் இருந்தான். வயசு இருபத்திரெண்டு.

விஸ்வத்துக்கும் ராஜத்துக்கும் சுபயோக சுப தினத்தில் கல்யாணம் நடந்தது.



திருமணமான ஒரு சில நாட்களுக்குள் மாமனாரைப் புரிந்து கொண்டு விட்டாள் ராஜம்.

மனைவியைப் பறிகொடுத்த வேதாசலம் வயசு வந்த பிள்ளை இருந்ததால் இரண்டாம் கல்காணம் பண்ணிக் கொள்ளத் தயங்குவதும், பெண்டாட்டி ஆசை இன்னும் மனசில் பூதமாய் உட்கார்ந்திருப்பது ராஜத்துக்குப் புரிந்து போனது.

காபி, தண்ணீர் கொண்டு போனால் கையைத் தொட்டு வாங்குவார். விஸ்வம் அருகில் இல்லாதபோது தலையைத் சிடவுவார். 'மருதாணி பத்தி இருக்கானு பார்க்கறேன்' என்று உள்ளங் கையைப் பிரித்துத் தடவுவார். 'தலை வலிக்கிறது—அமுக்கிவிடம்மா' என்று பணித்துவிட்டு இவள் குனிந்து அமுக்கும்போது மார்பகத்தை உற்றுப்பார்ப்பார். இன்னும் சில்லறை சில்லறையாய் என்னென்னவோ—

அப்பாவின் பாசம் அறியாத ராஜத்திற்கு வேதாசலம் இப்படி நடந்துகொள்வது முதலில் தப்பாய்த் தெரியவில்லை. ஆனால் வெகு விரைவிலேயே, இது தகப்பன் ஆசை அல்ல. பெண்டாட்டிக்கு அலையும் ஆசை என்று புரிந்தபோது பயந்து போனாள்.

இதை எப்படி நிறுத்துவது?

''அப்பா உன்னண்டை எத்தனை அன்பு வைச்சிருக்கார் தெரியுமாடீ? நேத்து ஓட்டல்லே சாம்புகிட்ட சொல்லிண்டு இருக்கார். 'பொண் இல்லேங்கற கொறையை ராஜம் தீர்த்துட்டா'னு. கேட்கறச்சே எனக்கு எத்தனை சந்தோஷமா இருந்தது தெரியுமாடீ-'' என்றும்,

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை, உனக்குப் பூ வாங்கித் தரணும்னு எனக்குக்கூட ஞாபகம் இல்லை; அப்பாதான் ஓட்டல்லே தூபம் காட்டி பூ போட்டப்புறம் 'இந்தாடா. இதுல பாக்கி பூ இருக்கு. ராஜத்தண்டை கொண்டு

கொடுன்னார்'' — என்றும், ஒன்றுமே தெரியாமல் சந்தோஷிக்கும் ஆத்மாவிடம் என்னவென்று ராஜம் சொல்லுவாள்?

வேதாசலமும் எமகாதகர்தான்.

தலைக்குத் தைலம் தேய்க்கும்படியோ, அல்லது காலை அமுக்கும்படியோ மாட்டுப் பெண்ணிடம் பிள்ளைக்கு எதிரில் கேட்க மாட்டார். ஒட்டலை அவனைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுத் திட்டமிட்டு வீட்டுக்குச் சுருக்க வரும் நாட்களில்தான் இந்தக் கூத்தெல்லாம்.

வேதாசலத்தின் உள்நோக்கம் புரிந்ததிலிருந்து அவர் தலையை தெருக்கோடியில் கண்டாலேயே பக்கத்துப் போர்ஷன் குழந்தைகளைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்துவிடுவாள் ராஜம்; இல்லையென்றால் பரக்கப் பரக்க வாசக் கதவை பூட்டிக்கொண்டு கோவிலுக்கோ, கடைக்கோ கிளம்புவாள்.

கூடுமானவரையில் தன்னால் அப்பாவுக்கும், பிள்ளைக்கும் ஆகாமல் போகக்கூடாது என்ற பைத்தியக்கார ஆசை அவளுள் இருந்ததாலேயே வாயைத் திறந்து புருஷனிடம் ஒன்றும் சொல்லாமல் இருந்ததோடு, முடிந்த மட்டும் மாமனாரிடம் தனியாக அகப்பட்டுக் கொள்ளாமலும் இருந்தாள்.

எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிக் கண்ணாமூச்சி ஆட முடியும்?

ராஜத்துக்குக் கல்யாணமாகி எட்டு மாசம் ஆனபோது வயிற்றில் தலைச்சன் பிள்ளைக்கு ஆறு மாசம்.

ஒரு நாள் ஒட்டலுக்கு விஸ்வம் புறப்பட்டுப் போய் விட்டான்—'சித்த மயக்கமா இருக்கு—நா அப்புறமா வரேன்' என்று வேதாசலம் வீட்டில் தங்கி விட்டார்.

கல்லா சாவியை மறந்து விட்டதால், பத்து நிமிஷத்தில் அதை எடுத்துச்செல்ல வீட்டுக்கு திரும்பியிருக்கிறான் விஸ்வம்.



ராஜம் குளித்துவிட்டு வந்து சமையல் அறைக்குள் கதவை சாற்றிக்கொண்டு புடவை உடுத்திக் கொள்வதையும், கதவு இடுக்கு வழியாய் அப்பா மனைவியை ரசிப்பதையும் நின்று கவனித்துவிட்டான்.

பிறகு?

பிறகு என்ன?

விஸ்வம் ஒரு ஆண்பிள்ளை என்று தட்சணமே நிருபித்து விட்டான். வாய் வார்த்தையாக ஒன்றுமே பேசவில்லை. எங்குப் போனானோ, எப்படிச் சுற்றினானோ அன்று மாலையே ஊருக்கு அந்தக்கோடியில் ஒரு அறையை வாடகைக்கு பேசின பின் பெட்டி, சாமான்களுடன் மனைவியை அழைத்துக்கொண்டு வெளியேறி விட்டான்.

'ஏண்டா?—என்று வேதாசலமும் கேட்கவில்லை—என்னன்னா?' என்று ராஜமும் வாயைத் திறக்கவில்லை.

மூலருக்குமே காரணம் தெரிந்ததுதான்.

கையில் இருந்த பணத்தைக் கொண்டு அத்தியாவசியமான பொருட்களை விஸ்வம் வாங்கினான்—அன்றாடம் ராஜம் உதவி செய்ய ஒரு டின் பட்டாணிசுண்டல், மசால் வடை, முறுக்கு இவைகளைச் செய்து பீச்சில் விற்க ஆரம்பித்தான். பண்டங்கள் ருசியாய், தரமாய் அமைந்ததால் வறுமையில்லாமல் குடும்பத்தை ஓட்டும் அளவுக்கு வருமானம் வந்தது. பணத்தில் பெண்டாட்டியை விஸ்வம் புரள விடா விட்டாலும், தன் அன்பால் அவளைத் தாங்கத்தான் செய்தான்.

லக்ஷ்மி பிறந்தாள். இரண்டு வருஷத்தில் வைதேகியும் சேர்ந்து கொண்டாள். காலம் இருக்கும் இருப்பில் இதற்கு மேல் வேண்டாம் என்று ராஜமும் விஸ்வமும் தீர்மானித்து புத்தியுடன் நடந்து கொண்டார்கள்.

கணவனுக்குத் தேவையான உதவிகளைச் செய்தபின், எஞ்சி நின்ற பொழுதில் அப்பளம், வடாம் இட்டுத் தன்னால் ஆன அளவில் வருமானத்தைக் கூட்டினாள் ராஜம்.

கடன் இல்லாமல், யார் தயவையும் எதிர்பார்க்காமல் ஏதோ திருப்தியாய் வாழ்ந்து வந்தவர்களின் நிம்மதி. சென்ற வருஷம் ஓர் அடைமழை பெய்த நாளில் பறிக்கப்பட்டது.

பதார்த்தங்களை மழையின் காரணமாய் விற்க முடியாமல் போனதால், இரவு வெகு நேரம் பீச்சில் சுற்றி அலைந்த, விஸ்வம், கிடைத்த வரைக்கும் போதும் என்று தீர்மானித்து வீட்டை நோக்கி நடக்க எண்ணி, சாலையைக் கடந்திருக்கிறான்.

பிசாசாய் வந்த காரை அவன் கவனிக்கவில்லை. இருளில் மழையில் இரண்டு தகர டின்களைத் தூக்கிக் கொண்டு சாலையைக் கடக்கும் விஸ்வத்தை வண்டியோட்டியும் பார்க்கவில்லை.

செம்மை அடி...

மழையைத் தனக்குச் சாதகமாய் வைத்துக் கொண்டு கார்காரன் நிற்காமல் ஓடிவிட்டான்.

விஸ்வத்தின் இரண்டு கால்களும் தொடைக்குக் கீழ் அறுபட்டுப் போயின. வலது கையில் மூன்று இடங்களில் எலும்பு முறிவு.

ஆறு மாசங்கள் ஜெனரல் ஆஸ்பத்திரியில் கிடந்தான் விஸ்வம். ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் நடையாய் நடந்து ஓய்ந்து, தேய்ந்து போனாள் ராஜம்.

பிள்ளைக்கு அடிபட்ட விபரம் கேட்டு ஓடிவந்தார் வேதாசலம். அழுதார், புலம்பினார். பண உதவி செய்ய முன் வந்தார்.



முதல் மாசம் அப்பாவிடம் முகம் கொடுத்துப் பேசாமல் வீம்பாய் இருந்தான் விஸ்வம். ஆனால் இந்த வைராக்கியமும் பிடிவாதமும் எத்தனை நாளைக்கு? கஷ்டத்திலும் வறுமையிலும் புரண்டு, மாசங்களைக் கடத்தினபோது வேண்டாம் என்று உதவியை ஒதுக்க தனக்கு யோக்யதை இல்லை என்று பூரணமாய் உணர்ந்து அப்பாவின் தரிசனத்தையும், அன்பையும், பண உதவியையும் வாய் திறக்காமல் ஏற்றுக் கொண்டான்.

ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்ததும் ஒன்றுக்கும் உபயோகமில்லாத விஸ்வத்தையும், ஐந்து, இரண்டு வயசு லக்ஷ்மி, வைதேகியையும், காப்பாற்றி குடும்பத்தை நடத்துவதற்குள் ராஜத்தின் முழி கண் பிதுங்கித்தான் போயின.

''எனத்துக்காக இங்கே கெடந்து ஒருவாய் சோத்துக்கு இல்லாமல் திண்டாடணும்? அங்கே வந்து என்கூட இருக்கப்படாதா? நான் சம்பாதிச்சு கொஞ்சம் சேத்து வைச்சிருக்கிறதெல்லாம் யாருக்கு? இது என்ன வைராக்கியம்?''— இவர்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் வெளிப்படையாய், தைரியமாய் வேதாசலம் பேச முற்பட்டு விட்டார்.

சரோஜா வீட்டில் முறுக்குச் சுற்றிவிட்டு களைத்துப் போய் அன்று ராஜம் வீடு திரும்பினபோது வேதாசலம் அங்கிருந்தார்.

விஸ்வத்தின் தலைமாட்டில் ஆறு ஆரஞ்சு பழங்கள், இரண்டு ஆப்பிள், ஒரு ஹார்லிக்ஸ் புட்டி; குழந்தைகள் கையில் பிஸ்கோத்துப் பொட்டலங்கள்.

அவர் புறப்பட்டுப் போன பிறகு மோட்டு வளையை பார்த்துக்கொண்டு வெகுநேரம் படுத்திருந்த விஸ்வம்

மெல்லச் சொன்னான்—''ஆயிரம் இருந்தாலும் அவர் என்னைப் பெத்தவர்; என் கஷ்டம் தாங்காம உருகிப் போறார். வயசான காலத்துல அவர்கிட்டே இருக்கறது தான் நியாயம்னு தோணறது. அவர் நம்ம கிட்டே சண்டை போட்டாரா? இல்லை வீட்டைவிட்டுத் தொரத் தினாரா? என்னத்துக்காக நமக்கு இந்த வீம்பு? நான் இப்படி ஆனப்புறம் அவரோட சேர்ந்து இருக்கிறதுதான் நமக்குச் சௌகரியம். அப்பா அழுது, மனசு கஷ்டப் படறது எனக்குத் தாங்கலை. நாளைக்கு வண்டியோட வரேன்னார். நான் யோசிச்சுப்பாத்துச் சரினுட்டேன் என்ன?''

பெண்டாட்டி ஒரு வேளைச் சோறுகூட சரியாக உண்ணாமல் அல்லாடுவது தன் மனசை உறுத்தினாலும், வாய்க்கு ருசியாய் நாலு பதார்த்தங்களும், சௌக்கிய மாய்ப் படுக்க இடமும் தனக்குத் தேவைப்படுவதை உணர்ந்து விட்டதாலுமே விஸ்வம் இந்த முடிவுக்கு வந்தி ருப்பதை ராஜம் புரிந்து கொண்டதால் பேசாமல் இருந்தாள்.

மறுநாள் பழையபடி மாமனார் வீட்டோடு குடி போயாகி விட்டது.

வருஷங்கள் ஆனதாலோ, இல்லை தனக்கும் குழந்தை கள் பிறந்து உடம்பு தேய்ந்து போனதாலோ, இல்லை பிள்ளை இப்படி ஆகிவிட்டானே என்று இடிந்து போன தாலோ, தெரியவில்லை, வேதாசலம் முதலில் சில நாட் களுக்கு அவர் உண்டு அவர் வேலை உண்டு என்று தன் வழிக்கு வராமல் இருந்தபோது, ராஜம் மகிழ்ந்துதான் போனாள்.

ஆனால், வெகு சீக்கிரததிலேயே பழைய குணங் களான தொடுவது, தடவுவது, கள்ளத்தனமாய்ப் பார்ப்



பது எல்லாம் தலைஎடுக்கவும் அவள் இருதலைக்கொள்ளி எறும்பானாள். நிம்மதியாய் இருக்கும் கணவனிடம் எதுவும் சொல்லவும் பயம்.

ராஜம் வாயை மூடிக்கொண்டு இருக்க இருக்க வேதாசலத்தின் ஆசை கொழுந்துவிட்டு எரியத் தொடங் கியது.

அன்று வெள்ளிக்கிழமை. விடியற்காலை எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு ஸ்வாமியிடம் கண் மூடி அவள் நின்றபோது பின்னால் அரவம் கேட்டுத் திரும்பினாள்.

வேதாசலம்—

கையில் பூப்பந்தோடு நின்றிருந்தார். அவள் கைகளில் அதைக் கொடுத்து இவள் வாங்க முயன்ற சமயத்தில் இறுக்க அணைத்து வாயில் முத்தமிட்டதும் ராஜம் பதறிப் போனாள்.

''நீங்க என் தோப்பனாருக்குச் சமம். வேண் டாம்ப்பா...அப்பா'' என்று தனித்து, புலம்பித் தன்னை விடுவித்துக் கொண்டு சமயற்கட்டுக்குள் ஓட்டமாய் ஓடிப் போனாள்.

அன்று மதியம் கணவனை உட்கார வைத்து அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டு, ''நாம்ப பழையபடி தனியா போயிடலாம்னா— இந்தாத்திலே இருக்க எனக்குப் பயமா இருக்கு...காரணத்தைக் கேட்கா திங்கோ...நாம் போயிடலாம்னா'' என்று ராஜம் அழுதாள்.

பதறும் மனைவியைக் கண்களை இறுக்கிப் பார்த் தான் விஸ்வம். தலைமுடியைக் [illegible]

22854

களைத் துடைக்கவில்லை, இதமாய் இரண்டு வார்த்தைகள் சொல்லவில்லை.

ஒன்றுமே சொல்லாமல் மௌனமாய்ப் பல நிமிஷங்களுக்கு இருந்துவிட்டுப் பின் பேசினான்.

''இப்ப என்ன நடந்துடுத்துன்னு நீ அழுது அமர்க்களம் பண்ணறடீ? நான்தான் ஒண்ணுக்கும்ப்ரயோஜனம் இல்லாதவனா ஆயிட்டேன். நம்ப குடும்பத்தைக் காப்பாத்தறது—ஆணுக்கு ஆணா நின்று காப்பாத்தறது—அப்பா தானே? அவரும் மனுஷர் தானே? அவர் இஷ்டப்படி நடந்துண்டா நீ என்ன தேய்ஞ்சா போயிடுவே?''

தணலை வாரிக் கொட்டின தினுசில் கணவன் பேசின உடனே தடக்கென தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள் ராஜம். சௌக்கியமான சாப்பாடு, வசதியான வாழ்க்கை இன்றைக்கு விஸ்வத்துக்கு ரொம்ப அவசியம். அவைகளை இனி எத்தனை உழைத்தும் அவனாலோ அவளாலோ கனவில்கூட அடைய முடியாது என்பதை, அவன் நிதர்சனமாய் உணர்ந்து விட்டதால், சூன்யமான பார்வையுடன் பேசிவிட்டு மீண்டும் ஆயாசத்துடன் படுக்கையில் சாய்ந்தபோது, ராஜம்வாய் வார்த்தையாய்ப் பதில் ஏதும் பேசவில்லை. ஆனால், அந்த வெள்ளிக் கிழமை ராத்திரி தான் கட்டிய புடவை தலைப்பால் கழுத்தை சுருக்கிக்கொண்டு ராஜம் செத்துப் போனாள்.

□

# சண்டை

அவன் அன்றைக்கு வீட்டுக்கு வரும்போது அவள் முகத்தை ஒன்றரை முழத்துக்குத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்று அவர்களுக்கு மாச வெட்டிங் டே. அதாவது அன்றோடு அவர்களுக்குத் திருமணமாகி மூன்று மாசம் முடிகிறது.

கல்யாணம் நடந்த அன்றே அவனும் அவளும் நிர்மானித்து விட்டார்கள், வீக்லி வெட்டிங் டே, மன்த்லி வெட்டிங் டே என்று முதல் ஒரு வருடம் கொண்டாடி ஒரு லட்சிய தம்பதியாய் இருக்க வேண்டும்என்று. அதன் படி திருமணமான புதன்கிழமை ஒவ்வொரு வாரம் வரும் போதும் சினிமா, ஹோட்டல் என்று உல்லாசமாகக் கழிப்பார்கள். மாசத்திருமண நாள் அன்று அவளுக்கு அவன் பரிசுப் பொருட்கள் வாங்கிச் சந்தோஷிப்பான். முதல் மாச வெட்டிங் டே அன்று அவளுக்கு அமெரிக்கன் ஜார்ஜெட் புடவை. இரண்டாம் மாச தினத்தில் முதலைத் தோல் பை. இப்படி—

இன்று என்ன வரப்போகிறது என்று காலையிருந்தே அவள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஈவினிங் ரெடியாக இரு—நான் வந்ததும் வெளியில் போகலாம்—அங்கு உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ்'' என்று அவன் காலையில் சொல்லிச் சென்றான்.

ஐந்திலிருந்து இவளும் தயாராய் இருக்கிறாள். அவனைத்தான் காணோம்.

அலுவலகத்துக்குக்கூட போன் பண்ணி விட்டாள். மதியம் லீவு போட்டுவிட்டு போனவன் தானாம்.

எங்கே போனார்?

நேரம் ஆக ஆக அவளுக்குக் கற்பனை எதுவும் தோன்றாததால், ஏமாற்றம் மட்டும் எழ முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

அவன் ஐ. ஐ. டி. யில் படித்து, அகமதாபாத் கல்லூரியில் எம். பி. ஏ. ஐ திறமையுடன் பாஸ் செய்தவன்.

'என்னிடம் வேலைக்கு வா—' என்று எத்தனையோ கம்பெனிகள் கெஞ்சியதில் ஓர் இன்டர் நாஷனல் கம்பெனியை இவன் தேர்ந்தெடுத்தது, அதன் தென்னிந்திய அலுவலகத்துக்கு கன்ஸல்டண்டாகச் சேர்ந்தான்.

சென்னையில் வாசம்.

இரண்டாயிரம் ரூபாய் சம்பளம், கார் நுங்கம்பாக்கத்தில் வீடு என்று இருபத்தி மூன்றாம் வயசில் அவனுக்கு யோகம் அடித்தது.

நான்கு மாதங்களுக்கு முன் பம்பாய்க்கு வேலையாய் சென்றவன், அங்கு எம். எஸ். ஸி. படித்துவிட்டு, தனியார் நிறுவனமொன்றில் ரிசர்ச் அஸிஸ்டெண்டாக உதவி புரியும் அவளைச் சந்தித்தான்.

மறுநாள், மறுநாள், அதற்கும் அடுத்த நாள் என்று சேர்ந்தாற் போல அவனும் அவளும் சந்தித்துக்கொண்ட போது, தாங்கள் ஒருவர்மேல் ஒருவர் தீவிரக் காதல் கொண்டிருப்பதாக உணர்ந்தனர்.

பத்து நாட்களுக்குள் பம்பாயில் இருந்த அவளது பெற்றோரை அவன் சந்தித்தான். 'உங்கள் மகளை மணக்க ஆட்சேபணை உண்டா?' என்றான்.

பம்பாயின் நாகரிகக் கூட்டத்தைச் சேர்ந்த அவர்களுக்கு இந்தச் சம்பந்தம் பிடித்துப் போனது.

'மே காட் ப்ளெஸ் யூ சில்ரன்' என்று முதல் சந்திப்பிலேயே 'தொட்' டென்று வாழ்த்தைக் கையில் தந்து விட்டனர்.

அவனுக்கு அம்மா கிடையாது—அப்பா மட்டும் தான்—டெல்லியில் அரசாங்க அதிகாரி. அவன் ஒரே பையன்.

சேதி தெரிந்ததும் 'ஆல் தி பெஸ்ட் மை பாய்' என்று அவரும் வாழ்த்தைத் தெரிவித்து விட்டார்.



கல்யாணம் பம்பாயில். இரண்டாம் நாளே சென்னைக்கு அவனும் அவளும் பறந்து வந்து புதுக்குடித்தனத்தைத் தொடங்கினார்கள்.

முதல் இரண்டு மாதங்களை வீட்டை அலங்கரிப்பதிலும், அதற்குத் தேவையான பர்னிச்சர், கர்ட்டன் வாங்குவதிலும் புது நண்பர்கள் சேகரிப்பதிலும், வெளியில் விருந்து கேளிக்கைகளுக்குப் போவதிலும், ப்யூட்டி பார்லர்களுக்குப் போய் அழகைப் பராமரிப்பதிலும் அவள் செலவழித்தாள்.

மூன்றாம் மாசம் இதெல்லாம் அவள் பொழுதை நிரப்ப முடியாமல் போனதால், மறுபடி வேலைக்குப் போக வேண்டும்' என்று அவளே தீர்மானித்து உடனடியாய் மும்முரமாய் வேலை தேடியதில் மனசுக்குப் பிடித்த தினுசில வேலை கிடைத்து விட்டது. வருகிற முதல் தேதியிலிருந்து போக வேண்டும்.

மணி ஏழரையைத் தாண்டியதும் அவளின் கோபம் தாங்க முடியாததாகப் போயிற்று.

'ஹல் இர்ரெஸ்பான்ஸிபிள்'—ஒரு போன் பண்ணக் கூடாது? அப்படி என்ன வேலை? என்னைக் காக்க வைத்து விட்டு?'

மேலும் அரை மணி ஆன சமயத்தில் அவனின் வெள்ளை பியட் காம்பௌண்டுக்குள் நுழைந்தது.

அவள் மாடி பால்கனியைவிட்டு இறங்கவேயில்லை.

அவன் மாடி ஏறி வந்தான். ப்ரீஃப் கேஸைப்படுக்கையில் போட்டுவிட்டு இவள் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

கால் ஷூவைக் கழட்டாமல் மேஜைமேல் தூக்கிப் போட்டுக் கொண்டான்.

'கும்'மென்று வெளிநாட்டு விஸ்கி வாசனை.

அவள் கோபமாக இருப்பதையோ, அவளைக் காக்க வைத்துவிட்டுத் தாமதமாக வந்ததையோ அவன் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

''மிர்சந்தானி வந்திருந்தான்—அவனும் ஆஷாவும் பிரிந்து விட்டார்களாம்—தே வாண்ட் டிவோர்ஸ்'' என்றான் மெல்ல.

அவன் சொன்ன விஷயம் அவளுக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது.

ஆஷா மிர்சந்தானியை அவளுக்கு நன்றாகத் தெரியும். மிர்சந்தானிக்குப் பங்களூரில் வேலை ஆஷா பம்பாயைச் சேர்ந்த பணக்காரி. ஐந்து மாசங்களுக்கு முன்னால் காதலித்து மணம் செய்து கொண்டார்கள்.

அவர்களா பிரிந்து விட்டார்கள்!

தன் கோபத்தைக்கூட மறந்து விட்டாள்—

'வாட்?'

'யா—மிர்சந்தானி மத்தியானம் ஆபீஸுக்கு வந்திருந்தான்— மூஞ்சியும் முகரையும் பார்க்க சகிக்கவில்லை. காலை நேரத்திலே நல்ல குடி. 'உன்னோடு பேசவேண்டும்'என்று அழுதான். அவனோடு ஹோட்டல் ரூமில்தான் இருந்தேன். புவர் மேன்—''

''என்ன சமாசாரமாம்?''

''ஒரு மாசமாக இரண்டு பேருக்கும் காரணமில்லாமல் சண்டை எழுந்தது பெரிதாய்ப் போயிருக்கிறது. இனி தாங்க முடியாது என்று பிரிந்து விட்டார்கள்—''

''சண்டைக்கு என்ன காரணம்?''

''கேட்டால் சிரிப்பு வரும். போன மாசம் ஆஷா காலில் ஏதோ கட்டி என்று ஸ்கின் ஸ்பெஷலிஸ்டிடம் போயிருக்கிறாள் மிர்சந்தானியும் கூடப் போயிருக்கிறான். தொடையில் இருக்கிற கட்டியைப் பார்ப்பதற்காக டாக்டர் 'பிளீஸ் ஆஸ்க் யுவர் யங்கர் பிரதர் டு கோ அவுட்' என்றாராம். 'என் தம்பியா? இவரா'— என் ஹஸ்பெண்ட் டாக்டர் என்று ஆஷா டாக்டரைத்திருத்தி இருக்கிறாள்—அந்த டாக்டர் சும்மா இருக்கக்கூடாதோ?



''அடடே—அப்படியா? பார்த்தால்ஒல்லியாகஉங்கள் தம்பிமாதிரி இருந்தார்? அதுதான் கேட்டேன்—ஸாரி' என்று விளக்கம் வேறு கொடுத்திருக்கிறார். வீட்டுக்கு வரும்போதே ஆஷா சண்டை போடத் தொடங்கி விட்டாளாம்—'அதுஎப்படி அந்த டாக்டர் அப்படி இன்ஸல்ட் பண்ணலாம்?' என்று. மிர்சந்தானி என்ன பண்ணுவான்? நீ குண்டு, நான் ஒல்லி அதனால் சும்மா விளையாட்டுக்கு கேட்டிருப்பார்—டேக் இட் ஆஸ் எ ஜோக் என்று சமாதானம் செய்திருக்கிறான்.

ஆனால் ஆஷா விடவில்லை. மறுநாள் காலையிலிருந்து டிபன், சாப்பாடு எல்லாம் இரண்டு மடங்காகச் சாப்பிட வேண்டும் என்று மிர்சந்தனியை வற்புறுத்தத் தொடங்கினாளாம். ஏதோ தமாஷ் என்று இரண்டு நாட்கள் பொறுத்தவனுக்கு மூன்றாம்நாள் கோபம் வந்து விட்டதாம். 'எனக்கு அதிகமாகச் சாப்பிட்டால் வயிறு கெட்டுப் போகும். என்னால் பெருக்க முடியாது; நீ வேண்டுமானால் இளைக்கப் பார்' என்று சொல்லி இருக்கிறான்.

அதிலிருந்து சண்டை பெரிதாகி விட்டதாம்—'யூ டோண்ட் கேர் அபௌட் மீ' என்று ஆஷா கத்த, இவன் கத்த விரிசல் பிளவாகிவிட்டது. அதன் பிறகு தொட்டால் குத்தம். பதினைந்து இருபது நாட்கள் அப்படியே இருந்து பிறகு பிரிவதுதான் நல்லது என்று முடிவு எடுத்து விட்டார்களாம்.

''என்னடா பாவி—இத்தச் சின்ன விஷயத்திற்கா சண்டை?' என்று அவனைக் கேட்டேன். ''சின்னதில் ஆரம்பித்தது எதுவரைக்கும் போனது என்று உனக்குத் தெரியாது. எங்கள் குடும்பத்தைச் சண்டையில் இழுத்தாள்; நான் வேறு பெண்ணை மனசில் நினைத்துக் கொண்டு இருப்பதாக கூத்தடித்தாள். ஓ! யூ டோண்ட் நோ—ஆஷா அசிங்கமாக இவனைத் திட்டவே கோபம் வந்து அவளை அடித்து விட்டானாம். அவள் அப்பா

வீட்டிற்கு உடனே கிளம்பிப் போய்விட்டாள். மறுநாளே வக்கீல் நோட்டீசும் வந்துவிட்டது. எதற்காக ஆஷா இப்படி ஒன்றுமில்லாததைப் பெரிது செய்தாளோ! நல்ல பெண் மாதிரி இருந்தாள்—உள்ளே எத்தனை விஷம்?''

அவன் பேசி முடித்து விட்டான்—அவளுக்கு அவன் ஆஷாவைத் தாக்கிப் பேசியது கோபத்தை மூட்டியது.

''உங்களுக்கு மிர்சந்தானி பக்கம் தானே தெரியும்? ஆஷாவை விசாரிக்காமல் அவளைப்பத்தி மட்டமாகப் பேசுவது தவறு—ஷி ஈஸ் எ நைஸ் கேர்ல்—இவன் குடித்து விட்டு அவளை என்னவெல்லாம் பேசினானோ? கையை நீட்டி அடிக்கிறவன் ஒரு ஆண்பிள்ளையா?...சே டிஸ்கஸ்டிங்''—

''அடித்தால் என்ன தவறு? அவள் கண்டபடி பேசலாம் என்றால் இவன் ஒரு தட்டு தட்டினால் என்ன?'' அவன் மிர்சந்தனிக்கே பரிந்து கொண்டு வந்தான்.

''வாட்! ஒரு தட்டு தட்டினால் என்னவா? மேல் சாவனிஸம் பேசுகிறதா? ஆண் பிள்ளை என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அதற்கு அதிகாரம் உண்டா? தவறு பண்ணுவதே மென்தான்—இதில் வாய் வேறு!'' அவள் எதிர்த்து வாயாடினாள்.

இப்போது அவனுக்குச் சீற்றம் எழுந்தது.

''ரொம்ப உனக்குத்தான் தெரியும் என்று பேசாதே. தப்பு ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிகம் செய்கிறார்கள்—ஆண்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? டோண்ட் ஜெனரலைஸ் ஐ ஸே''—அவன் கத்தினான்.

''கத்தி விட்டால் சரியாகிவிடுமா? இன்றைக்குக்கூட நீங்கள் தவறு செய்திருக்கிறீர்கள்—ஐந்து மணிக்கு வருவதாகச் சொல்லி என்னைக் காக்க வைத்ததுமில்லாமல் எட்டு மணிக்கு வந்துவிட்டு மரியாதைக்கு ஒரு ஸாரி கிடையாது என்ன பெரிய பேச்சு வேண்டியிருக்கிறது?''—



''இங்கே என்ன தலை போகிற காரியம்? சொன்னால் சொன்னபடி வந்து சேருவதற்கு! ம்? மிர்சந்தானி மனசு உடைந்து வந்திருந்தான்—நண்பன் என்று பேர் எதற்கு? ஒரு மெண்டல் கம்ஃபர்ட் கொடுக்க வேண்டாம்? உனக்கு எங்கே அதெல்லாம் புரியப் போகிறது?''

''ஆல்ரைட் — உங்களுக்கு என்னைவிட உங்கள் பிரெண்ட் முக்கியம்—ஓ கே, ஆனால் காத்துக்கொண்டு இருக்காதே; நான் வர லேட்டா ஆகும் என்று ஒரு போன் பண்ணத் தெரியாது? அந்த அளவுக்குக்கூட மரியாதை கிடையாதா?''

கோபத்தில் அவன் கண்கள் சிவந்து போயின—ஷட் அப்—எனக்கு மரியாதையை நீ கற்றுக் கொடுக்க வேண்டாம் — குட்னஸ்! மனிதனின் கஷ்டத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேனே—என்னைப் போல மடையன் உண்டா?''

''யா—ஐ அக்ரி. மனைவிக்கு மரியாதை கொடுக்காத உங்கள் சிநேகிதன் மாதிரித்தானே நீங்களும் இருக்க முடியும்?''

''ஷட் அப். அவனை எதற்காக நம்ம ஆர்க்யுமெண்டில் இழுக்கிறாய்? உனக்கு நான் ரொம்ப இடம் கொடுத்தது தவறு...அதான் துள்ளுகிறாய்.''

''நீங்கள் ஒரு ஷட் அப் சொன்னால் எனக்குப் பதிலுக்கு நூறு தடவை ஷட் அப் சொல்லத் தெரியும். சொல்லட்டுமா?—ஆத்திரத்தில் அவள் முகம் விகாரமாய் இருந்தது.

அவன் 'பட்'டென்று தன் தலையில் அடித்துக் கொண்டான்.

''நோ வொண்டர்—மிர்சந்தானி இப்படி பைத்தியம் போல ஆகி விட்டான்—உன் மாதிரியும் ஆஷா மாதிரியும் மனைவி ரூபத்தில் பிசாசுகள் இருந்தால் மனிதன் நிம்மதியாகவா இருக்க முடியும்? நௌ வில் யு ப்ளீஸ் கெட் அவுட் ஆப் திஸ் ரூம் அண்ட் லீவ் மீ அலோன்?''

அவளைப் பிசாசு என்று அழைத்து, 'கெட் அவுட்' என்றும் சொன்ன மாத்திரத்தில் அவள் கோபம் அதிகமாக, கண்கள் பளபளக்க, நாசி துடிக்கத் தொடங்குகிறது. அவள் ஆங்காரமாய்க் கத்துகிறாள்.

''நானா பிசாசு? நீ? கல்யாணம் ஆகி மூன்று மாசம் ஆவதற்குள் நான் பிசாசா! என்ன சொன்னீர்கள் 'கெட் அவுட்' என்று தானே? ஓ. கே. ஐ வில் கோ. உங்களை ஜெண்டில் மேன் என்று நம்பினேன்—பட் யூ ஆர் எ ப்ரூட்—''

இவள் அழுதுகொண்டே எழுந்து அறைக்கு வெளியே ஓடுகிறாள்—அவன், டீபாயைக் காலால் உதைத்துவிட்டு, அறைக் கதவைப் படீரென்று அறைந்து மூடுகிறான்.

பெரியதாக வளர்ந்து விடப்போகும் ஒரு சண்டை அன்றுஅந்த வீட்டில் சின்னக் குழந்தையாய்ப் பிறந்தது.

❑

22854
3944788